259

த வெளியீடு

விக்கிரம - கார்த்திகை

# சக்தி

259
3/2
OFFICE OF THE REGISTRAR ...
17 JUL 1941
MADRAS



மலர் - 3 இதழ் - 5

அணா நான்கு

# அறிவிப்பு

☆

நமது காரியாலயம் நாளது 1940ஞு நவம்பர்மீ 20உ முதல் சென்னை ஜார்ஜ் டவுன், முத்துமாரி செட்டித் தெரு, 46-வது நெ. (46, MUTHUMARI CHETTI ST.) கட்டிடத்திற்கு மாற்றுவதால் காரியாலயத்திற்கு எழுதும் கடிதங்கள், மணியார்டர் முதலியவைகளை மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.

☆

சக்தி காரியாலயம்

# NOTIFICATION

WE BEG TO INFORM OUR CONSTITUENTS, FRIENDS AND WELL-WISHERS THAT ON

## 20TH NOVEMBER 1940

WE ARE SHIFTING TO A MORE SPACIOUS

PREMISES:

**46, MUTHUMARI CHETTY STREET**
**GEORGE TOWN :: MADRAS**

★

## SHAKTI PRESS LIMITED

PRODUCERS "THE ART PRESERVATIVE OF ALL ARTS"

தந்தி : "GOODWILL"　　　த. பெ. நெ. 113　　　டெலிபோன் : 2724.

## ஸௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்

**80, செம்புதாஸ் தெரு,　　　ஜியார்ஜ் டவுன்,　　　மதராஸ்**

பிராஞ்சுகள் :

**கல்கத்தா, காரைக்குடி, கோயமுத்தூர், திருச்சினுப்பள்ளி**



டைப்ரைட்டர்

**'நாமென்'**

**'ஐடியல்'**

**'எரிகா'**

★

**போர்ட்டபிள் இங்கிலீஷ் தமிழ்**

**டைப்ரைட்டர்கள்**

இன்னும்

இரும்பு சாமான்கள், திரணைக் கம்பி, சதுரம், பட்டா, கால்வனைஸ்டு தகடுகள், தண்ணீர்ப் பம்புகள், அம்கோ பாட்டரிகள், பெயிண்ட் தினுசுகள், டால்மியா சிமெண்ட், கலர் சிமெண்ட், ரப்பர் கேபிள், காப்பர் வொயர், மின்சார மீட்டர், பல்புகள் முதலிய எல்லா சாமான்களும்

**'கில்பர்ட்'**

**அமெரிக்கன் அழகிய விசிறிகள்**

**சீலிங் விசிறிகள்**

**டேபிள் விசிறிகள்**

★


கில்பர்ட்

முதலிய எல்லாம் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் சகாய விலைக்குக் கிடைக்கும்

### சந்தா விகிதம்

உள் நாடு

| | | |
|---|---|---|
| வருடச் சந்தா | ... ரூ. | 3 0 0 |
| 6 மாதம் | ... ,, | 2 0 0 |
| தனிப்பிரதி | ... ,, | 0 4 0 |

| | பர்மா | மலேயா |
|---|---|---|
| வருடச் சந்தா | ரூ. 4 0 0 | ரூ. 5 00 |
| 6 மாதம் | ,, 2 4 0 | ,, 2 12 0 |

சிலோன் 25 சதம்

மாதிரிப் பிரதி வேண்டுவோர் தபாற் செலவு சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

### "சக்தி" மாத வெளியீடு

### விளம்பர விகிதம்

அட்டை

| | | |
|---|---|---|
| 2-வது பக்கம் | ... ரூ. | 20 |
| 3 ,, | ... ,, | 20 |
| 4 ,, | ... ,, | 30 |

உள் பக்கங்கள்

| | | |
|---|---|---|
| 1 பக்கம் | ... ரூ. | 15 |
| ½ ,, | ... ,, | 7-8 |

மற்ற விளம்பர விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர், 'சக்தி',
46, முத்துமாரி செட்டித் தெரு,
சென்னை.

---

## ஆசிரியர் அறிவிப்பு

'சக்தி'க்குக் கதை, கட்டுரை, கவிகள் அனுப்புவோர், காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்ப வேண்டுகிறோம்.

கதை, கட்டுரை, கவிகளைத் திருத்தவோ, கூட்டவோ, குறைக்கவோ, மாற்றவோ ஆசிரியருக்குப் பூரண உரிமையுண்டு.

பிரசுரிக்கப்படாத கதை, கட்டுரை, கவிகளைத் திரும்பப் பெற வேண்டுவோர், தங்கள் விஷயத்தை அனுப்பும்போது கூடவே போதிய தபால் தலை வைத்து அனுப்ப வேண்டும்.

ஆசிரியர்,
'சக்தி'

# பொருளடக்கம்


காலச் சுழல் ... 193
வ. ரா.
—ப. ராமஸ்வாமி ... 195
உப்பிலே சூட்சுமம்
டி. எப். ஆர். மஆலிசாஹிப் ... 197
முகப்புச் சித்திரம்: ஏடன் துறைமுகத்தில் ... 199
முல்லைக் கன்னி
ஆர். திருஞானசம்பந்தம் ... 200
சிறு கதை: அவள் கூந்தல்
'ஜேயார்' ... 201
மொழி வளர்த்த காக்ஸ்டன்
'ஆனந்தன்' ... 203
பாரத சக்தி மஹாகாவியம்
சுவாமி சுத்தானந்த பாரதியார் ... 205
நடிகருக்கு
தி. ஜ. ர. ... 209
மன்னன் புதைகுழி முன்
'இலக்கிய மாணவன்' ... 210
குற்றச் சட்டம்
லியோ டால்ஸ்டாய் ... 212
சர்வாதிகாரி ஸ்டாலின்
'ஸாரலி' ... 213
உடம்பும் மருந்தும் ... 215
யுத்தக் கருவி: சோதனை விளக்கு
'நாதன்' ... 216
அழகு
சங்கு சுப்பிரமணியன் ... 218
காந்தி வாக்கு ... 219
அண்ணனும் அண்ணியும் ... 221
பேரும் புகழும்
க. நா. சுப்ரமண்யம் ... 222
காலத்தேர்
சுவாமி சுத்தானந்த பாரதியார் ... 225
நடராஜா
வத்தலக்குண்டு ஆர். ராஜமய்யர் ... 229
பாட்டு: மதுராயி
'பூ' ... 230
பறித்த பூக்கள் ... 231
எனது முதல் கேஸ்
மஞ்சேரி எஸ். ஈச்வரன் ... 233
ஆளுக்குப் பாதி
அழ. வள்ளியப்பன் ... 235
புத்தக உலகம் ... 237
பாலர் பாட்டு: ஊகமுள்ள காகம்
தே. வி. ... 238
,, கதை: கந்தல் தாவணி
'மாமி' ... 239
இந்த இதழில் ... —



7 JUL 1941
MADRAS

ஆயிரம்

மணி

காரண்டி




எலிக்ஸ்

உங்களுக்குத் தேவையான எல்லா விதமான எலெக்ட்ரிக் சாமான்களும் எம்மிடம் கிடைக்கும்:




தி மெட்ராஸ் எலெக்ட்ரிகெல்ஸ் லிமிடெட்
118, அரமனைக்காரத் தெரு, சென்னை.

இன்ஷ்யூர் செய்யவும்
ஏஜென்ஸி பெறவும்

# ஹிந்துஸ்தான்

முன்னேற்றப் புள்ளி விவரம்:

| | | | |
|---|---|---|---|
| அமுலிலுள்ள பாலிஸிகள் | .... .... | ரூ. 17 கோடி | 02 லக்ஷத்துக்குமேல் |
| ஆயுள் நிதி | ... ... .... | ரூ. 3 ,, | 09 ,, |
| மொத்த ஆஸ்தி | .... .... .... | ரூ. 3 ,, | 56 ,, |

## ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷியூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

தலைமை ஆபீஸ்:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
ஸுரேந்திரநாத் பானர்ஜி ரோட்,
கல்கத்தா

கிளை ஆபீஸ்:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
107, அரமனைக்காரத் தெருவு,
மதருஸ்

# சக்தி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

மலர் ௩ : இதழ் ௫ விக்கிரம — கார்த்திகை


# காலச் சூழல்

சென்ற மாதம் பிரமாதமான ஒரு கண்டத்தை இந்தியா தாண்டியிருக்கிறது. இந்தியா மட்டுமல்ல; பிரிட்டிஷ் சாம்ராஜ்யமேதான். புனிதன் காந்தி எண்ணிய உண்ணுத் தவம் ஒத்தி போடப்பட்டது அற்ப சம்பவ மல்ல. அதுமட்டும் நிகழ்ந்திருந்தால், என்ன விளைந்திருக்குமோ? ஏது நடந்திருக்குமோ? அதை உன்னவும் மனம் அஞ்சுகிறது. "நான் ஆண்டவன் கைகளில் இருக்கிறேன்" என்று சொல்லும் காந்தி, அந்தர்யாமியின் கட்டளை வந்தால், இன்றும் அத் தவத்தைப் புரியச் சித்தமா யிருக்கிறார். ஆண்டவன் கைகளில் இருக்கும் காந்தியை ஆண்டவன் காப்பாற்றுவார். ஆனல், இந்தியாவை இந்த நெருக்கடியில் காப்பாற்றத் தலைவன் காந்தி நமக்கு வேண்டும். காந்தி, வாழ்க!

## வாழ்வதா, சாவதா?

செயலற்று மக்கி மடியவேண்டிய நிலைமைக்குக் காங்கிரஸைத் துரத்தி விட்டது சர்க்கார். அதனுல்தான் காங்கிரஸ் இன்று சத்தியாக்கிரகம் புரியவேண்டிய நிலைமைக்கு வந்திருக்கிறது. விநோபா பாவேக்குப் பிறகு, பண்டித ஜவஹர்லால் நேரு, ராஜாங்கசபை அங்கத்தினர் ஸ்ரீ பியானி, மத்திய மாகாண மாஜி மந்திரியும் ஹரிஜனத் தலைவருமான ஸ்ரீ அக்னிபோஜர், சர்தார் படேல், சென்னை மாஜி மந்திரி டாக்டர் ராஜன் முதலிய இன்னும் பல தலைவர்கள் சிறைப்பட்டு வருகிறார்கள். இந்தியப் பாதுகாப்பு விதிகள் என்ற அடக்குமுறைச் சட்டம் மகா தீவிரமாகப் பிரயோகமாகத் தொடங்கி யிருக்கிறது. இந்திய அரசியல் நெருக்கடி என்ற வியாதிக்கு, இந்தியப் பாதுகாப்புச் சட்டமா பரிகாரம்? அரசியலில் மூச்சு முட்டிப்போகும் நிலைக்குத் துரத்தப்பட்டு விட்ட இந்திய தேசீயம், வாழ்வதா சாவதா என்ற போராட்டத்தி லிறங்கியதற்கு இதுவா பரிகாரம்? இந்தியாவிலே யுத்த முயற்சியைச் செழிப்புறச் செய்ய இதுவா வழி? சர்க்காரின் இந்தப் புத்தி விபரீதம் எப்போது தான் தெளியுமோ?

## 'மந்திரச் செடி'

மந்திரவாதியின் மாங்கன்று மூன்றே முக்கால் நாழிதான் இருக்குமென்று கிராமத்தார் சொல்வார்கள். அந்த மாதிரி ஒரு வேடிக்கை சென்றமாதம் நடந்தது. நேராகவோ மறைமுகமாகவோ யுத்த முயற்சிக்குப் பாதகமான எதையும் இந்தியப் பத்திரிகைகள் பிரசுரிக்கலாகாதென்று, ஓர் விசித்திர உத்திரவை இந்திய சர்க்கார் பிறப்பித்தார்கள். உடனே, 'ஹிந்து' ஆசிரியர் ஸ்ரீ கே. சீனிவாஸன் தலைமையில், ஓர் பத்திராசிரியர் மகாநாடு டில்லியில் நடைபெற்றது. 'ஸ்டேட்ஸ்மென்' ஆசிரியர் ஸ்ரீ ஆர்த்தர் மூர் போன்ற ஆங்கிலோ இந்தியப் பத்திராசிரியர் தொடங்கி, தீவிர தேசிய வாதியான ஸ்ரீ மகாதேவ தேசாய் வரையில் பல திறப்பட்ட பல பிரபல ஆசிரியர்களும் அதில் கலந்து கொண்டார்கள். மகாநாடு நடந்து கொண்டே யிருக்கையில், சர்க்கார் தங்களுடைய விசேஷ உத்திரவை ரத்து செய்து விட்டார்கள். மகாநாடு ஓர் நிரந்தரக் கமிட்டியை நியமித்துள்ளது. பத்திரிகைகளின் விஷயத்தில் அந்தக் கமிட்டியின் ஆலோசனைப்படி நடக்கவும், இது மாதிரியே மாகாணங்களிலும் கமிட்டிகள் நிறுவி அவற்றின் ஆலோசனைப்படி மாகாண சர்க்கார்கள் நடக்கும்படி செய்யவும் இந்திய சர்க்கார் இசைந் திருக்கிறார்கள். இது நல்ல காரியந்தான். ஆனல், காய்ச்சலெடுத்தவனுக்கு 'ஐஸ்' வைத்துக் கட்டினுல், வெப்பம் தணியும்; வியாதி போய்விடாது. இந்திய அரசியல் வியாதிக்கும் சர்க்கார் பரிகாரம் தேடினுல்தான், இம்மாதிரி சங்கடங்களெல்லாம் பூர்ணமாய்த் தீரும்.

## பகைவர் உற்பத்தியா?

பண்டித ஜவஹர்லால் கைதியானர் என்ற செய்தி வந்ததும், சென்னையில் சில கல்லூரிகள், கலாசாலைகளின் மாணவர்கள், 'வேலை நிறுத்தம்' செய்தார்கள். உடனே சென்னை சர்க்கார் ஆத்திரங் கொண்டு, இந்த மாணவர்கள் யார் யாரோ அவர்களுக்கெல்லாம் சர்க்காரிலே உத்தியோகம் கிடையாதென்று பிரகடனப் படுத்திவிட்டது. இந்தப் பையன்களின் ஜாபிதாவை அந்தந்தக் கல்லூரி, கலாசாலைகளின் நிர்வாகிகள் தயாரித்து அனுப்பும் படியும் உத்திரவு போயிருக்கிறதாம். ராஜாஜி, கனம் சாஸ்திரியார் போன்ருரெல்லாம் ஆணித்தரமான பல காரணங்கள் காட்டி, சர்க்காரின் இந்த நடவடிக்கையைக் கண்டிக்கிருர்கள். சர்க்காரின் நன்மையையே நோக்

கினுலும், இந் நடவடிக்கை அறி வுடைமை யல்ல. சிறுவர்கள் எதோ மனக் கிளர்ச்சியால் ஒரு நாள் புரிந்துவிட்ட இச் செயலுக் காக, அவர்களைச் சர்க்காரின் நிரந் தரப் பகைவர்களாகச் செய்து கொள்ளுவது என்ன புத்திசாலித் தனம்! "ஆயிர மாயிரக்கணக் கான பி. ஏ. க்கள் வேலையில்லாமல் இப்போதே திண்டாடுகிறார்களே, அவர்களுக் கெல்லாம் வேலைதேடிக் கொடுத்த பிறகல்லவா நமக் கில்லை யென்று சர்க்கார் சொல்லவேண் டும்" என்று அந்த வாலிபர் சிலர் சொல்லுகிறார்களே, அதற்குத் தான் என்ன பதில்?

## சர்க்கார் ஏமாற்றம்

பிரிட்டன், தினம் ஒன்றுக்கு 15 கோடி ரூபாய் போரில் செலவழிக் கிறது. இந்தியாவும் அதற்கு உதவு வதாக உலகத்துக்கு விளம்பரம் செய்ய வேண்டுமே, அதற் காக, நாலு மாதத்தில் இரண்டு கோடி ரூபாய் புதிய வரிகளால், சேரத்தக்க இந்திய 'பட்ஜெட்டைத்' தயாரித்தது இந்திய சர்க்கார். அதை 53-ஓட்டுகளுக்கு எதிரே 55-ஓட்டு களால், காங்கிரஸ்காரரும் வேறு ஒன்றிருவரும் சேர்ந்து, இந்திய அசெம்பிளியிலே தோற்கடித்துவிட் டார்கள். ஜின்னா லீக் நடுநிலைமை வகித்தது—நரி வலமோ இடமோ போகா விட்டாலும், மேலே விழுந்து பிடுங்காம லிருப்பதே பெரிய காரிய மல்லவா, அதைப் போல.

(1) சகல வருமான வரிகள் மீதும் 25 சத விகிதம் உபரிவரி விதிப்பது;

(2) தபால் உறைகளின் ஆரம்பக் கட்டணத்தை உள் நாட்டுக்கு ஒன்றே காலணாவாகவும், பர்மா வுக்கு இரண்டணா வாகவும், ஏகாதி பத்தியத்திலுள்ள இதர நாடு களுக்கு மூன்றரை அணாவாகவும் உயர்த்துவது;

(3) புஸ்தகச் சிப்பங்களின் ஆரம்பத் தபால் கட்டணத்தை 5 தோலா வரையில் முக்காலணா என்று உயர்த்துவது;

(4) உள் நாட்டு சாதாரணத் தந்திக் கட்டணங்கள் மீதெல்லாம் ஒரு அணா உபரிக்கட்டணம் விதிப் பது; அவசரத் தந்திகள் மீதெல் லாம் இரண்டணா உபரிக் கட்ட ணம் விதிப்பது;

(5) டிரங் டெலிபோன் கட்ட ணங்களில் பத்து சத விகிதம் உபரிக் கட்டணம் விதிப்பது—

இவையே புதிய 'பட்ஜெட்டி'ன் வரி உயர்வு அம்சங்களாகும். இவற் றின் மூலம் கிடைக்கும் வரும்படி யால், ராணுவச் செலவில் 14½ கோடி ரூபாயும், ஸிவில் தற்காப்புச் செலவில் 2½ கோடி ரூபாயும் அதி கரிக்குமாம். இந்த 'பட்ஜெட்'டை எதிர்ப்பதற் கென்றே காங்கிரஸ் காரர், இந்திய அசெம்பிளிக்குச் சென்றார்கள்; தோற்கடித்துத் திரும்பி விட்டார்கள். தங்கள் யுத்த முயற்சியை இந்தியா பெருமிதமாய் ஆதரிக்கிறதென்று, இனியும் பிரிட் டன் உலகத்துக்குப் பறையடிக்க முடியுமா?

## ரூஸ்வெல்ட் வெற்றி

ஐக்கிய அமெரிக்காவின் குடி யரசுக்கு இதுவரை யாரும் மூன்று முறை தலைவரா யிருந்த தில்லை. அந் தப் பழமையைத் தகர்த்தெறிந்து விட்டார் ரூஸ்வெல்ட். தலைவர் போட்டியிலே வெண்டல் வில்கியை எதிர்த்து, 92 எலக்டொரல் ஓட்டு களுக்கு எதிரே 439 எலக்டொரல் ஓட்டுகள் பெற்று அவரடைந்த வெற்றி, இணையற்ற வெற்றியாகும். அவர் மூன்றும் முறையும் அமெரிக் கக் குடியரசுத் தலைவராய் இச்சம யம் வீற்றிருப்பது, பிரிட்டனுக்குப் பேராதரவாகும்.

## காலஞ் சென்ற சேம்பர்லீன்

மாஜி பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஸ்ரீ சேம்பர்லீன் காலமாகிவிட் டார்; 'மூனிக் ஒப்பந்தம்' வரையில் பிரிட்டனின் வழவழாத் தனத்தைக் கொண்டுபோய் விட்டு, சர்வதேச ராஜ தந்திரத்தைச் சந்தைக் கடை வியாபாரமாகச் செய்த சேம்பர் லீன் மறைந்து விட்டார். அவரைப் பற்றி இன்று உலகம் இரண்டு பட்ட அபிப்பிராயம் கூறலாம். ஆனால், சரித்திரம் அவரைக் குறை கூறாது; பிரிட்டனே இதற்கெல் லாம் பொறுப்பாளி என்றுதான் கூறும். ஸ்ரீ பால்டுவின் காலத்தி லிருந்து பிரிட்டன் செய்த தவறு களுக் கெல்லாம், பிரிட்டனை ஆயத் தப் படுத்தாதிருந்த குறைகளுக் கெல்லாம் 'மூனிக்' ஒப்பந்தத்தால் தக்கைபோட, சேம்பர்லீன் முயன் றதா குற்றம்? முது கிழப் பருவத் திலே, அதுவரை விமானமே யேறி யறியாதிருந்தும், மூனிக்குக்கு வான ரதத்திலே அவர் பறந் தோடினாரே, அதுவா குற்றம்? நாம் அப்படி நினைக்கவில்லை. ஸ்ரீ சேம்பர்லீன் காலமடைந்து விட் டார். இனியும் பிரிட்டன் தன் தவறை அவர்மீது சுமத்தாமல் தாராள மனசு காட்டுவதுதான் நியாயம்.

## 'ஹிட்ல'ரின் வாட்டர்லூ!

கிரீஸ்மீது இதாலி படையெடுத் தது சென்ற மாதத்திலே குறிப் பிடத்தக்க யுத்த சம்பவமாகும். இன்றுவரை இதாலியின் கை ஓங்க வில்லை. சின்னஞ் சிறிய கிரீஸ், பிரிட்டனின் உதவிபெற்று, வெற்றி களும் அடைந்து வருகிறது. கிரீஸ் விழுந்தால், மத்திய தரைக்கடலிலே பிரிட்டனின் அபாயம் அதிகரிக் கும். இடையில், ருஷ்யா, ஸ்பெயின், பிரான்ஸ், இதாலி, ருமேனியா ஆகிய நாடுகளை யெல்லாம் கலந்து கலந்து, ஹிட்லர் என்னவோ சூழ்ச்சிகள் செய்து வருகிறார். பிரிட்டன்மீது பாய்ந்தடிக்கத் தனி வல்லமை அவருக்கில்லை யென் பதை, இந்தத் தாமதமே காட்டு கிறது. இதாலியின் ஒத்தாசை பயன்பட வில்லை. வேறு துணை எங்கே கிடைக்கும் என்று பறக் கிறார் போலும்! இவர் துணைபெறு முன், அமெரிக்கர்கள் விமானங்க ளோடு பிரிட்டனுக்குத் துணை புரி யப் பறந்தோடி வருகிறார்கள். ஒரு செய்தி கூறியதேபோல 'ஹிட்ல' ரின் வாட்டர்லூ சமீபத்துக்கொண் டிருக்கிறது என்று நாம் நம்பு வோமா?

## வைசிராய் பல்லவி

இந்திய வைஸிராய் லின் லித்கோ பிரபு மத்தியச் சட்ட சபைகளில் பாடியது பழைய பல் லவி. நிர்வாக சபை விஸ்தரிப்பு வரத்தை வாபீஸ் வாங்க வில்லை யாம். 'உப்பிருக்கா?' என் றால், 'பப்பிருக்கு, இருக்கு' என்று அழுத்திச் சொல்லும் வியாபாரமா யிருக்கிறது!

17 JUL 1941 MADRAS

தமிழ்ப் பிரமுகர்கள் :

# வ. ரா.

இவருடைய முழுப் பெயர் வ. ராமஸ்வாமி அய்யங்கார். பிறந்த ஊர் திருவையாற்றுக் கடுத்த திங்களூர்.

வ. ரா. ஒரு எழுத்தாளர். 'ஒரு' என்ன வந்தது ?—மிகச் சிறந்த தமிழ் எழுத்தாளர். காலத்திற்குத் தேவையான, உயிரும் புஷ்டியுமுள்ள கருத்துக்கள், தத்துவங்களை, நல்ல தமிழில் எழுதக்கூடிய முதன்மையான எழுத்தாளருள் அவர் ஒருவர். தாம் ஜனங்களுக்குச் சொல்ல வேண்டிய செய்தி இருப்பதாலேயே அவர் எழுதுகிருர். 'தமிழ் ஜன சமூகத்தை அடியோடு புதுப்பித்து நிர்மாணம் செய்ய வேண்டிய காலமும் தேவையும் வந்துவிட்டன. அந்தப் புதிய நிர்மாணத்துக்கு ஏற்ருற் போல, பாஷையை அமைத்துக்கொள்ளத்தான் வேண்டும். யார் தடைசெய்தாலும் அது பலிக்காது'— இது வ. ரா. வின் வாக்கு.



வ. ரா. ஒரு பச்சைத் தமிழர். தமிழகத்திலும், தமிழ ரிடத்திலும், தமிழினிடத்திலும் அவருக்குள்ள மோகம் அபாரம். ஒரே பதவியில் ஒட்டிக்கொண்டிருப்பவனை, 'இடமோஹினி' பிடித்துக் கொண்டுவிட்டது' என்று அவர் வர்ணிப்பது வழக்கம். அவருக்கும் இந்தத் தமிழ்நாட்டு 'இடமோஹினி' பிடித்திருக்கிறது என்பது, அவர் எழுத்திலும், பேச்சிலும், எண்ணத்திலும் பிரதிபலித்துக்கொண்டே யிருக்கிறது.

வ. ரா. வின் தமிழ் நடை அலாதியானது. சமீப காலத்தில் தோன்றியுள்ள ஆங்கில அமெரிக்க இளம் எழுத்தாளர் நடை போன்றது. ரத்தினச் சுருக்கமாயும், குறித்த பொருளைத் தெளிவாய் உணர்த்துவதாயும், ஜனங்களிடையே ஜீவனேடு விளங்குகிற சொற்கள் நிறைந்ததாயும் இருக்கும். சொற்களுக்காக அவர் அகராதிக்-கல்லறைகளில் தேடுவதில்லை. இலக்கணத்தைக் கண்டால், அவர் திரும்பிப் பாராமலே ஓடிவிடுவார். இல்லாவிட்டால், ஔரங்கஸீப் சங்கீதத்தைச் சொன்னதுபோல், 'திரும்ப எழுந்து வராமல் ஆழமாக அதை வெட்டிப் புதையுங்கள் !' என்று சொல்லவும் கூடும். இலக்கணத்தைக் காட்டித் தமிழ் வசனமே வளராதபடி அடிக்கிருர்கள் என்பது அவர் கருத்து.

வ. ரா. வின் மேதை பிரகாசிக்கவும், எழுத்து உயிர் சுமந்து ஒலிப்பதற்கும் உதவிய காரணங்களில் மூலமானது ஒன்று. அதுதான் பாரதி. சுப்பிரமணிய பாரதியார் இல்லாவிட்டால், வ. ரா. இளவயதிலேயே தம் எழுத்தின் சக்தியை உணர்ந்திருப்பது கஷ்டமா யிருந்திருக்கும். புதுச்சேரியிலே, அரவிந்தர் ஆசிரமத்தில், அவர் எழுதிப் பாய்க்கு அடியில் ஒளித்துவைத்த கதையைப் பாரதியார் எடுத்துப் பார்த்திராவிட்டால், அவர் தம்மைத் தாம் அறிந்துகொள்ள நெடு நாள் ஆகியிருக்கும்.

'அதென்னது ஓய், பாய்க்கடியில் ஒளித்து வைக்கிறீர் !' என்று கேட்டார் பாரதியார்.

'இல்லை.........அது......வந்து...... கடுதாசி...'

'சும்மாச் சொல்லும். கடுதாசியானல் ஒளித்து வைப்பானேன் ? அதை எடும், பார்ப்போம் !'

**ப. ராமஸ்வாமி**

பிரித்துப் பார்த்தால், அது பங்கிம் சந்திரரின் 'ஜோடி மோதிர'க் கதையின் தமிழ் மொழிபெயர்ப்பு. பாரதியார் படித்தார். அவ்வளவுதான், கதையைக் கையில் பிடித்துக்கொண்டு, அரவிந்த பாபுவிடம் ஓடினர். 'பாபு ! பாபு ! நம்ம வ. ரா.வின் தமிழ் எப்படி யிருக்கிறது தெரியுமா ! ரொம்ப நன்ரு யிருக்கிறது ! இத்தனை நாளாய் இது தெரியாதே !' என்று ஆரவாரம் செய்தார். எந்த நேரத்தில் பாரதியார் திருவாய் மலர்ந்தாரோ, தெரியவில்லை — 'பிரபஞ்ச மித்திரன்', 'தமிழ்நாடு', 'வர்த்தக மித்திரன்', 'சுதந்திரன்', 'சுயராஜ்யா', 'வீர கேசரி', 'பாரததேவி' முதலிய பற்பல பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்து வ. ரா. நூற்றுக் கணக்கான கட்டுரைகளும், தலையங்கங்களும் எழுதும்படி நேர்ந்துவிட்டது. பாரதியார் வ. ரா. வுக்குச் செய்த தொண்டைத்தான், வ. ரா. இப்பொழுது இளம் எழுத்தாளருக்குச் செய்து வருகிருர்.

இவருடைய வாழ்க்கையிலே எத்தனையோ விசித்திரங்கள் பின்னிக் கிடக்கின்றன. ஆயினும், ஒரே பொற்சரடு ஓடுவதுபோல், புகழ்பெற்ற 1908-சகாப்தத்திற் குரிய உணர்ச்சி ஊடே ஓடிக்கொண் டிருக்கிறது. அக்காலத்திய பாரதியார், வ. உ. சிதம்பரம் பிள்ளை, சிவா முதலியோர் வார்க்கப்பட்ட அச்சிலேயே இவரும் வார்க்கப்பட்டவர். இந்நால்வருக்குள் எத்தனையோ பேதங்கள் உண்டு. ஆயினும் அச்சு ஒன்றுதான் ; எல்லோருடைய வாழ்க்கையையும் பாதித்து உருவாக்கிய சம்பவங்கள் ஒன்றுதான் ; பொதுவான ஆதர்சமும் மார்க்கமும் ஒன்றுதான்.

வ. ரா.விடம் அந்தச் சகாப்தத்தின் சாராம்சம் அப்படியே உறைந்துவிட்டது. பின்னல், மகாத்மா காந்தியின் இயக்கம் அதை நன்ருகப் பயன்படுத்திக்கொண்டுவிட்டது. பாரதியார் பாராத சிறைக் கூடத்தையும், அவர் ஒரு சத்தியாக்ரகியாகப் போய்ப் பார்த்து வந்துவிட்டார்.

இவருடைய தந்தையார் வைதீகம் மிகுந்தவர். வ. ரா.வுக்குப் பத்து வயதா யிருக்கும்போது, குடும்பத்தார் காவிரி யாற்றின் கரையிலிருக்கும் திருப்பழனத்

தில் குடியேறி வசித்துவந்தனர். அப்பொழுது அவர்களுக்கு சுமார் ரூ.40,000 பெறுமதியுள்ள நிலங்கரைகள் இருந்தன. வ. ரா. வின் படிப்பு எப். ஏ. வரைதான். எப். ஏ. பரீட்சையும் இரண்டுமுறை முயன்றும் ஏமாற்றிவிட்டது ஆனால், மற்ற ஆங்கிலம், கணக்கு முதலியவைகளில் தேறவில்லையானாலும், தமிழில் மட்டும் பாஸ் செய்திருந்தார்! காலேஜில் படிக்கும்போதே, சுதேசி இயக்கத்தில் சேர்ந்து, வந்தேமாதர கோஷம் செய்தார். அதற்கு ரூபாய் இரண்டு அபராதம் கொடுத்தது அவர் தந்தைக்குத் தெரியுமோ என்னவோ! எனவே, வ. ரா.வின் பள்ளிக்கூடப் பட்டம் மெட்ரிகுலேஷன் தான். அந்தப் பரீட்சையில் முதல் வகுப்பில் தேறியிருந்தார். அதற்கு முந்திய 'அஞ்சு ரூபாய்ப் பரீட்சை'யில் ஜில்லா முதலாகத் தேறியிருந்தார். லோயர் ஸெக்கண்டரி பரீட்சைக்குத் தான் அந்தக் காலத்துப் பெயர் இது.

1910-ஆம் வருஷத்தில்தான் வ. ரா. புதுவைக்குச் சென்றது. அங்கே முதன் முதலாக அரவிந்தரையும் பாரதியாரையும் தரிசித்துக்கொண்டார்.

1911,ஜூன் முதல், 1914, ஜனவரி முடிய, வ. ரா. புதுவையில் வசித்து வந்தார். முதலில் சாப்பாடு முதலியவை பாரதியார் வீட்டில்; பிறகு அரவிந்தர் இல்லத்தில் நடந்தன.

1915-ல்தான் வ. ரா. முதன் முதலாக ஒரு நாவலை எழுதி முடித்தார். அதன் பெயர் 'சுந்தரி அல்லது அந்தரப் பிழைப்பு'. அதில் ஆசிரியர் கூறியுள்ள சமூக முன்னேற்றமான விஷயங்கள் மிகவும் போற்றத் தக்கவை. சிறு பிராயம் முதற்கொண்டு சமூகத் தளைகளை உடைத்தெறிவதில் இவருக்கு மிகுந்த அக்கரை இருந்துவந்திருக்கிறது. ஒரு சமயம் இவருடைய கிராமத்தில் ஒரு ஹரிஜன் இறந்து போனபொழுது, சவத்தைத் தெரு வழியாகக் கொண்டுபோக விடாமல், வரப்பு வழியாகவே கொண்டுபோக வேண்டுமென்று ஜாதி ஹிந்துக்கள் தடை செய்தார்களாம். அப்பொழுது இவர், ரோடு வழியாகத்தான் கொண்டு போகவேண்டும் என்று பிடிவாதம் செய்திருக்கிறார். தகப்பனர் குடியிருந்த வீட்டில் ஹரிஜனங்களை அனுமதிக்காததால், இவர் பக்கத்தில் தனியாக ஒரு பங்களா கட்டி, அதில் கொல்லை, வாசல் இருபுறத்தாலும் ஹரிஜனங்களை அனுமதித்ததுடன், வீட்டினுள்ளே சமபந்தி போஜனங்களும் நடத்தி வந்தாராம்.

வ.ரா.வின் பத்திரிகை முயற்சிகளில், அவர், கு. ஸ்ரீனிவாசன், தெ. ச. சொக்கலிங்கம் மூவரும் சேர்ந்து தொடங்கிய 'மணிக்கொடி' குறிப்பிடத் தக்கது. இம்மூவரும் 1933, செப்டம்பர் 17-ஆம் தேதி வெளிவந்த அதன் முதல் இதழில் எழுதியிருந்த வாசகம் தமிழ் நாட்டிற்கே புதிய ஒளி கொடுப்பதாயுள்ளது. இவர்களுடைய பாஷையும் பாணியுமே புது மோஸ்தரா யிருந்தது. அவ் வாசகம் வருமாறு:

'பாரதி பாடியது மணிக்கொடி. காந்தி ஏந்தியது மணிக்கொடி. சுதந்திரப் போராட்டத்தில், பல்லாயிரம் வீரர்களை ஈடுபடச் செய்தது மணிக்கொடி. மணிக்கொடி பாரத மக்களின் மனத்திடை ஓங்கி வளரும் அரசியல் லட்சியத்தின் நுனி, முனை, கொழுந்து.'

* * *

வ. ரா. வின் முகத்தைப் பார்த்தாலே, கண்களின் துருதுருப்பும் ஒளியும் நம்மை வசீகரித்துவிடும். நன்றாக க்ஷவரம் செய்துள்ள முகம், மூக்குக் கண்ணாடி, வெண்பட்டுப்போல் நரைத்துச் சிலிவிடப்பட்ட கிராப்பு, துய்ய வெள்ளையான கதர் ஜிப்பா, - இவற்றில் எதுவும் நம்மைப் பயமுறுத்துவதில்லை. கண்ணைப் போலவே துடித்துக்கொண் டிருக்கும் அவருடைய நாக்கு பேச ஆரம்பித்து விட்டால்தான், நாம் நம் நிலையைக் கவனித்துக்கொள்ள வேண்டும். விவாதத்திற்கு ஆரம்பித்து விட்டாலோ, எதிரே யிருப்பவரின் கண்களைப் பொத்துக்கொண்டு, உள்ளத்தில் புகுவார். அடுத்தாற்போல் பேசப்போவதை முன் கூட்டி அறிந்து, ஒரு விநாடியில் அதற்குச் சொல்லவேண்டிய பதிலைத் தயாரித்துக்கொள்வர். எந்த விஷயமா யிருந்தாலும், அதை ஓர் ஒழுங்குமுறை பற்றி விவாதிப்பதில், அவருக்கு வெகு குஷி. எதிரி ஒருவர் இருந்தாலும், ஏதோ பேச்சளவில்தானே மறுக்கிறார் என்று விடாமல், கோதாவுக்கு வெளியே தூக்கித் தூக்கி எறிவார்.

சாதாரணமாக வ. ரா. வுடன் சம்பாஷிப்பதில் ஒரு தனி இன்பம் உண்டு. 'ஓய்' 'காணும்' என்றெல்லாம் அவர் உறவு கொண்டாடி உற்சாகமாய் ஆரம்பித்து விட்டால், கேட்பவர் பாடு யோகந்தான். 'கருத்துக்களின் மேல் கருத்துக்கள் தூரத்திக்கொண்டு வரும்' என்று இங்கிலீஷில் சொல்லுகிறார்கள். அவர் பேசுவது சம்பாஷணை அல்ல, செவிக்கும் சிந்தைக்கும் விருந்து. சம்பாஷணை ஒரு கலை. அதில் அவர் வல்லவர்.

பேச்சிலே அவருக்கு இருக்கும் இன்பம் படிப்பிலே கிடையாது. ஆனால், படிக்காம லிருப்பதும் இல்லை.

யாரைப் பற்றியும் அவர் சட்டென்று அபிப்பிராயம் கொண்டுவிடுவார். ஒரு முறை கொண்ட அபிப்பிராயம் அப்புறம் மாறுவதும் அபூர்வம். பழைய ஜெர்மன் மந்திரி பிஸ்மார்க், 'ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு விலையுண்டு' என்றார். 'எவ்வளவு விலை' என்பதை ஒரு நிமிஷத்தில் வ. ரா. மதித்துவிடுவார். புகையிலை, சிகரெட், பொடி ஒன்றுமே அவர் உபயோகிப்பதில்லை.

ஹிட்லருடைய திறமையைக் கண்டு அவருக்கு வியப்பு அதிகம். முன்னால் முஸொலீனியைப் பற்றி எழுதும் பொழுது, சர்வாதிகாரத்வத்தையே புகழ்ந்து எழுதியிருக்கிறார். முஸொலீனிக்கும் இவருக்கும் பொதுவான குணம் ஒன்றுண்டு. இருவரும் 'பேனவால் பிரசங்கிப்பவர்கள்'. ஹிட்லர், தம் நாஜிக் கொள்கையை விளக்க, 600 பக்கத்தில் 'மெயின் காம்ப்' எழுதினர். ஆனால், முஸொலீனி தம் பாஸிஸ்ட் கொள்கையைப் பன்னிரண்டு பக்கத்தில் அடக்கி எழுதி முடித்தவர். இதுபோல் வ. ரா. வும் மிகமிகச் சுருக்கமான அளவில் பெரிய விஷயங்களை எழுதிவிடக் கூடியவர். சர்வாதிகாரிகளுடன் வேறு எந்த ஒற்றுமையையும் நாம் எதிர்பார்க்க முடியா தல்லவா!

இவருக்கு ரொம்ப வெறுப்பான பொருள்கள், முதுகெலும் பில்லாதவர்கள், தரித்திரர்கள், ஜரிகை வேஷ்டி, பேரம் பேசுதல், 'ஆனால்' 'இருந்தால்' 'காலம் வரணும்' என்ற சொற்கள், வயோதிகம், வைதீகம், பிஞ்சிலே பழுத்த இளைஞர், ஆனந்தவிகடன்.

வ.ரா. ஒரு பூணூலில்லாத பிராமணர். யக்ஞம் செய்வதானால்தானே உபவீதம் வேண்டுமென்று விட்டுவிட்டார் போலிருக்கிறது. அவர் ஒரு வயதான வாலிபர்; வேண்டியவர்களிடம் உரிமையோடு சதா சண்டைபோடும் நண்பர்.

இவருடைய 'நடைச் சித்திரம்' என்ற நூலில், ஒரு கற்பனைப் பையனைச் சிருஷ்டித்து இவ்வாறு வர்ணித்திருக்கிறார்:

'தங்கத்தை உருக்கி வார்த்த விக்கிரகத்தைப்போல இருப்பான் அகன்ற நெற்றி, செந்தாமரைக் கண்கள், சுவாமி விவேகானந்தரைப் போலத் தலை, பூமியில் ஒரு நிமிஷமும் தரிக்காமல் எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கும் கால்கள், ஓயாத நாக்கு, ஸயன்ஸ்காரர்கள் கூட விளக்கத்தோடு பதில் சொல்ல முடியாத கேள்விகள், பம்பரம் போல் விளுடியில் தூங்கும் குணம், சொன்னதை வேதமாக நம்பும் தன்மை — இவை எல்லாம் சேர்ந்தது தான் ராமு.'

இந்தக் கற்பனை-ராமுவுடன் போட்டி போட, இன்று வ. ரா. வுக்கு ஒரு குழந்தை இருக்கிறான். இருவரில் யார் ஜயித்தா லென்ன? எல்லாம் அவர் குடும்ப ஜயந்தானே!

ராஜீயக் கதை :

# உப்பிலே சூட்சுமம்

டி. எப். ஆர். மஹ்ஆலிசாஹிப்

பழங் கதைகளில் மிக ருசிகரமான பாட்டி கதையொன்றுண்டு. அந்தக் கதையை, பால்யப் பிராயத்தில் நீங்களும் கேட்டிருக்கக் கூடும். ஆனால், இப்போது அதை நீங்கள் மறந்து போயிருக்கலாம். ஆகவே, மீண்டு மொருமுறை உங்களுக்கு ஞாபகப் படுத்தவே அந்தப் பாட்டி கதையை இங்கே கூற முன்வருகிறேன். ஆனால், இத்தருணம் அக்கதையை வெறும் பாட்டி கதையென்று மட்டும் கருதிக்கொண் டிருந்துவிடக் கூடாது. அக்கதைக்கும் இப்போதைய இந்திய அரசியல் நிலைமைக்கும் எத்தனை ஒற்றுமை இருக்கிற தென்பதைக் கவனித்துப் பாருங்கள். இனி, கதையைச் சொல்லுகிறேன்.

ஒரு காலத்திலே, ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தான். அந்த ராஜாவுக்கு நான்கு புத்திரிகள் இருந்தனர். ஒரு நாள் ராஜா, தன் புத்திரிகளை யெல்லாம் அழைத்துப் பரீட்சிக்க விரும்பினான். எனவே, அவர்களை நோக்கி "என்னருங் கண்மணிகளே! நீங்கள் உங்கள் இருதயத்திலே என்னிடம் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறீர்கள்? அந்த அன்பு எப்படிப்பட்டது? இதை நீங்கள் ஒவ்வொருவரும் ஒரே வாக்கியத்தில் சொல்லவேண்டும்" என்று கேட்டான்.

மூத்த குமாரி கூறினாள்:—"அப்பா! தங்கள்மீது என் உள்ளத்தில் உள்ள அன்பு சர்க்கரையைப் போல் இனித்துக் கொண்டிருக்கிறது."

2வது குமாரி கூறினாள்:—"தந்தையே! தங்கள்மீது என் அன்பு கற்கண்டுக்கு ஒப்பானது."

3-வது குமாரி கூறினாள்:—"எனது அன்பு தேனைப் போல் தெவிட்டாதது."

நான்காவது குமாரியாகிய சின்னப் பெண், பதில் சொல்லச் சிறிது யோசித்துக்கொண் டிருந்தாள். ஏனெனில், மற்றப் பெண்களைவிட இவள் அதிக புத்திசாலி; நேர்மையும் நிர்த்தாட்சண்யமு முள்ளவள்; உள்ளதை உள்ளபடி கூறும் நியாயவாதி. எனவே இவள் சிறிது தயங்கிவிட்டுப் பிறகு கூறினாள்:—"அப்பா! என் தமக்கைகள், தங்கள் மீதுள்ள அன்பைக் கேவலம் சர்க்கரைக்கும் கற்கண்டுக்கும் தேனுக்கும் ஒப்பிட்டுக் கூறி, தங்களை முகஸ்துதி செய்து ஏமாற்றப் பார்க்கின்றனர். நான் உண்மையைக் கூறுகிறேன். எனக்குத் தங்கள் அன்பு உப்புக்குச் சமமானதா யிருக்கிறது."

இந்தச் சின்னப் பெண் கூறிய பதில் தகப்பனுருக்குப் பிடிக்க வில்லை. அவருக்கு அவள்மீது கோபம் வந்துவிட்டது. மூத்த குமாரிகள், சர்க்கரை, கற்கண்டு, தேன் ஆகிய இனிய பண்டங்களுக்கு அன்பை ஒப்பிட்டு இன்பத்தை யளித்திருக்க, இந்தச் சின்னப் பெண், வாயில் போட்டால் கரிக்கும்படியான உப்புக்குத் தன் அன்பை ஒப்பிட்டு விட்டாளே என்று தீராக் கோபமுங் கொண்டார். சின்னக் குமாரியைக் கோபித்துக்கொண்டு, "நீ கூறியது தவறு. அதை வாபஸ் வாங்கிக்கொள்" என்று வற்புறுத்தினர்.

"நான் கூறியது முற்றிலும் சரியே; இதில் தவறென்று மில்லை. நான் வாபஸ் வாங்கிக்கொள்ள மாட்டேன்" என்று அவள் கூறிவிட்டாள்.

ராஜாவுக்கு ஆத்திரம் பொங்கி வழிந்தது. அந்தப் பெண்ணை அவர் தண்டிக்க முடிவுசெய்து, அவளைத் தன் அரண்மனையைவிட்டு விரட்டிக் காட்டுக்கு அனுப்பிவிட்டார். தன்னைப் பற்றித் தித்திக்கப் பேசிய மற்ற மூன்று பெண்களுக்கும் ஏராளமான ஆடையாபரணங்களும் தின்பண்டங்களும் வெகுமதி கொடுத்துச் சந்தோஷப் படுத்தினர்.

நாட்டைவிட்டுக் காட்டுக்கு அனுப்பப்பட்ட இளைய குமாரி, கடவுளே தனக்குக் கதியென்று நம்பி, வனவாசம் புரிந்துவந்தாள். வனத்திலே ஒரு குடிசை அமைத்துக்கொண்டு தன் வேலையாட்களுடன் பகவத் பக்தியோடு பரிசுத்தமான வாழ்க்கை நடத்திவந்தாள். இப்படியே சில வருஷங்கள் கழிந்தன.

கொஞ்ச நாட்கள் கழித்து ராஜா, அந்தக் காட்டிலேயே வேட்டைக்குச் சென்றார். ஆனால், தன் இளைய குமாரி அந்தக் காட்டில் இருப்பது அவருக்குத் தெரியாது. நெடுநாட்களாகிவிட்டதால், தன் குமாரியைப் பற்றி மறந்துவிட்டார்.

ராஜா காட்டில், வேட்டையாடிக் கொண்டிருக்கையில், சூரியாஸ்தமனம் ஆகிவிட்டது. அவருடலும் சோர்ந்துவிட்டது; களைப்பு மேலிட்டது. ராஜா, ஊரைவிட்டு வெகுநேரம் சென்றிருந்ததால், அந்தச் சமயம் அரண்மனைக்குத் திரும்பி வந்து சேர முடியாது. எனவே, காட்டில் இரவை எங்கே கழிப்பதென்று தேடி யலைந்தார்.

சற்று தூரத்தில் ஓரிடத்தில் ஏதோ வெளிச்சம் தெரிந்தது. அதென்னவென்று நோக்கினர். நடுக்காட்டில் ஓர் குடிசையும் அங்கோர் விளக்கும் இருப்பதைக் கண்டார். அவருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. தங்க இடம் கிடைத்ததென்று தெய்வத்துக்கு வந்தனம் செலுத்திவிட்டு, அந்தக் குடிசையை யணுகினர்.

அங்கிருந்த பெண் ஏழையாய் அலங்கோலமாய் இருந்ததாலும் குடிசையில் வெளிச்சம் குறைவாய் இருந்ததாலும், அந்தப் பெண் யார் என்பதை அப்போது ராஜாவால் கண்டுகொள்ள முடியவில்லை. யாரோ குடிஜனப் பெண் என்று கருதி, இரவு தங்க இடமும் உண்ண உணவும் கேட்டார். ஆனால், இவர் தன் தந்தையே என்பதை அவள் அறிந்துகொண்டாள். எனினும் தன்னைக் காட்டிக்கொள்ளக்

## ஜேபி ரேடியோ



சிக்காகோ நகரின் உல்லாச நந்தவனங்களிலே காவல்புரியும் போலீஸ் கான்ஸ்டபிள்களின் ஜேபியில் ஒரு குட்டி ரேடியோ இருக்கிறது. போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வரும் கட்டளைகளை இதன் மூலம் அவர்கள் கேட்டுக் கொள்வார்கள். ஆனால், பதில் சொல்ல மாத்திரம் முடியாது. எதற்காகப் பதில் சொல்லவேண்டும்? 'அவர் கடன் பணிசெய்து கிடப்பதே' யன்றோ?

கூடாதென்று எண்ணி, முக்காட்டை இழுத்துப் போர்த்திக்கொண்டு, ராஜாவை வரவேற்று உபசரிக்கலானுள்.

கொஞ்ச நேரத்துக்குள் பலவிதமான நல்ல உணவுகளைச் சமைத்து விட்டாள். ஆனல், அவ்வுணவுகள் எதிலும் உப்புப் போடவில்லை.

உப்பில்லாத உணவை யார்தான் விரும்பிப் புசிப்பர்? அந்த உணவுகள் ராஜாவுக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. ஒரு கவளம் சாப்பிட்டபின், மறு கவளம் எடுத்து வாயில் வைக்கவில்லை. ராஜாவின் அதிருப்தியை, இளங் குமாரி குறிப்பால் அறிந்துகொண்டாள். உடனே உள்ளே சென்று கொஞ்சம் உப்பைத் தூள்செய்து கொண்டு வந்து, அதை உணவுப் பண்டங்களில் தூவிக் கலந்து, "பிரபுவே! உணவை இப்போது சாப்பிட்டுப் பாருங்கள்" என்று வேண்டிக்கொண்டாள். ராஜா தின்று பார்த்தார். உப்பிட்ட அந்த உணவு, அளவற்ற ருசியுடன் இருந்தது. ராஜா வயிறு நிறைய உண்டு பசியாறினர்.

அதன் பிறகு, அந்தப் பெண் தன் முக்காட்டை நீக்கி, ராஜாவின் எதிரில் வந்து நமஸ்கரித்து, "மகாராஜ்! நான் தான் தங்கள் கோபத்துக்காளான கடைசிப் பெண். அன்று தங்கள் அன்பை உப்புக்கு ஒப்பிட்டதற்காகக் கோபித்துக் கொண்டு என்னைத் தண்டித்து விட்டீர்கள். இன்று அந்த உப்பு இல்லாத உணவை உண்ண முடியாமல் தவித்தீர்கள். உப்பின் மகிமை எப்படிப்பட்டது என்பதைப் பிரத்தியட்சமாய் அறிந்துகொண்டீர்கள். இவ்வுண்மையை உணர்த்தவே, உப்பில்லா உணவைத் தங்களுக்கு நான் சமைத்து வட்டித்தேன். தாங்களே சொல்லுங்கள்: சர்க்கரை-கற்கண்டு-தேன் ஆகிய விலையுயர்ந்த பண்டங்கள் மேலா; அல்லது அற்பவிலைப் பண்டமெனக் கருதப்படும் உப்பு மேலா? இப்போது உப்புக்கும் தித்திப்புக்கு முள்ள வித்தியாசம் தங்களுக்குத் தெரிந்துவிட்ட தல்லவா? இனியும் தாங்கள் என்மேல் கோபங் கொண்டிருக்க நியாயமுண்டா?" என்று வினவினுள். ராஜா தலைகுனிந்தார். அவர் கண்களில் கண்ணீர் ததும்பியது.

இவ்வளவுதான் அந்தப் பாட்டி கதை. இந்தக் கதைக்கும் இந்திய அரசியல் விவகாரத்துக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் கேட்கலாம். உப்பிட்ட உணவுகளின் இனிமையையே யன்றி, வேறெவ்வினிமையையும் அறியாத கிராமாந்தர ஏழை மக்களுக்கு இதன் தாத்பர்யம் விளங்கும். சர்க்கரையும் கற்கண்டும் தேனும் உண்டு, சிம்லாவிலும் ஒயிட் ஹாலிலும் வாழும் 'பெரியோர்களுக்கு'த் தெரியாமற் போகலாம்.

உப்பின் மகத்துவத்தை உணர்த்துவதற்குத்தான் கொஞ்ச நாட்களுக்குமுன் மகாத்மா காந்தி தண்டியில் 'உப்புக் காய்ச்சும் வித்தையை' எல்லோருக்கும் கற்பித்துக் கொடுத்தார். அதன் பிறகுங்கூட, சிம்லாவில் உறையும் பிரபுக்களுக்கு உப்பின் மகிமை தெரியவில்லை யெனில், அதற்கு நாமென்ன செய்வது?

உப்பின் மகிமையை எடுத்துச் சொல்லியதால், மகாராஜாவின் கோபத்திற்காளாகி வனவாசக் கஷ்டங்களை யேற்ற இளவரசியின் நிலைமையிலேயே இன்று காங்கிரஸ் இருக்கிறது. மகாராஜாவின் திருப்தி யொன்றையே பிரதானமாய்க் கருதி, உண்மையை மறைத்து, சர்க்கரை-கற்கண்டு-தேன்போல் வாய் தித்திக்கப் பேசிய மற்ற மூத்த ராஜகுமாரிகளுடைய நிலைமையில் இருக்கின்றன இந்நாட்டு வகுப்புவாத அரசியல் ஸ்தாபனங்கள்! முகஸ்துதிபாடி, சர்க்காருக்குச் சாஷ்டாங்க நமஸ்கார மிடும் வகுப்புவாதக் கட்சிகளுக்கு, இன்று அரசாங்கப் பதவிகள் என்னும் சுகபோக வாழ்வு கிடைக்கலாம். ஆனல், இந்தச் சுகபோகம் சாசுவதமாய் நீடித்திருக்குமா? இளவரசி மூலமாய் உப்பின் மகிமை ராஜாவுக்கு இறுதியில் உணர்த்தப்பட்ட தல்லவா? அதைப்போல், மகாத்மா அன்று தொடங்கிய சத்தியாக்கிரகத்தையும் பிற இயக்கங்களையும் பற்றிய சத்தியத்தை, அரசாங்கத்தார் ஒருநாளைக்கு உணர்ந்து கொள்ளத்தான் போகின்றனர். அப்போது இந்த முகஸ்துதிப் பேர்வழிகளின் கதி யாதாகும்? அதை நாமும் பார்க்கத்தான் போகிறேம்.

---

# மின்சார நாய்



உலகத்தின் முதல் மின்சார நாயான ஸ்பார்க்கோ. நியூயார்க் சந்தைக் கண் காட்சியில் வைக்கப் பட்டிருந்தது. இதற்குக் குரைக்கத் தெரியும்; வாலை யாட்டத் தெரியும்; குந்தி யுட்கார்ந்து பிச்சை யெடுக்கவும் தெரியும்.

முகப்புச் சித்திரம்:

# ஏடன் துறைமுகத்தில்

அரசியல் நிருபர்

'இந்தியாவுக்கு வாயிற்படி' என்று மேல்நாட்டார் கருதும் ஏடன் துறைமுகத்தை, இந்திய சிப்பாய்களும் பிரிட்டிஷ் ஸோல்ஜர்களும் மகா ஜாக்கிரதையாய்க் காவல் புரிந்து வருகிறார்கள். அந்த இந்திய சிப்பாய்களில் பலர் தங்கள் குடும்பத்தோடும் ஏடனில் வசித்து வருகிறார்கள். அத்தகைய சிப்பாய்களில் ஒருவரது மனைவி தன் குழந்தையை வைத்துக்கொண்டு கொஞ்சுகிறாள், 'சக்தி' இந்த இதழின் முகப்புப் படத்திலே.

ஏடன் துறைமுகம், பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கீழ் வந்து 100 வருஷங்கள் ஆகின்றன. அப்போது, விக்டோரியா மகாராணி அரசுபுரிந்துகொண் டிருந்தாள். 1839-ஆம் வருஷத்தில், ஏடனுக்கருகில் ஒரு கப்பல் உடைந்து, சில பிரிட்டிஷ்காரர்கள் ஆபத்தில் சிக்கினார்கள். அவர்களை ஏடனில் அக்காலத்தில் ஆட்சி புரிந்துகொண் டிருந்த சுல்தான் கைது செய்து, அடிமைகளாக்கிக் கொண்டார். கைதிகளில் இருவர், ஒரு சிறிய படகைத் திருடிக்கொண்டு, அந்த இடத்தைவிட்டுவெளிக் கிளம்பினார்கள். பிறகு பம்பாயிலிருந்து காப்டன் ஜேம்ஸ் ஹேன்ஸ் என்பவர் சுமார் எழுநூறு பிரிட்டிஷ் ஸோல்ஜர்களுடன் அங்கு படையெடுத்துச் சென்று, ஏடனைப் பிடித்துக்கொண்டார். அது முதல் 1937-ஆம் ஆண்டு வரையில் ஏடனின் நிர்வாகம் பம்பாய் கவர்னரின் கையில் இருந்து வந்தது. 1937-ஆம் வருஷத்தில் பிரிட்டிஷ் மன்னரின் ஆட்சிக்கு நேரே யுட்பட்ட ஓர் காலனி யாகிவிட்டது.

இந்த ஏடனின் விஸ்தீர்ணம் 75 சதுர மைலாகும். பக்கத்திலுள்ள பெரிம் என்ற தீவையும் சேர்த்தால், 80 சதுர மைல். அன்று 700 பிரிட்டிஷ் ஸோல்ஜர்கள் இதைப் பிடித்தபோது இங்கு வசித்த ஜனங்களின் தொகை 500 தான். இப்போதோ, அந்த ஜனத்தொகை சுமார் 55 ஆயிரமாகும். அதில் ஐந்தில் மூன்று பங்கினர் அரபுகள்; ஐந்தில் ஒரு பங்கினர் இந்தியர்.

ஏடனில் சில சமயம் வெயில் மகா கடுமையாய் எரிக்கும். என்றாலும், பொதுவாக, ஆரோக்கியமான சீதோஷ்ண ஸ்திதியுடைய பூமிதான். கொசுக்களும் ஈக்களும் அபூர்வம். மலேரியாக் காய்ச்சல் தலைகாட்டுவதில்லை. ஆனால், தண்ணீருக்குமட்டில் பஞ்சம். கிணறுகள் ஏரிகளி லிருந்தும் கடல்நீரைக் காய்ச்சி உப்பு நீக்கிச் சுத்தம் செய்தும் ஜனங்கள் குடிதண்ணீர் பெறுகிறார்கள். ஏடன் வழியாகச் சுமார் 60 லட்சம் பவுன் பெறுமான ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களின் போக்குவரத்து வருஷந்தோறும் நடைபெறுகிறது. மேல்நாடுகளி லிருந்து மத்திய தரைக்கடல் வழியாகக் கீழ் நாடுகளுக்கு வரும் கப்பல்களெல்லாம் ஏடன் கடலோரந்தான் வரவேண்டும். கப்பல்களுக்கெல்லாம் வழியிலே நிலக்கரி சப்ளை செய்யும் ஸ்தலம் ஏடன்தான்.

பூகோளப் படத்தைக் கூர்ந்துகவனித்தால், ஏடன் எவ்வளவு முக்கிய ராணுவ கேந்திர ஸ்தலம் என்பது புலனாகும். குறுகலான செங்கடல் வழிக்குக் காவல்புரிவது ஏடன். மேற்கே மத்திய தரைக்கடலின் வாயிற்படிக்குக் காவலிருக்கும் ஜிப்ரால்டரும் பிரிட்டனின் கையிலேயே இருக்கிறது. நடுவே ஸூயஸ் கால்வாயைக் காக்க, எகிப்து இருக்கிறது. ஆகவேதான் மத்திய தரைக்கடலின் பூர்ண ஆதிக்கம் பிரிட்டனிடமிருந்து வருகிறது. இந்த ஸூயஸ் மார்க்கத்துக்கு ஜிப்ரால்டரை முன் 'கேட்டு' என்றால், ஏடனைப் பின் 'கேட்டு' என்று சொல்லலாம். ஜிப்ரால்டரும் ஏடனும் அண்ணன் தம்பிகள் போல. மத்திய தரைக்கடலின் ஆதிக்கத்தைத் தான் கைப்பற்றி விடவேண்டுமென்பது இதாலியின் ஆவல். அவ்விதம் செய்தால், செங்கடல் மார்க்கமாக பிரிட்டன் செய்யும் வியாபாரத்தை யெல்லாம் அமுக்கி விடலாம் என்பது அதன் எண்ணம். இதற்காகத்தான் எரீட்ரியாவை இதாலி வென்றது. இப்போது, எகிப்துமீது போர் தொடுத்த காரணமும் இதுதான். அதில் தனது ஜம்பம் சாயாமல் போகவே, கிரீஸ்மீது பாய்ந்து விட்டது!

இத்தகைய செங்கடல் மார்க்கத்தில் மிக முக்கியக் காவல் ஸ்தல மாதலால், ஏடனில் பலமான கோட்டைகளைக் கட்டி, ஏராளமான சேனையையும் பிரிட்டிஷார் வைத்திருக்கிறார்கள். இந்தியாவை விமானத்தளமாகக் கொண்ட பல பிரிட்டிஷ் போர் விமானங்களும் ஏடனைப் பாதுகாத்து வருகின்றன. பிரிட்டிஷ் கடற்படையையும் இந்தியக் கடற்படையையும் சேர்ந்த சில யுத்தக் கப்பல்களும் இங்கே பலமாகக் காவல் புரிந்து வருகின்றன.

---

## திருடன் அகப்பட்டான்

அரேபியா தேசத்திலே அறிவும் ஆற்றலும் ஒருங்கே நிரம்பப் பெற்ற நியாயாதிபதி ஒருவர் இருந்தார். அவர் நியாயத்தை மிக எளிதில் கண்டு பிடிக்கும் வல்லமை யுள்ளவர்.

ஒருநாள் ஒரு கடைக்காரன் அவரிடம் வந்து, "ஐயா! எனது கடையிலுள்ள சாமான்களை யெல்லாம் யாரோ ஒரு திருடன் எடுத்துச் சென்றுவிட்டான். அவனைத் தாங்கள்தான் கண்டுபிடித்து, எனது சாமான்களை நான் திரும்ப அடையும் படி செய்யவேண்டும்" என மிகக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

நியாயாதிபதி அங்ஙனமே செய்வதாகக் கூறிவிட்டு, "நீ உன் கடையிலுள்ள கதவை எடுத்துக்கொண்டு சந்தை கூடும் இடத்திற்கு வா" என்று சொன்னார்.

அவ்வாறே கதவு சந்தைக்குக் கொண்டுவரப்பட்டது. அந்தக் கதவைப் பகிரங்கமாய் நன்றாகக் கம்பால் அடிக்கும்படி கட்டளை யிட்டார். நிறைய ஜனங்கள் அங்கு கூடிவிட்டனர்.

ஜனங்கள் ஏராளமாகக் கூடிய பின்னர் அடிப்பதை நிறுத்தும்படி கூறி, நியாயாதிபதி கீழே குனிந்து தமது காதைக் கதவின் அருகே வைத்துக் கொண்டு ஏதோ கேட்பதுபோல் சிறிது நேரம் பாவனை செய்தார். பிறகு, "இந்தக் கதவு, திருடன் யாரென எனக்குத் தெரிவித்து விட்டது. கோழி இறகைக் குல்லாயில் வைத்துக்கொண்டிருக்கும் மனிதன்தானும் கடைச் சாமான்களைத் திருடினவன்" என்று அங்கே நின்ற அனைவர்க்கும் கேட்கும்படி கூறினார்.

இதைக் கேட்டதும், கூட்டத்தி லிருந்த ஒரு மனிதன் தன்னை அறியாமலே தன் தலைமேலுள்ள குல்லாயைக் கையால் தொட்டுப் பார்த்துக்கொண்டான். அவ்வளவுதான். நியாயாதிபதி அவனைப் பிடித்து, அவனது வீட்டையும் பரிசோதனை செய்தார். களவுபோன சாமான்கள் எல்லாம் அங்கு அகப்பட்டன.

இயற்கை யழகு:

# முல்லைக் கன்னி

ஆர். திருஞானசம்பந்தம்

மாலை மயங்குவதற்கும் என் வாசலிலுள்ள முல்லை மலருவதற்கும் நேரம் சரியாக இருக்கிறது. இது ஜாதி முல்லை என்பதில் சந்தேகமேயில்லை. அதனுல்தான் நேரம் தவறுகிறது என்ற பேச்சே இதனிடம் கிடையாது.

இந்த முல்லைச் செடியைப் பார்த்தால், எனக்கு என்னென்னவோ எண்ணமெல்லாம் உதிக்கத் தொடங்கி விடுகிறது. சின்னஞ்சிறு செடிக்கு இப்படி அபூர்வமான மலர்களை உற்பத்தி செய்யும் சக்தி எங்கிருந்து வந்தது? பக்கத்தில் பனைமரம்போல் நிற்கிறதே கனகாம்பரம், அதற்கு ஏன் இந்தச் சக்தி இல்லை?

சரி, இதுதான் போகட்டும். அந்த மணம், அடடா! அதை என்னவென்று சொல்வது! மூடியிருக்கும் தன் பொன் இதழைத் திறக்கவேண்டியது தான் பாக்கி; 'குபு குபு' என்று வாசனை வீச ஆரம்பித்து விடுகிறதே! அந்த மணமும் மனமும் கலந்து விட்டால், வேறு பேச்சே வேண்டாம்; இந்த உலகத்தி லிருக்கிற நினைப்பே எனக்கு இருப்பதில்லை.

இச்சிறு மொக்குக்குள் இவ்வளவு மணம் எங்கிருந்து வந்து புகுந்துகொண் டிருக்கிறது? நேரம் ஆக ஆகக் காற்றில் கலந்து போய்விடுகிற தில்லையே! அது விரியுமட்டும் துளி வாசனையும் இல்லாதிருந்து மலர்ந்தவுடன் மணத்தை அள்ளி விடுவது ஏன்?

எனக்குத் தோன்றுகிறது: ஏதோ 'நாடகம்' நடத்துகிறது. ஆம், அப்படித்தான் இருக்கவேண்டும். அந்திச் சாயை வந்ததும், மாலை மதியம் என்னவோ சேதி சொல்லி விடுகிறது. 'குளு குளு'த் தென்றல் ஏதோ கனிவுள்ள ரகஸ்யம் பேசுகிறது. அவ்வளவுதான்; முல்லைக் கன்னி, தன் யௌவனத்தின் சோபையைக் காட்ட ஆரம்பித்து விடுகிருள். அந்த ஜொகுஸு வீச்சில் நான் சொக்கிப் போகிறேன். முதலில் ஒரு புன்னகை, அதுவும் எப்படிப்பட்ட புன்னகை! உயிரையே வசப்படுத்துகிற புன்னகைதான். பின்பு, அது சிரிப்பாக மாறிவிட்டாலோ? அடடா! அதை வர்ணிக்க வார்த்தையே இல்லை!

ஒரு பார்ஸி கவி, "வஸந்த காலம் என் மனசைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தின்று விடுகிறது" என்றுனும் உல்லாசப் பெருக்கில்; என் முல்லைக் கன்னியும் என்னை அப்படித்தான் தின்று வருகிருளோ?

நித்தியம் எனக்கு இது ஒரு வேடிக்கை; எப்போதுமே சாயங்காலமாக இருந்துவிட்டால் எத்தனை ஆனந்தமாக இருக்கும்! அதற்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அந்த அபூர்வங்களையெல்லாம் பார்த்துக்கொண் டிருக்கலாமல்லவா?

மௌனி போல் தன் இதழை மூடிக்கொண் டிருக்கையில் அதற்குக் கொஞ்சமும் வாசனை இல்லை; ஆனல், தன் திரையை மெதுவாக நீக்கி இந்த உலகத்தைப் பார்க்க ஆரம்பித்து விட்டாலோ? அப்பா! சொல்லவே வேண்டாம்.

எனக்கு வெகு நாளாக, முல்லை மொக்கு மலர்வதை, நேருக்கு நேராகக் காணவேண்டு மென்று ஆசை. என்னுடைய ஆசை இன்று வரை நிறைவேறவே இல்லை. நானும் தினந்தினம் இந்தக் காட்சியைக் காண உட்காருகிறேன். தன் சின்னஞ்சிறு இலைகளுக் கிடையிருந்து மொக்கு மேலும் கீழும் குலுங்கிக் கொண்டிருக்கிறது, ஒரு ராஜகுமாரி ஊஞ்சலாடுவது போல.

நான், என்னதான் கவனமாகக் கவனித்துக் கொண்டிருந்தாலும் அந்தச் சமயத்தில் ஏமாந்து தான் போகிறேன். நான் ஏமாந்து போகிறேனே அல்லது அது ஏமாற்றி விடுகிறதோ?

பார்த்துக்கொண் டிருக்கையிலேயே என்னைப் பார்த்துச் சிரிக்கிறது. "அடடா, இன்றைக்கும் இப்படிச் செய்துவிட்டாயே! ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாதா?" என்று நான் முணுமுணுப்பதை அது கேட்கிறதாகத் தோன்றவில்லை!

தன்னுடைய கோமளமான சிரிப்பிலும் சிங்காரத்திலும் மயக்கிலுமே அவள் மூழ்கி நிற்கிருள்; அசைந்து கண் சிமிட்டுகிருள்; மணத்தை அள்ளி வீசுகிருள். ஏசுநாதருக்காகக் காத்திருந்தவர்களின் கதையாக என் விஷயமும் ஆகி விடுகிறது.

ஆனலும் தான் என்ன? இப்படி இருக்கும் இந்த விளையாட்டில், எனக்கு ஒரு நாளும் சலிப்பு ஏற்பட்டதே இல்லை; இனியும் ஏற்படப் போவதில்லை. அந்த முல்லைக் கன்னி, மலர்ச்சி ரகஸ்யத்தைக் காட்டா விட்டாலும், தன் உள்ளத்தைத் திறந்து காட்டுகிருள். அதுவே போதும்.

---

### பயம் போன பிறகும்

"யாரோ தன்னைத் துண்டு துண்டாக வெட்ட வருவதாக ஒருவன் கனவு காண்கிருன். பயந்துபோய் உளறிக்கொண்டு அவன் எழுந்திருக்கிருன். கதவைப் பார்க்கிருன். அது உட்பக்கமாகவே தாளிடப்பட்டிருப்பதையும் உள்ளே ஒருவருமில்லை யென்பதையும் தெரிந்து கொள்ளுகிருன். என்றுலும், அவன் நெஞ்சு சற்றுநேரம் வரையில் படபட வென் றடித்துக்கொண்டே யிருக்கும். அதுபோல அபிமானம் அழிந்து போன பிறகும் அதன் அடையாளம் கொஞ்ச காலம் இருக்கும்." —பரமஹம்சர்.

சிறு கதை:

# அவள் கூந்தல்

‘ஜேயார்’

நம் உள்ளத்தில் களிப்பு இருந்தால் நாம் பார்க்கும் பொருள்களி லெல்லாம் மகிழ்ச்சி நிறைந்திருப்பதாய்க் காண்கிறது. நமதுள்ளம் துக்கத்தி லிருந்தால் உலகமே விசனக் கடலுள் ஆழ்ந்திருப்பதுபோலத் தோன்றுகிறது. இராஜம்மாள் விஷயத்தில் தற்போது இது மிகவும் உண்மையாயிருந்தது.

தோட்டத்திலிருந்து புஷ்ப வாசனையைத் திரட்டிக் கொண்டுவந்த மந்த மாருதம் அவளுக்கு இன்ப மளிக்கவில்லை. புத்தகங்கள் வெறும் புலம்பல்களாய்த் தோன்றின. வீணையை மீட்டிப் பார்த்தாள். அதன் கீதம் அழுகுரலா யொலித்தது.

*    *    *    *

“ராஜம்மா! ஒருவிதமா யிருக்கிறாயே இன்று, ஏன் இப்படி?” என்று வினவினாள் சுந்தரம்.

“சுந்தரம்—சுந்தரம்—” என்று திக்கித் திக்கிப் பேசிய ராஜம் “இதோ பார்!” என்று, அவிழ்ந்து தொங்கிய தன் கேசத்தை எடுத்து விசிறினாள். அவளுடைய தாமரைக் கண்களினின்றும் ‘பொல பொல’ என்று கண்ணீர்த் துளிகள் சிந்தின.

ராஜம் ஒரு பிராமண விதவைப் பெண். அறிவு வாராத காலத்திலேயே அவள் கைம்பெண்ணாகி விட்டாள். செல்வக் குடும்பத்தில் பிறந்த ராஜம் துன்ப மறியாது வளர்க்கப் பட்டாள். இப்போது அவளுக்கு வயது வந்துவிட்டது. இனிமேல் அவள் தலையில் கூந்தல் கூடாதாம். இந்த கோரச் செயலுக்கு அவளது அண்ணனும் உடன் பட்டான். தமையன் ஆதரவில்தான் அவள் தற்சமயம் இருந்து வந்தாள்.

“சுந்தரம்! இந்தக் கூந்தல் என்ன பாபத்தைச் செய்தது?—ஐயோ, நினைத்தால் நடுங்குகிறதே!” என்றாள் ராஜம்.

அவளுடைய தோழி சுந்தரம் அளவிறந்த வேதனை யடைந்தாள். ராஜத்திற்கு அவள் எவ்வாறு ஆறுதல் கூறுவாள்? திடீரென்று அவளுக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று.

“ராஜம்! உனக்கு இந்த வீடு எதற்கு? இவர்கள் உன் பந்துக்கள் அல்ல; பகைவர்கள்!” என்று சம்பந்த மில்லாமல் ஆத்திரத்துடன் சொன்னாள்.

ராஜம் சுந்தரத்தின் முகத்தை உற்று நோக்கினாள். அவள் வாய் ஒன்றும் பேசவில்லை.

சுந்தரத்தின் கணவன் தாராளச் சிந்தையும் சீர்திருத்தக் கருத்துக்களும் உள்ளவர். இளம் விதவைகளுக்கு மறுமணம் செய்விப்பதில் சாதகமான அபிப்பிராயங் கொண்டவர். இதைப் பற்றித் தன் அருமைத் தோழியிடம் பிரஸ்தாபிக்க வேண்டுமென்று சுந்தரம் பல நாள் எண்ணியதுண்டு. ஆனால் ஒருவிதக் கூச்சத்தால் இதுவரையிலும் சொல்லாம லிருந்தாள். இப்பொழுது சொல்லலா மென்று நினைத்தாள்—சொல்லிவிட்டாள்.

கொடுமையும், செருக்கும் கலந்ததோர் குறுநகை புரிந்தாள் ராஜம். சிறிது சிந்தித்துப் பின்னர் நெடுமூச்செறிந்தாள். “மறுமணமா?—சுந்தரம்!—இல்லை, இல்லற சுகம் எனக் கில்லை—எனக்கு வேண்டாம்” என்று அழுத்தமாய்க் கூறி மேலும் சொல்வாள்:—

“நான் வேண்டுவது அதுவன்று. என்னை அலங்கோலம் செய்யாமல் விட்டால் போதும். என் புத்தகம், என் வீணை, எனது சிறு தொழில்கள் இவற்றுடன் என் வாணாள் முழுதும் கன்னிகையாகவே யிருந்து நிம்மதியாய்க் காலங்கழிப்பேன்—இதற்கு உன் கணவர் உதவி செய்வாரா?” என்று கேட்டாள்.

*    *    *    *

சுந்தரம் ராஜத்தின் பிடிவாத குணத்தை நன்கறிந்தவள். தன் கணவர் என்னசெய்வா ரென்று திட்டமாய்க் கூறவும் அவளால் முடியவில்லை. பந்துக்களும் உடன்பிறந்த சகோதரனுங்கூடப் பரம ‘சத்துரு’க்க ளாகி விட்ட ராஜத்திற்கு, அவர்களுடைய விரோதத்தின் மேல் தன் கணவர் என்ன உதவி செய்ய முடியும்? சட்டந்தான் இடங்கொடுக்குமோ, என்னவோ? இருந்தாலும் பக்கத்து நகரிலிருந்த அவருக்கு எழுதிக் கேட்கலாமென்று இருவரும் கலந்து முடிவு செய்தார்கள்.

சுந்தரம் தன் கணவனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். ராஜம் அதைப் படித்துப் பார்த்து ஒப்பம் வைத்தாள். கடிதத்தைத் தபாலில் அனுப்பாமல் ஆள்மூலம் அனுப்புவதென்று தீர்மானித்தார்கள். ராஜம் குப்பனைக் குறிப்பிட்டாள்.

“குப்பனா? அவனை நம்பலாமா?” என்று வினவினாள் சுந்தரம்.

“நன்றாய் நம்பலாம். அவன்தான் என்னைச் சிறு குழந்தை முதல் தூக்கி



தோட்டத்தில் ஒரு மரத்தடியில் ராஜத்தின் அழகிய மேனி கிடந்தது.........

வளர்த்தவன். அவனுக்கு ஒரு பெண் குழந்தை யிருந்து தவறிவிட்டது. மனைவியும் காலமானுள். இன்றைக்கும் நாளைக்கும் என்னிடம் அவனுக்கு அளவற்ற வாஞ்சை. இந்த உலகத்தில் அவனுக்கு யார் இருக்கிருர்கள்? என்னைப்போல அவனும் ஓர் அகதி" என்று ராஜம் கனிவுடன் உரைத்தாள்.

"ஆனல் அவன் குடிகாரன்" என்று சிறிது வெறுப்புடன் கூறினுள் சுந்தரம்.

"சிலவேளை அவன் குடிக்கிருன் என்பது உண்மைதான். ஆனல், எப்படியம்மா அவன் அதை விட முடியும்? உனக்கும் எனக்கும் படிப்பு உண்டு; பாட்டு உண்டு; அழகிய சித்திர வேலைகள் உண்டு. கள் வெறியைத் தவிர, அவனுக்கு வேறு என்ன உண்டு?" என்று கேட்டாள் ராஜம்.

"ஆமாம்! அதோடு, இப்படிப் பட்ட ஆட்களுக்குக் கள்ளு, சாராயம் இல்லையானல், நாம் இடும் வேலைகளை அவர்களால் செய்ய முடியாது; செய்யவும் மாட்டார்கள். கொஞ்சம் வித்தியாசமும் வேண்டு மல்லவா?" என்று சுந்தரம் ஒப்பமிடுவதுபோல் உரைத்தாள்.

"நான் அப்படி நினைக்க வில்லை" என்று சுருக்கமாகப் பதிலளித்த ராஜம் "அவனிடந்தான் இந்தக் காரியத்தை ஒப்படைக்க வேண்டும். அவன் குடித்தால் என்ன? அவனது வாத்ஸல்யம் அன்ருே பெரிது!" என்ருள்.

* * *

உண்மையிலே குப்பன் ராஜத்தினிடம் அளவற்ற பிரியம் உடையவன். தனது துக்கத்தை அவனிடம் அவள் தெரிவித்த பொழுது அவன் பெரிதும் வருந்தினன். ஆனலும், அது 'பாப்பாரச் சாத்திர மாயிற்றே' என்று அவன் கொஞ்சம் தயங்கினன். தன் உத்தேச ஏற்பாடு நியாய மென்று அவள் விரித்துக் கூறிய பொழுதுதான், அவளுக்கு ஒத்தாசை புரிய அவன் இசைந்தான்.

குப்பன், விடிய நான்கு நாழிகைக்கு எழுந்திருந்து, நகரை நோக்கிப் புறப்பட்டான். நகரம் சுமார் பத்துமைல் தூரத்தி லிருந்தது. நாகரிகமான கப்பி ரஸ்தா கிடையாது. மண்சாலை தான்.

மெல்ல மெல்ல நடந்து சென்றுன். ஏழாவது மைலில், ஒரு சிறு தோப்பு; அதற்குள்ளே ஓர் குடிசை.

அவன் இளைஞு யிருக்கையில், அந்தத் தோப்பைக் கண்டாலே அவனுக்கு ஒரு வெறுப்பு உண்டு. அதே தோப்பு இப்பொழுது அவனுக்குத் தேவலோகத்தைக் கண்டதுபோல ஆனந்த முண்டாக்குவதா யிருந்தது. ஏன்? அந்தக் குடிசை ஒரு கள்ளுக்கடை. பாவம்! அவன் அப்பேயின் அடிமையா யிருந்தான். வழிச் செலவுக்குக் கொண்டு வந்த காசில் ஒருபகுதி அங்கே தொலைந்தது. குடிசையி லிருந்து திரும்பிய போது அவன் கால் தள்ளாடியது. ரஸ்தாவுக்கு வந்து சேர்ந்து, ஒரு மரத்தடியில் பொத்தென்று விழுந்தான். அமிதமாகக் குடித்ததால் ஏற்பட்ட மயக்கம் அது.

மயக்கம் நன்கு தெளிய வில்லை யெனினும், தள்ளாடிக்கொண்டு எழுந்தான். எதிரே ஒரு வண்டி வருவதைக் கண்டான். அதில் இருந்த ஆளை மட்டும் அவனுக்கு நன்ருக அடையாளம் தெரிந்தது. அந்த ஆள் ராஜத்தின் சகோதரனே.

குடி மயக்கத்தில் நிதானமில்லாத குப்பனுக்கு ஒரு வெறி உண்டாயிற்று. வண்டியின் எதிரே போய் நின்றுகொண்டு, "இது யார் வண்டியடா? இதோ வந்திருக்கிறேனடா காட்டு ராஜா. என் ராஜத்தை மொட்டை யடிக்க உன்ஞலாகுமாடா? இதோ பாரடா?" என்று கனைத்து, வண்டியின் மூக்கணையைப் பிடித்துப் பலமாக அசைத்தான். இதனல் மருண்ட மாடு ஒன்று அவனை முட்டித் தள்ளிவிட்டது.

குப்பனின் பிதற்றல் ராமுவுக்குச் சந்தேகத்தை உண்டாக்கிற்று. மாடு முட்டியதால் கீழே விழுந்து போதையினல் பிதற்றிக்கொண்டு புரண்ட குப்பனை அவன் உற்றுப் பார்த்தான். அவன் மடியிலிருந்து ஒரு கடிதம் தரையில் விழுவதைக் கண்டான். அதை எடுத்துப் பிரித்துப் படித்தான். அவன் முகம் கறுத்தது. சாதிக் கட்டுப்பாடு, சமூகப் பகிஷ்காரம், ஊர் வம்புப் பேச்சு, அவமானம் முதலியவை அவன் மனக்கண் முன் தோன்றின. குப்பனைச் சாலையின் ஒரு புறமாய்ப் புரட்டித் தள்ளிவிட்டு வண்டியிலேறி விரைவாக ஓட்டச் சொன்ஞன்.

* *

அதற்கும் ஒரு நாள்—ஒரு கன்னிகையின் அளகத்தை எடுக்கவும் ஒரு நாள் பார்த்திருந்தார்கள். ராஜம் 'சிறை'ப்படுத்தப் பெற்றிருந்த அறையில் பொழுது புலருமுன் ராமு சென்று நோக்கினன். அவளது வீணை முறிந்து கிடந்தது; புத்தகங்கள் சாம்பராகி யிருந்தன; மணிகளும் பட்டு நூலும் சிதறிக் கிடந்தன; சில அரும்புகளும் மலர்களும் அங்குமிங்கும் கசக்கி யெறியப் பெற்றிருந்தன. ராஜத்தை மட்டில் காணவில்லை. ராமு இரைந்தான்; கூக்குரல் போட்டான். ஆனல், பலன் ஒன்று மில்லை. அங்குமிங்கும் ஓடினன். வீடு முழுவதும் பரபரப்பு.

* * * *

தோட்டத்தில் ஒரு மாத்தடியில் ராஜத்தின் அழகிய மேனி கிடந்தது. அவள் அருகே ஓர் ஆள் நின்ருன். ஈனஸ்வரத்தில் "குப்பா! குடிவெறியிலே நீ எனக்குச் செய்த பணியை நான் வாழுலகிலும் மறக்கமாட்டேன்" என்ருள் கன்னிகை.

குப்பன் முகத்திலறைந்து கொண்டு, "ஐயோ! ராஜம்!—உன் முகத்தையும் இழந்து விட்டேனே—ஐயோ!" என்று கதறினன்.

ராஜத்திற்கு விஷக்கிழங்கு கொணர்ந்து கொடுத்ததற்காக, குப்பன் இப்போது கடுஞ் சிறைவாசம் புரிந்து கொண்டிருக்கிருன். அதன் உண்மையை நாம் அறியோம். ஆனல் ராஜத்தின் தற்கொலைக்குத் தானே காரணம் என்று அவன் ஒப்புக் கொள்கிருன்: "கள் குடித்தே னல்லவா, பாவி?" என்று ஓயாது புலம்புகிருன்.

## இறைவன் நகைக்கும் சமயங்கள்

"ஈசுவரன் இரண்டு சமயங்களில் புன்னகை புரிகிருன்; முதலாவது, ஒருவன் கொடும் வியாதியால் அவஸ்தைப்பட்டு மரணத்தருவாயி லிருக்கும்போது, வைத்தியன் உள்ளேவந்து நோயாளியின் தாயைப் பார்த்து, 'பயப்பட வேண்டாம்; உன் மகனுடைய உயிரைக் காப்பாற்ற நான் இருக்கிறேன்' என்று சொல்லும்போது. இரண்டாவது, இரண்டு சகோதரர்கள் தங்களுடைய நிலத்தைப் பங்கிட்டுக் கொள்ள அளவுகோலைக் கையில் எடுத்துக்கொண்டு கோடு கிழித்து, 'அந்தப் பக்கம் உன்னுடையது, இந்தப் பக்கம் என்னுடையது' என்று சொல்லும்போது."

—பரமஹம்ஸர்.

**உலக மேதாவிகள் :**

# மொழி வளர்த்த காக்ஸ்டன்

‘ஆனந்தன்’

அறிவு முன்னேறுகிறது; நூல்கள் அறிவை முன்னேற்றுகின்றன. எத்தனை வகை நூல்கள் ஓடும் சினிமாச் சுருள் மாதிரி மனித மூளையினின்று அவிழ்ந்து கொட்டுகின்றன! நயாகரா அருவிமாதிரியே உலகில் நூலருவிகளும் பொழிந்தோடுகின்றன! தினந்தினம் ஜனத்தொகையைவிட நூல்தொகை அதிகமாகிறது. அதிலும் இந்த நூற்றாண்டில், அப்பப்ப! சொல்லிமுடியாது; அத்தனை வகை, அத்தனைதொகை, அத்தனை அரிய நூல்கள் வெளிவந்து குவிகின்றன. ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலி, இஸ்பானியம், ருஷ்யம், அரபி, பார்ஸி, உருது, ஹிந்தி, சீனம், ஜப்பானியம், வங்காளம், மராத்தி, குஜராத்தி, தெலுங்கு, மலையாளம், தமிழ் முதலிய எல்லா மொழிகளிலும் நூல்கள் பெருகி வருகின்றன. பத்திரிகைகள் புற்றீசல்கள் போலக் கிளம்பிக் கருடாகாரமாகி, மனித வாழ்க்கையைச் சுற்றி வட்டமிடுகின்றன. இது பத்திரிகை யுகம். பத்திரிகையே உலகை யாளுகிறது. நூல்களே உலகை ஆக்குகின்றன; அறிவை வளர்க்கின்றன.

இத்தனைக்கும் சாதகமா யிருப்பது அதோ ‘கடக் கடக்’ என்று சத்தம் போட்டு உழைக்கிறதே அதுதான்—**அச்சு-யந்திரம்.** நவநாகரிகத்தின் உயிர்த் துடிப்பு அச்சு யந்திரந்தான். நவநாகரிகத்தை ஆக்கும் பணியில் நான் அச்சுத் தொழிலாளிகளையே முன்னே வைப்பேன். நான் சுமார் பத்து அச்சுக் கூடங்களுடன் சம்பந்தப்பட்டிருக்கிறேன்; எனக்கு அச்சுத் தொழிலாளரிடம் அளவற்ற அன்பும் மதிப்பும் உண்டு; மனித நாகரிகத்திற்கு இன்று அவர்களே ஈயத்தினிடையிருந்து கடுமையாகப் பாடுபடுகிறார்கள். எளிய சம்பளம் பெற்று, கண்ணும் கையும் காலும் நோக ஒவ்வொரு எழுத்தாகப் பொறுக்கி, வார்த்தை, வரி, வாக்கியம், பக்கம், பாரம், புத்தகம் ஆகக் கோத்து, இயந்திரத்தில் பாரம் ஏற்றித் தள்ளி அடித்து, நமது அறிவை வளர்க்கும் நூல்களைத் தருகிறார்களே, அவர்களிடம் அனுதாபம் இல்லாத நெஞ்சு கல்லினும் கடியதாகும். ஷேக்ஸ்பியரையும் ஹோமரையும் காளிதாஸனையும் கம்பனையும் நியூட்டனையும் எடிஸனையும் நமக்கு விளக்கியவர் யார் என்றால், இந்த அச்சுத் தொழிலாளர்களையே முதலிற் சுட்டிக் காட்டுவேன். தச்சரும் கொத்தரும் செங்கற் சுண்ணாம்பு மாளிகை கட்டுகிறார்கள்; இவர்கள் அறிவு மாளிகை கட்டுகிறார்கள்.

இந்த அறிவுக் கொத்தரை நினைக்கும்போது, எனக்கு ஒரு மேதாவியின் ஞாபகம் வரும்.

அவன் பெயர் வில்லியம் காக்ஸ்டன். 1422-ஆம் ஆண்டு பிறந்து 1491-ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவன். அவனே அச்சுக் கலையின் அரசன். **சக்தி அச்சகம்** சொக்கழகாக நூல்களை அச்சிடுகிற தென்றால், அது இந்தக் காக்ஸ்டனுக்கே முதல் நன்றி செலுத்த வேண்டும். நமது தமிழ்ப் பெரியார் டாக்டர் சாமிநாத ஐயர், சங்க நூல்களைச் செல்லரித்துப் போகாமல் காத்ததுபோலவே, காக்ஸ்டனும் பழைய ஆங்கில நூல்களைக் காத்தான்—அச்சுத் திறமையால். இங்கிலாந்தில் கெண்ட் ஜில்லாவில் உள்ள டென்டேர்டேன் (Tenterden) என்ற ஊரில் காக்ஸ்டன் பிறந்தான். பெற்றோர் பரம ஏழைகள். அக்காலம் படித்தவர்கள் மிகக் குறைவு; தற்குறிகள் அதிகம். புத்தகங்கள் இல்லை; பைபிள்தான் முக்கியமான நூல். மலையுபதேசத்தைத் தடவாமல் படித்துச் சொன்னால் “ஆஹா என்ன வித்தை பொழிந்து தள்ளுகிறான்!” என்று ஜனங்கள் வியப்பர். ஆனால் பைபிளோ யானை விலை குதிரை விலை—உபதேசியார்கள் கூட வாங்க முடியாமல் அவ்வளவு விலை. சீமையெல்லாம் இப்படி மடமையிருள் நிறைந்திருக்கும்போது, காக்ஸ்டனுக்கு மட்டும் எழுதப் படிக்கக் கற்றுத் தாய்மொழியிலாவது தேர்ச்சி பெறவேண்டுமென்று தோன்றியது. அருமை மகனின் விருப்பத்தை ஏழைப்பெற்றோரும் போற்றினர். காக்ஸ்டன் எண்ணெழுத்துக் கற்றான்; பைபிளைப் படிக்கும் திறமை பெற்றான். அந்தக் காலத்திற்கு அது போதும்; அதற்குமேல் படிக்கவைக்கப் பெற்றோருக்கும் செயலில்லை. வீட்டில் வறுமை; பையன் நாலு பணம் கொண்டு வந்தால் நல்லது. ஆதலால் லண்டனில் ஒரு துணி வியாபாரியிடம் அமர்ந்து காக்ஸ்டன் வியாபாரம் கற்றான். காக்ஸ்டனை வியாபாரி மிகவும் அன்பாக நடத்தினான். சில ஆண்டுகள் வேலைசெய்த பிறகு அவனுக்கு 150 பவுன் சன்மானம் கிடைத்தது. வியாபாரத்திலும் அவன் கைகாரனானான். பல நாடுகளைச் சுற்றித் தொழில் செய்து செழிக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. கையிலிருந்ததை எடுத்துக் கொண்டு அவன் உலாந்தாவிற்குச் சென்று வாணிபத்திற் செழித்தான். அக்காலம் இங்கிலாந்து மன்னன் நாலாம் ஜார்ஜுக்குக் காக்ஸ்டனின் வாணிபத்திறமை தெரிந்தது; அவன் காக்ஸ்டனை புருக்ஸ் (Bruges) என்னும் பெல்ஜிய நகரிலுள்ள ஆங்கில வியாபாரிகளுக்குத் தலைவனாக நியமித்தான்.

வியாபாரத்தில் காக்ஸ்டன் கொழுத்த பணமூட்டையைக் கட்டினான். கட்டித் தலைக்கு வைத்துக்கொண்டு தூங்கினானா? அல்லது மாடமாளிகை கூட கோபுரங்கள் கட்டிச் செல்வச் சோம்பேறியாகக் காற்று வாங்கினானா? இல்லை. வியாபாரத் துறைக்கு வந்தனம் கூறி விலகினான்; கல்வியறிவை வளர்த்தான்; இலக்கியத் துறையில் இறங்கினான்.

தன்னைச் சுற்றியுள்ள ஜனங்கள் படிப்பில்லாமல் மடவிருளில் மடிவதைக் கண்டு பரிதபித்தான்.

நாடெங்கும் கல்வி பரவ, அறிவொளிர ஒரு வழி செய்ய முயன்றான். இச்சமயம் இரண்டு சம்பவங்கள் நடந்தன: (1) ஜெர்மனியில் மேன்ஜ் (Mainz) என்ற தலைநகரம் அழிந்தது; அந் நகரத்தில் அரிய புலவரும் அச்சுத் தொழிலாளரும் இருந்தனர்; நகர் அழிந்தபின் அவர்கள் இத்தாலி, உலாந்தா, பெல்ஜியம் முதலிய நாடுகளுக்குத் தப்பியோடினர். (2) கோன்ஸ்தாந்திநோபிள் வீழ்ச்சியடைந்தது; அங்கிருந்த புலவர் மணிகள் அனைவரும் தங்கள் புத்தகங்களைச் சுருட்டிக் கொண்டு ஐரோப்பாவில் பல நாடுகளுக்குத் தப்பியோடினர்; அவர்களால் அச்சிடுவதற்கு ஏராளமான நூல்கள் கிடைத்தன. காக்ஸ்டன் இந்த இலக்கியங்களில் கண்பாய்ச்சினான். இச்சமயம் அவனுக்கு ஒரு பிரபு குடும்பத்தில் கலியாணமானது. திருமதி காக்ஸ்டனும் நன்றாகப் படித்தவள்; இலக்கிய வளர்ச்சியில் விருப்பங் கொண்டவள். முதலில் காக்ஸ்டன் திராய் வரலாற்றை (History of Troy) ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க முயன்றான்; முடியவில்லை. ஆங்கிலத்தில் வார்த்தையில்லை; முழித்தான். ‘நமது தாய்மொழி எவ்வளவு குறைவுள்ளதா யிருக்கிறது!’ என்று

வெட்கி வருந்தினன். மீண்டும் முயன்று மொழிபெயர்ப்பை முடித்தே தீர்த்தான். 'நமது தாய்மொழியை அமோகமாக வளர்ப்போம்' என்று மனைவி தூண்டினள். 'இலக்கிய சிருஷ்டிமட்டும் போதாது; புத்தகம் எழுதியெழுதிப் பெட்டியில் உறங்கினல் என்ன பயன்? நல்ல நூல்களை அச்சுப் போட்டு ஆயிரம் பதினயிரம் என்று உலகிற் பரப்பவேண்டும்' என்று காக்ஸ்டன் விரும்பி, முதலில் அச்சுத் தொழில் கற்றுத் தேர்ந்தான். பிரேக்ஸில் ஒரு அச்சுக்கூடமும் வைத்தான். அப்படியே முயன்று திராயின் வரலாற்றை (History of Troy) முதலில் அச்சிட்டான். 1474-ஆம் ஆண்டு அந்நூல் வெளிவந்தது; அதுவே ஆங்கிலத்தில் முதன் முதல் வெளிவந்த இலக்கியம். அதற்கடுத்து, சதுரங்கத்தைப் பற்றி ஒரு நூல் வெளிவந்தது.

இனி மளமளவென்று தாய்மொழியை வளர்க்க வேண்டுமென்று விரதம் பூண்டு காக்ஸ்டன் 1476-ஆம் ஆண்டில் லண்டனுக்கு வந்தான். வெஸ்டுமினிஸ்டர் அப்பே அருகே ஒரு கட்டிடத்தில் தனது அச்சுக்கூடத்தை ஸ்தாபித்தான். வின்கின் (Wynkyn) என்ற புகழ்பெற்ற ஜெர்மன் அச்சுப் புலவனை அச்சுத் தலைவன் (ஹெட்மான்) ஆக்கினன். பிறகு மளமளவென்று எண்பது அரிய மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிட்டான். அவற்றுள் 21 அவனே மொழிபெயர்த்தவை. இரவும் பகலும் அச்சுக்கூடத்திலிருந்து அவனே நூல்களைத் திருத்தினன்; பாரமடித்தான். முதலில் நன்னெறி நூல்களையே அவன் டச்சு, பிரெஞ்சு, லத்தீன், கிரேக்கு மொழிகளிலிருந்து ஆங்கிலத்தில் பெயர்த்து வெளியிட்டான். மொழிபெயர்ப்பிற்கு ஆங்கில வார்த்தைகள் கண்டுபிடிக்க ஆள் திணறிப் போனன். சென்னை ரிக்ஷாத் தமிழுக்கும் திருநெல்வேலி வேளாளர் தமிழுக்கும் எவ்வளவு வித்தியாசம் உண்டோ அவ்வளவு வித்தியாசம் அக்காலத்தில் கற்ரோர் ஆங்கிலத்திற்கும், மற்ரோர் ஆங்கிலத்திற்கும் இருந்தது. கெண்டி விருப்பவரின் பரிபாஷைகள் லங்காஷேரி லிருப்பவனுக்கு விளங்காது; அங்கிருப்பவரது மொழிகள் இங்கிருப்பவனுக்குப் புரியாது. ஊருக்கு ஊர் பாஷை வேறுபட்டது. இப்படியிருந்தால் இலக்கியம் உருப்படாது என்று கண்டு, காக்ஸ்டன் ஆங்கில மொழிக்கு ஒரு அளவும் திட்டமும் ஏற்படுத்தினன். 'இன்ன வார்த்தையை இப்படித்தான் உச்சரிக்க வேண்டும். அதற்கு இதுவே பொருள்' என்று வகுத்தான். அந்த ஆங்கிலமே காக்ஸ்டன் ஆங்கிலம் என்பது. அவன் பழைய ஆங்கில இலக்கியங்களை யெல்லாம் தேடிப் பிடித்தான். நமது டாக்டர் சாமிநாதையரைப் போலவே வீடுவீடாகக் கையெழுத்துப் பிரதியைத் துருவி விலை கொடுத்து வாங்கினன். எடுத்ததும் அவன் கையில் சாஸர் (Chaucer) எழுதிய 'காண்டர்பரி கதைகள்' (Canterbury Tales) வந்தது. அதன் நடையும் பொருளும் மொழி நயமும் கண்டு காக்ஸ்டன் சொக்கிப் போனன். அக்கணமே அந்த அரிய காவியத்தை அச்சிட்டு உலகிற களித்தான். காக்ஸ்டன் அச்சிட்டுதவிய சாஸரையே இன்று இலக்கிய உலகம் படிக்கிறது. சாஸர் கவி எழுதினன்; காக்ஸ்டன் அக்கவியை உலகுள்ளமட்டும் வாழவைத்தான். அந்நூல் விரைவாக இரண்டு பதிப்புகள் வெளிவந்தன. அதன் பிறகு மாலோரி எழுதிய 'ஆர்த்தர் இறுதி' (Morte D' Arthur by Molory) அவன் கைக்கு வந்தது. அது வீரச்சுவை ததும்பும் நூல். 'நமது ஜனங்களின் நரம்பில் ஆர்த்தரின் வீரம் உறவேண்டும்' என்று அந்நூலைக் காக்ஸ்டன் அச்சிட்டான். அது ஏராளமாகப் பரவியது. அந்நூலிலிருந்தே டென்னிஸன் ஆர்த்தரைப் பற்றி எழுதிய அரிய காவியம் எழுந்தது.

காக்ஸ்டன் நமது தனித்தமிழ்ப் புலவர்களைப் போல இங்கிலாந்திற்கே உரிய ஸாக்ஸன் (Saxon) மொழிகளை அதிகமாக நூலிற் சேர்த்தான்; அக்காலம் பரவியிருந்த பிரெஞ்சு மொழிகளையும் தாராளமாகக் கலந்தான். பொருள் விளங்க எளிதாகப் பிறமொழிகளையும் கூசாமல் கலந்து தாய்மொழியைப் பெருக்கினன். அவன் சொந்தமாகவும் சில நூல்கள் எழுதி ஆங்கில உரை நடைக்கு வழிகாட்டினன். ஆனல் அவன் பெரிய புலவனல்லன்; தனது எண்ணங்களைக் காலத்திற்கேற்ற எளிய நடையில் வெளியிட்டான். சாஸரை அவன் மஹாகவி யெனப் போற்றினன். இத்தனை வேலையும் தன் முதுமைப் பருவத்திலேயே செய்தான். தாய்மொழித் தொண்டில் அவனுக்கு எவ்வளவு கருத்தும் கவனமும் இருந்தது! எத்தனையோ இலக்கியங்களை அவன் வெளியிட்டிருப்பான். ஆனல் காலன் ஒருவன் இருக்கிருனே; அவன் 'ஸமன் சார்வு' செய்து விட்டான்.

முதுமை; உடல் தளர்ந்து உயிர்க்கிளி பறந்துபோகச் சிறகடிக்கிறது. காக்ஸ்டன் அச்சமயம் தனது ஹெட்மான் வின்கினை அருகே அழைத்து இவ்வாறு சொன்னன்: "என்னருமை வின்கின்! உயிருள்ள மட்டும் நான் தாய்மொழியில் வேண்டிய நூல்கள் வெளியிட்டேன்! இனி நீ இந்த வேலையைச் செய். காக்ஸ்டன் அச்சகத்தை நீ நன்ருக நடத்து. நான் வெளியிட்ட ஆங்கில நூல்கள் மிகச் சில. பிற்காலம் எனது தாய்மொழி உலகை வெல்ல வேண்டும். அதில் மலை மலையாக அச்சு நூல்கள் குவியவேண்டும். சாத்திரங்களெல்லாம் எனது தாய்மொழியில் வெளிவரவேண்டும். இதோ பரமபிதாவின் சமூகத்திற்கு என் ஆவி செல்லுகிறது. அங்கும் இதே வரந்தான் கேட்பேன். தாய்மொழி வாழ்க!" அத்துடன் காக்ஸ்டனின் உயிர்க்கிளி பறந்தது; உடல் புதைந்து அழிந்தது. காக்ஸ்டன் மூட்டிய தாய்மொழிக்கனல் இன்று உலகெங்கும் ஆங்கில நூல்களாக நிரம்பி, அந்த மொழிக்குச் சர்வாதிகாரச் செங்கோலும் அளித்துள்ளது.

## ரேடியோ நாய்

சில நாய்கள் நியூசௌத்வேல்ஸ் போலீஸ் அதிகாரிகளால் ரேடியோ மூலம் பழக்கப்படுகின்றன. ஒரு சமயம் சிட்னியில் ஒரு கண்காட்சி நடந்தது. அங்கு ஒரு நாய் வந்திருந்தது. அதன் முதுகில் கம்பியின் உதவியின்றி மின்சார ஒலி கிரகிக்கும் கருவியும் ஒலி பெருக்கும் கருவியும் கட்டப்பட்டிருந்தன. போலீஸ் அதிகாரி ஒருவர் 150 கஜ தூரமுள்ள ஒரு கட்டிடத்தில் இருந்துகொண்டார். அவர் அங்கிருந்தவாறே கட்டளையிட்டார். கட்டளையின்படி நாய் ஒரு ஏணியில் ஏறியது; மறுபக்கம் இறங்கியது; தண்ணீர்க் குழாய்க்குச் சென்றது; தண்ணீர் குடித்துத் திரும்பியது.

இதே மாதிரியாக அது அதிகாரியால் ஏவப்பட்ட கட்டளை யனைத்தையும் கருத்துடன் நிறைவேற்றியது!

# பாரத சக்தி மஹாகாவியம்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

## ௧௦. திருநாமப் படலம்

செய்கடன் செய்முறை செய்து மன்னனுந்
துய்யநற் பெயரினைச் சூட்ட வேண்டியே
பொய்யறு புலவர்கள் பொருந்தும் ஆலயம்
தெய்வநற் சந்நிதி திகழ நின்றனன்.

குழந்தைக்குச் செய்யவேண்டிய புண்ணியக் கடன்களை முனிவர் வகுத்தமுறையே மன்னவன் செய்தான். பிறகு பிள்ளைக்கொரு பரிசுத்தமான பெயர் சூட்டக் கருதி, பொய்யிலாத சத்திய வித்தகப்புலவர் கூடி பக்தி ஞானசாதனம் செய்யும் கோயிலுட் சென்று திவ்வியமான, தெய்வசந்நிதி முன்னே ஒளிவிளங்க நின்றான். ௧௯௯

பொன்னிடை யரதனம் பூத்த தென்னவே,
அன்னைகை விளங்கிடும் அமுதச் சேயினை,
உன்னத முனிவரும், உலகு போற்றிடும்
மன்னரும், வீரரும் வாழ்த்தி நின்றனர்.

பொன் அணியில் இரத்தினம் பூத்துப் பொலிந்தால் எவ்வளவு அழகாயிருக்கும்! அதுபோலவே அன்னை இந்திரை கையில் அமுதக்குழந்தை விளங்கினான். உன்னதமான யோக சித்தி பெற்ற முனிவர்களும் உலகம் கொண்டாடும் வேந்தரும், ஜயவீரர்களும் அச்சேயைப் பார்த்து மகிழ்ந்து வாழ்த்துகள் பாடி நின்றனர். ௨௦௦

இம்பரும் உம்பரும் இனிது வாழவே
அம்பல நடஞ்செயும் அருளி றைவனை
என்புநெக் குருகிடும் இதயக் காதலால்,
அன்பர்நன் மலர்சொரிந் தடிப ணிந்தனர்.

கோயில் சந்நிதியில் விளங்கும் மூர்த்தி அம்பலவாணன்—நடராஜன். அவன் இந்த உலகும், விண்ணுலகும் இன்பமாக வாழவே ஞானவொளியான பொன்னம்பலத்தில் நடம்புரிகிறான். அவன் உயிர்களுக்கெல்லாம் இகபரசுகங்களை அருளும் இறைவன். சந்நிதியில் இருந்த அன்பர்கள் என்பு நைந்துருகும் உள்ளக் காதலால், ஆர்வத்தால், அப்பெருமானைத் துதித்து, அழகும் மணமும் பொலியும் நல்ல மலர்களைத் தூவி அடிபணிந்தனர். ௨௦௧

"வானெனப், புவியென, வடிவு கொண்டுலாம்
ஊனென, வுயிரென, வுயிரு ளேவளர்
நானென, நடுநிலை நின்ற சாட்சியே
தானென நிலவிடுந் தனி முதல்வனே.

"இறைவனே, நீயே வானாக விரிந்தாய். அதில் காணும் எண்ணில்லா நட்சத்திரங்களும் கிரகங்களும் ஆனாய். அக்கிரகங்களில் ஒன்றாகிய இப்பூமியும் நீயே! இச்சிறு புவியில் எண்பத்துநான்கு கோடி ஊனுடல்களைக்கொண்டு உலாவும் ஜீவராசிகளின் உயிர் நீயே! அந்த உயிருக்குள்ளே வளரும் 'நான்' என்னும் தத்துவம், ஆன்மதத்துவம், நீயே! எதிலும் பற்றில்லாமல், அனைத்திற்கும் நடுவாகி 'தான்' என்று நிலவிடும் சாட்சி புருஷனும் நீயே! ஒப்புயர்வற்ற தனிமுதல்வனே, தலைவனே!" ௨௦௨

ஊட்டியும், உறக்கியும், உலக நாடகம்
ஆட்டியும், பிறவியின் அனலிற் பொன்னென
வாட்டியும், உயிரினை மாச றுத்தொளி
காட்டியும் அருளுவை கருணை வள்ளலே!

"கருணை வள்ளலே! நீ உயிர்களைப் பல பரிணாமப்படிகளில் ஏற்றி மாசறுத்து அருள்புரிந்து ஆட்கொள்ளுகிறாய்; உயிர்களை ஊட்டுகிறாய்; இரவில் உறக்குகிறாய். உயிர்கள் ஆணவம், மாயை, கன்மம் என்னும் மாசுபடிந்து அசுத்தமாயிருக்கின்றன. பிறவிக்கனலில் போட்டு, தனு கரண புவன போகாதிகளைத் தந்து, அனுபவத்தால் பற்றற வாட்டி வாட்டி மாசறுக்கிறாய்.

அது பொற்கொல்லன் பொன்னைத் தூசு நீக்கி மாற்றேற நெருப்பில் வாட்டுவதே போலும். அவ்வாறு மாசற்ற உயிர்களுக்கு நீ உனது பரஞ்சோதியைக் காட்டுகிறாய். உ0௩

உனதரு ளிச்சையே உலகக் கோயிலில்
இனிதுற வுயிர்க்கெலாம் இன்ப மோங்கவே,
எனதருஞ் சேயினை யேற்றுப் போற்"றெனப்
பனிமலர் தூவினன் பாரின் மன்னனே.

இறைவனே! இந்த உலகெல்லாம் உனது திருவருள் விளங்கி விளையாடும் கோயிலாகும். இக்கோயிலில் உனது அருளிச்சையே இறங்கி நிறைவேறவேண்டும்; உனதருளாட்சி வரவேண்டும். இருளரக்கர் ஆட்சி ஒழியவேண்டும். எல்லா வுயிர்களுக்கும் இன்பமே ஓங்கவேண்டும்; துன்பம் நீங்கவேண்டும். இந்தப் பணிக்காகவே என் அருமைச் சேயான, என் குலவிளக்கான, இவனை ஏற்று, நடத்திக் காத்துப் பயன் படுத்திக் கொள்வாயாக!" என்று உலக மன்னனாகிய சத்தியன் இறைவனை நாண்மலர் தூவிப் பணிந்தான். உ0௪

கருத்திலுங் கண்ணிலுங் களி துலங்கிடத்
திருத்தகு சேயினைச் செங்கை யேந்தியே,
நிருத்தங்க ளாடிடு நிமலன் பாதத்தில்
இருத்தினன் முனிவரன் இசை முழங்கவே.

பிறகு, குலகுருவாகிய பாரத முனிவன் கருத்திலும் கண்ணிலும் இன்பம் பொங்க திருமிகுந்த தெய்விகக் குழந்தையைத் தனது புண்ணியச் செங்கையால் அன்புடன் ஏந்தி, ஆன்மாக்களைக் காக்கவே திருநடனம் செய்யும் சுத்தனாகிய நடராஜப் பெருமான் குஞ்சிதபாதத்தின் கீழ் இருக்கும்படி வைத்தான். அப்போது அன்பர் நல்லிசை முழக்கினர். உ0௫

அயர்வறு தவக்கனல் அருளும் யோகியே
உயர்குல விளக்கினுக் குவந்த சீர்பெறும்
பெயரினை யிதுவெனப் பேசி யாள்கென
வியனுறு முனிவனை வேந்து நோக்கினன்.

யோகசித்தியால் அற்புதங்கள் செய்யும் அதிசய முனிவனை அரசன் வணக்கமுடன் பார்த்து, இந்தப்படி வேண்டினன்:— "தளராமல் அரிய தவசாதனங்களைச் செய்து சித்திபெற்று, அன்பருக்கு எப்போதும் தவக்கனலை அருளும் பரமயோகியே! இச்சேய் உயர்வான எனது சித்தி குலத்தின் விளக்காவான். இவனாலேதான் எனது குலம் விளங்கவேண்டும். 'இவனுக்குத் தகுந்த சீரோங்கிய உத்தமப்பெயர் 'இதுதான்' என்று உனது ஞானதிருட்டியிற் கண்டு மொழிவாயாக!" உ0௬

## முனிவன்

சித்தியின் மரபொளி, திருவி ளேங்கிடும்
சத்தியன்–இந்திரை தந்த நல்லொளி,
அத்தனின் அருளொளி, ஆத்ம சோதிபோல்,
சுத்தனென் றுலகெலாம் துலங்கி வாழ்கவே.

முனிவன் அருளினன்: "இந்தக் குழந்தை சித்திகுலத்தைப் புகழோங்க விளக்கும் அறவொளியாகும். மன்னர்க்குரிய எல்லாத் திருக்களும் பெற்றோங்கும் சத்தியனும் கற்பரசியான இந்திரையும் பெற்ற சுபமங்கல விளக்கு. அத்தனாகிய இறைவன் தனது இச்சையை உலகில் நிறைவேற்றி அறங் காக்கவே அனுப்பிய அருள்விளக்கு. இத்தெய்வப் புதல்வன், சுத்தன் என்ற பெயருடன் நித்தியமான ஆத்மஜோதிபோல், உலகெலாம் புகழ் விளங்கி நீடூழி வாழ்க!" உ0௭

சுத்தமே கடவுளின் சொரூபம்; ஆத்தும
சுத்தமே கடவுளைத் துலக்குஞ் சோதியாம்;
சுத்தமே சுகமெனச் சொல்வர்; ஆதலால்
சுத்தனே யிவனெனச் சொல்லு வாமரோ!

"கடவுளின் சொரூபம், இயல்வடிவம் சுத்தமே. கடவுள் சுத்தப்பிரமம். சிவன், விஷ்ணு முதலிய எல்லா மூர்த்திகளுக்கும் சுத்தன் என்ற பெயர் பொருந்தும். ஒவ்வொருவன் உள்ளத்திலும் கடவுள் உண்டு. அதைத் துலக்கும் சோதிவிளக்கு ஆத்மசுத்தமேயாகும். சுத்தமான இறைவனைச் சுத்தமே துலக்கும். ஆன்றோர்கள் காமம் வெகுளி மயக்கம் அற்ற சித்த சுத்தமே இன்பம் என்றனர். ஆதலால் இச்சேயைச் 'சுத்தன்' என்றே சொல்லுவாம். தூய தெய்வப் பொலிவும், ஆத்மசக்தியும், சுத்தியும், அமரானந்தமும் பெற்று இக்குழந்தை நீடூழி வாழ்க!" உ0அ

எல்லையில் அருந்தவன் ஈதி யம்பலும்
பல்லிய முழங்கின, பரந்த தீம்புகை!
மல்லிகை சண்பக மாரி பெய்தன !
நல்லிசை முழங்கின ஞால மெங்குமே.

எல்லையில்லாத அரிய தவம்புரிந்த பாரதமுனிவன் இவ்வாறு சொல்லக் கேட்டதும், மேளதாளம், மத்தளம், குழல், வீணை, பாண்டில் முதலிய பல வாத்தியங்கள் வாழ்த்தொலி முழங்கின. வாசனை தரும் அகில், சூடன் முதலிய புகைகள் எங்கும் பரவின. கடவுளுக்குத் தீபதூபம் காட்டினர். பரிசுத்தத்திற்கு அறிகுறியான மல்லிகை மலரையும், அன்பிற்கு அறிகுறியான சண்பக மலர்களையும் எல்லாரும் அள்ளிக் கடவுள் பாதத்தில் தூவினர். அன்பர் மங்கலகானம் செய்தனர்...உலகமெல்லாம் இச்செய்தி உடனே பரவியதால் எங்குமே இவ்வாறு நடந்தது. உ௦க

மன்னவன் மகிழ்வுற மக்கள் யாவரும்,
தன்னிக ரற்றதோர் தருமக் காவலா,
உன்குல மொன்றல ; வுலகில் வாழ்ந்திடும்
இன்னுயிர்க் கின்பமே இவனென் றோதினர்.

சத்தியராஜன் சுத்தனைக்கண்டு பெருமகிழ் வெய்தினன். மக்கள் அனைவரும் வாழ்த்துகள் கூறி இவ்வாறு மொழிந்தனர் :—" சத்தியராஜனே, உனக்கு நிகர் யாருமில்லை. நீயே இன்று ஒப்புயர்வற்ற தர்மரக்ஷகனாக விளங்குகிறாய். உனது தெய்வச்சேய் உனது குலத்தைமட்டும் புகழ்பெற விளக்கவந்தவனல்லன். இவன் உலகாசான். உலகில் வாழும் எல்லா ஜீவராசிகளும் வேண்டும் இன்பமே இவன் வடிவாக அவதரித்தது !" இதைக் கேட்டமன்னன் பெருமகிழ்வெய்தினன். உக௦

வானர சாட்சியிம் மாநி லம்பெறும்
ஈனவெவ் விருட்பகை யின்மை யாகிடும்
ஞானமா ஞாயிறு போலும் இன்னவன்
வான்புகழ் வாழ்கென முனிவர் வாழ்த்தினர்.

" ஞானசூரியன் போல் இக்குழந்தை அவதரித்தது. இவனால் உலகில் அரக்கர் அடங்குவர். அவரது ஈனமான வெய்ய இருட்பகை இல்லாமல் மறையும். ஒளிமுன் இருள்நிற்காது. இவனால் உலகில் அமரத்தன்மை விளங்கும். இத்தெய்வ மைந்தனின் நீண்ட புகழ் வாழ்க "! என்று தவமுனிவர் ஆசிகூறினர். உகக

வாழிய சத்தியன் வாழி யிந்திரை
வாழிய வையகம் வாழ வந்தசேய்
வீழிய தானவர் ; விளங்கு நல்லருள்
சூழிய வுலகெலாம் சுத்த மங்களம்.

சத்தியன் வாழ்க ! அன்னை இந்திரை வாழ்க ! உலகம் வாழ அவதரித்த தெய்வப்புதல்வன் வாழ்க ! அரக்கர் வீழ்க ! உலகமெல்லாம் நன்மைதரும் அருளாட்சி சூழ்க ! சுத்தமங்களம் விளங்குக ! உகஉ

நாளொடு கோளையு நன்குப் பார்த்தவர்,
வாளொடு வென்றவர் வெற்றி வெற்றியோ ?
தாளொடு மூறிடுந் தவத்தின் சக்தியால்
ஆளுவன் உலகெலாம் அமரச் சேயென்றார்.

குழந்தை பிறந்த நாள் நட்சத்திரம் இலக்கினம் கிரகராசி முதலியவற்றைக் கணித்து நன்கறிந்த சோதிடர், " இவன் தெய்வக் குழந்தை. இவன் பெரிய தவசக்தியின் ஊற்று. அந்த ஊற்று இவன் உடலெங்கும் நிறைந்தது. இவன் தாளில் அச்சக்தி ஊறிப் பொசியும். இவனது தாளைத் தொட்டமாத்திரத்தில் அச்சக்தி தொட்டவருட் பாயும் ; அவரை வசப்படுத்தும். அவ்வாறு இவன் உலகையெல்லாம் தனது தவசக்தியால் வசப்படுத்தி ஆளுவான். அந்த வெற்றியின் முன், பிற மன்னர் வாளால் வெல்லும் மிருகபல வெற்றியும் ஒரு வெற்றியாமோ? இவன் ஆத்மசக்தியே வடிவான அமரச்சேய்." உகரு

பொன்னினும் அரியது புதனென் றோதுவார் ;
மின்னிய நாண்களில் மூலம் மேலென்பார்
கன்னிகை மேலென்பர் கணித்த ராசியில்
இன்னவன் பிறவியின் ஏற்ற மென்சொல்வோம் !

" பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்பர் மேலோர். ஆண்மூலம் அரசாளும். விண்ணில் மின்னும் மீன்களில் மூலமே மேலென்பர். இராசிகளில் கன்னியா ராசியே சக்திக் கனல் அளித்து மேலாக விளங்கும் என்பர். புதன், மூலம், கன்னியாராசியிற் பிறந்த இவனது பிறவியின் உயர்வை என்னென்றுரைப்போம்! " என்று சோதிடர் வியந்துரைத்தனர். உகச

ஆவணி மூலத்தில் அவத ரித்தவன்
பூவணி யாகவே பொலிவன் ; புண்ணியர்
நாவணி யாயிவன் நாம மோதுவார் ;
பாவணி புலவர்கள் இவனைப் பாடுவார்.

" ஆவணி மூலத்தில் அவதரித்த இக்குழந்தை உலகிற்கே தெய்வத்திருவணியாக திவ்யதேஜசைப் பரப்பி விளங்குவான். புண்ணியப் பெரியார் இவனது திருநாமத்தையே தாம் நாவுக்கு அணியாக வைத்து ஜபிப்பர். நாவில் கவிதா சக்தியை அணிந்த அருட்புலவர்கள் இவனைப் பாடிக் கொண்டாடுவார்கள்." உகரு

பெரியவர் இனையவை பேசக் கேட்டலும்
அரியபே ரின்பம்வந் தடைந்ததா மென
வரையறப் பொன்மழை வழங்கித் தானங்கள்
புரிந்தனன் உலகினைப் புரக்குந் தந்தையே.

தன் செல்வனை மகான்கள் இவ்வாறு புகழக்கேட்ட சத்தியராஜனின் தந்தையுள்ளம் தளிர்த்தது. "யாருக்கும் கிடைத்தற்கரிய பேரின்பம் நம்மை வந்து அடைந்தது" எனக் களிப்புற்று, கணக்கில்லாமல் பொன்னை மழைபோல வாரிச்சொரிந்து, தானதருமங்களைச் செய்தான் உலகையாளும் சுத்தன் தந்தை. உகசு

கவிதையுங் கல்வியுங் கலையும் வீரமும்,
நவையறு தொழில்களு நாளு மோங்கவே,
அவரவர்க் கேற்றவை யள்ளி யீந்தனன்
தவம்பெறு மைந்தனைத் தந்த தந்தையே.

நீண்டகாலம் தவஞ்செய்த பயனால் வரத்தக்க மைந்தன் சுத்தன். அவனைப் பெற்ற தந்தை, தனது நாட்டில் கவிதையும் கல்வியும், கலைகளும், வீரமும், குற்றமற்ற தொழில்களும் நாடோறும் செழித்தோங்க, அவ்வத் தொழிலாளருக் கேற்ற பொருள்களை அள்ளித் தந்தான். உகஎ

க0. திருநாமப் படலம் முற்றிற்று.

---

குறிப்பு :—சென்ற இதழில் 198-ஆம் பாட்டு முதல் வரியில் **மாக்கள்** என்பதை **மாந்தர்** என்று திருத்திக்கொள்க.

---

# கொடியின் அறிவு

தாவரங்களுக்கு அறிவு இருக்கிறதா என்று அறிய ஓர் ஆங்கில விஞ்ஞானி ஆராய்ச்சி செய்தார். இவர் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட தாவரம் ஒரு திராக்ஷைக் கொடி.

சுற்றிலும் மரம், செடி, கொடி ஒன்றுமே இல்லாத ஓர் இடத்தில் இந்தத் திராக்ஷைக் கொடியை நட்டார். திராக்ஷை படரும் தன்மை யுடையது. சற்றுத் தூரத்தில் ஓர் குச்சியை நட்டுவைத்தார். இந்தக் கொடி, குச்சியை நோக்கிப் படர ஆரம்பித்தது. பிறகு குச்சியை எடுத்து முன் நட்ட பக்கத்தின் எதிர்ப் புறத்தில் நட்டார். இப்பொழுது கொடியானது நேராக எதிர்ப் புறமாகத் திரும்பிப் படர்ந்து குச்சியைப் பிடித்துக்கொள்ள வந்தது. பிடித்துக் கொள்ளுமுன் சாஸ்திரியார் குச்சியை மறுபடியும் எடுத்து வேறு இடத்தில் நட்டார். குச்சியை நோக்கியே மீண்டும் கொடி படர ஆரம்பித்தது. இம்மாதிரி திரும்பத் திரும்பக் குச்சியை இடம் மாற்றிக்கொண்டே யிருந்தார். கொடியும் படரும் திசையை மாற்றிக்கொண்டே இருந்தது.

திரும்பத் திரும்ப ஏமாற்றப்பட்ட கொடிக்கு இறுதியிலே ஒருநாள் சலிப்பு வந்துவிட்டதுபோ லிருக்கிறது. குச்சியை நோக்கிப் படர்வதை நிறுத்திக் கொண்டது. முன்னைவிட மிகச் சமீபத்தில் சாஸ்திரியார் அந்தக் குச்சியை நட்டபோதிலும் அதை நோக்கிப் படர, கொடி மறுத்துவிட்டது. கடைசியாக, கொடியின் இலையில் படும்படியாகக் குச்சியை நட்ட பிறகுதான், குச்சியிடம் கொடிக்கு மீண்டும் சிரத்தை உண்டாயிற்று. அதைச் சுற்றிப் படரவும் தொடங்கியது. அந்தக் கொடிக்குத்தான் என்ன பொறுமை! என்ன விடாமுயற்சி! என்ன அறிவு!

ஸினிமாக் கடிதம் நெ. 2:

# நடிகருக்கு—

தி. ஜ. ர.

அன்பரே! தாங்கள் ஆணாயிருந்தால், நமஸ்காரம்; பெண்ணாயிருந்தால், இரண்டு நமஸ்காரம். ஸினிமாவிலே உங்களுக்குத்தான் பக்தர்கள் அதிகம்; ஆகையால், உங்களுக்குத்தான், 'தான்' என்ற உணர்ச்சியும் அதிகம். அதிலும் நீங்கள் பெண் தெய்வமா யிருந்துவிட்டால்,......அரகரா! நமஸ்காரம், நமஸ்காரம்.

நீங்கள் நாடக மேடையிலே ஆடிப் பாடி ஓய்ந்துவிட்டு வந்தவர்களா? அப்படியானால், மன்னியுங்கள். உங்களுக்கு இல்லை இந்தக் கடிதம்; மூடிவைத்து விடுங்கள். தமிழ் நாடக மேடையிலே என்ன, எந்த நாடக மேடையிலே ஆடிய நடிகர்களுக்கும் ஸினிமாத் திரையிலே அநேகமாய் வேலையில்லை. ஏனெனில், நாடகத்துக்கும் ஸினிமாவுக்கும் எத்தனையோ வித்தியாசம். நாடக நடிப்பு ஒரு பிறப்பு என்றால், ஸினிமா நடிப்பு மற்றோர் பிறப்பு. வீழ்ச்சியுற்ற தமிழ் நாடக மேடையிலே நடித்தவர்களாயும் இருந்து விட்டாலோ, விமோசனமே யில்லை.

புதிதாக ஸினிமா நடிப்பில் நீங்கள் இறங்கியவர்களா? 'ஆம்' என்றால் உங்களுக்குத்தான் இந்தக் கடிதம். முதலிலே ஒரு ரகஸ்யத்தைக் கேட்கிறேன்; ஒளிக்காமல் சொல்லுங்கள். முதலாளி உங்களை எதற்காகப் பொறுக்கினார்? உங்கள் அழகைக் கண்டு மகிழ்ந்தா? கூச்சப்படாதீர்கள். அதில் தவறொன்று மில்லை. நான் அவர் ஸ்தானத்தி லிருந்திருந்தால், முதலில் உங்கள் ரூப லட்சணத்தைத்தான் கவனித்திருப்பேன். ஸினிமாவிலே நடிகர் அழகு மிக முக்கியம். பல்லும் மூக்கும் நீண்டவர்களைக் கொண்டு படம் பிடித்து, "ஆஹா! வாழ்க்கைக்கு எவ்வளவு பொருத்தமாய், தத்ரூபமா யிருக்கிறது!" என்று கட்சி பேசுவோரில் சேர்ந்தவனல்ல நான். பல்லும் மூக்கும் நீண்ட கோர ரூபங்களைப் பார்க்க ஸினிமாவுக்கா வரவேண்டும்? ஸினிமாவிலே கண்ணுக்கு இனிமை மிக அவசியம். ஆகையால், நீங்கள் அழகா யிருக்கத்தான் வேண்டும். அதிலும் வெறும் அழகு போதாது; படத்தில் அழகா யிருக்க வேண்டும். இல்லையானால், ஒதுங்கி விடுவதே உங்களுக்கும் நல்லது; ஸினிமாவுக்கும் நல்லது. தங்கள் ரூப விகாரத்தை யாராவது படம் பிடித்து விளம்பரம் செய்துகொள்ளுவார்களோ?

அடுத்தபடியாக, உங்களுக்கு நடிக்கத் தெரியுமா? "பாடத் தெரியும்" என்று பதில் சொல்லாதீர்கள். பாடத் தெரிந்தால், கச்சேரி செய்யப் போங்களேன்; ஸினிமாவுக்கு ஏன் வந்தீர்கள்? உங்களுக்கு நன்றாய்ப் பாடத் தெரிவதைவிட நன்றாய் அழத் தெரிந்திருப்பது மேல். ஸினிமாவில் நடிப்பு மிக்க அவசியம். அதற்குக் கற்பனா சக்தியும் புத்திக் கூர்மையும் உணர்ச்சி உள்ளமும் லோகானுபவமும் வேண்டும்.

நடிப்பைப்பற்றித் தப்பான அபிப்பிராயங்கள் நம்மிடையே உலவி வருகின்றன. ஒருவர் ரொம்ப இயற்கையாய், ஸினிமாவிலே கடலை உடைத்துச் சாப்பிட்டாராம். "அபார நடிப்பு" என்று ஜனங்கள் அதை வியந்தார்கள். பின்னால், வேறோர் படத்தில் அவரே ராஜா வேஷம் போட்டார். பழைய கடலை ஆசாமியாகவே அதிலும் இருந்தார்! அவருக்குக் கடலை சாப்பிடத்தான் தெரியும் என்று அப்போது வெளிப்பட்டது. சில மேல்நாட்டு ஸினிமா உற்பத்திச் சாலைகளிலே, நடிகரைப் பொறுக்கும் போது ஒரு பரிட்சை செய்வதுண்டாம். அபேட்சகர்களை ஏதாவது கொஞ்சம் நடிக்கச் சொல்லுவார்களாம். அதற்காக அவர்களை, ஸினிமாக் காட்சிகளை எடுப்பதற்கென அமைக்கப்பட்ட ஜோடனை அறைகளில் ஏதேனும் ஒன்றுக்கு அழைத்துச் செல்வார்களாம். அந்த அறையிலே வெப்பம் புழுங்கிக்கொண்டிருக்கும். ஆயினும், பனிக்காலம் போல் அங்கு காட்சிகள் அமைக்கப்பட்டிருக்கும். அந்தக் காட்சிக்கு போல, அபேட்சகர் கும்மட்டி சென்று கையைக் காய்ச்ச வேண்டும்; 'வெட வெட' வென்று உடம்பை இறுக்கிப் போர்த்திக்கொள்ள வேண்டும். தாமாக இப்படியெல்லாம் அந்த அபேட்சகர் நடிக்கவில்லையானால், அவரை நிராகரித்து விடுவார்களாம். நடிப்புக்கு அவ்வளவு கற்பனா சக்தி வேண்டும்.

உங்களுக்கு நடிக்கத் திறமை உண்மையாகவே இருக்குமானாலும், ஒரு விஷயத்தில் நீங்கள் எச்சரிக்கையா யிருக்க வேண்டும். எல்லோராலும் எல்லாப் பாத்திரங்களையும் நடித்துவிட முடியாது. உங்கள் தேஹவாகு, மனோபாவம் இவற்றிற் கேற்ற பாத்திரங்களாகவே நீங்கள் நடிக்க வேண்டும். இல்லையானால், வேண்டாம் உங்களுக்கு அந்தப் படம்; விலகி விடுங்கள். ஒரு படத்தில் ஏதோ ஒரு பாத்திரமாக நடிக்க ஒப்புக்கொண்ட தட்சணம், அந்தப் பாத்திரமாகவே நீங்கள் மாறிவிடுங்கள். கதையைத் திரும்பத் திரும்பப் படியுங்கள். நடிப்பை மீண்டும் மீண்டும் பயிலுங்கள். கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு, வரம்பை மீறாமல், ஒழுங்காய் நடியுங்கள்; மனம்போன போக்கு வேண்டாம். டைரக்டருக்கும் காமிராக்காரருக்கும் ஒலிப்பதிவாளருக்கும் பூரண ஒத்துழைப்பை அளியுங்கள். "படம் எப்படிப் போனாலும் போகட்டும். நாம் மாத்திரம் நல்ல பெயர் எடுத்துவிட வேண்டும்; எடுத்துவிட முடியும்" என்று எண்ணாதீர்கள். 'சுவரை வைத்துக்கொண்டுதான் சித்திரம்' எழுத முடியும். முழுப்படமும் நன்றாயிருந்தால்தான், உங்களுக்கும் பெயர் கிடைக்கும். நான் உங்களுக்கு உபதேசம் செய்ய வரவில்லை. தமிழ் ஸினிமாக்களிலே உங்கள் போக்கைப் பார்த்துப் பார்த்து மனம் புழுங்கிய பொது ஜனங்களில் ஒருவனது இங்கித வார்த்தைகள் இவை என்று மதியுங்கள். விடை தாருங்கள். நமஸ்காரம்.

உங்கள் அன்பன்.

**நீரிலே படகு, நிலத்திலே மோட்டார்!**



நீரிலே படகாகவும் நிலத்திலே மோட்டாராகவும் ஓடக்கூடிய இந்த வாகனத்தை மியாமியிலுள்ள ஒருவர் கட்டியிருக்கிறார். நீரிலே இப்படிச் சக்கிரங்களை உயரத் தூக்கிக் கொண்டுவிடும்.

யர் காட்சி :

# மன்னன் புதைகுழி முன்

'இலக்கிய மாணவன்'

சபையோரின் உள்ளத்தைக் கலக்கி, மயக்கி, தன்வழி யிழுக்கும் சாதுரியமான பிரசங்கத்தைக் கேட்டால், ஆங்கில இலக்கியப் பரிச்சயமுடையவர்கள், ஆந்தனியின் சொற்பொழிவுமாதிரி யிருக்கிறது என்பதுண்டு. இந்தப் பிரசங்கம், ஷேக்ஸ்பியர் எழுதியுள்ள அரிய நாடகங்களுள் ஒன்றான 'ஜுலியஸ் ஸீஸர்' என்பதில் காணப்படுகின்றது. ஆந்தனியின் பிரசங்கம் அடங்கிய அந்தக் காட்சி, ஜனக்கூட்டத்தின் மனோதத்துவத்தை மிகவும் அழகாக விளக்குவதாகும்.

ஜூலியஸ் ஸீஸர், உலக சரித்திரத்திலே, மிகவும் பிரசித்திபெற்ற மகா வீரர்களுள் ஒருவர். இவர் ரோம் நகரத்தில், கி. மு. ௧00-ஆவது ஆண்டுக்கும் கி. மு. ௪௪-ஆவது ஆண்டுக்குமிடையே வாழ்ந்தவர். ஸீஸர், பிரிட்டனிலும் பிரெஞ்சு நாட்டிலும் திக்விஜயம் செய்து, வெற்றிமாலை சூடியவர். இவரது யுத்த வெற்றிகளைக் கண்டு, ரோமர்கள் ஆச்சரிய மெய்தினார்கள். இறுதியிலே, இவரை இவரது அரசியல் எதிரிகள் சிலர், சூழ்ச்சியாகக் கொலைசெய்துவிட்டார்கள். இந்தச் சதியைத்தான், ஷேக்ஸ்பியர், நாடகமாக்கித் தந்திருக்கிறார். நாடகத்தை அழகு செய்வதற்காக, கலைச்சுவை மிக்க அவர், அதன் பாத்திரங்களையும் நிகழ்ச்சிகளையும் தமது ஓவியக் கையால் இழைத்து, பொலிவுறச் செய்திருக்கிறார்.

ஸீஸரைக் கொலைசெய்த கூட்டத்தவருள், களங்கமற்ற புனித குணம் வாய்ந்த புரூட்டஸும் ஒருவன். ஸீஸரைக் கொன்றதில், பெரும்பாலும் சதிகாரர்களின் நோக்கம், ரோம் நாட்டை, ஸீஸரின் எதேச்சாதிகாரத்தினின்றும் மீட்கவேண்டும் என்பதே யாகும். ஸீஸரைப் போற்றி வந்த கூட்டத்தவருள் ஆந்தனி என்பவன் பிரபலமானவன். ஸீஸரின் சவக்கிரியைக்கு முன், ஜனக்கூட்டத்தில், ஸீஸரின் உயிரற்ற உடலத்துக்கு முன்னே, இரு பிரசங்கங்கள் நடைபெறுகின்றன. பிரசங்கம் செய்வோருள், சதிக் கூட்டத்தைச் சேர்ந்த, புரூட்டஸ் ஒருவன்; ஆந்தனி, மற்றவன். புரூட்டஸின் அனுமதி பெற்றே, ஆந்தனி பிரசங்கம் செய்கிறான்.

சவச்சடங்குக் கூட்டத்தில் ஆந்தனி பிரசங்கம் செய்வதற்கு அனுமதி கொடுக்கும்பொழுது, "உனது சவச்சடங்குச் சொற்பொழிவில், எங்களைக் குறித்துக் குற்றமாக எதுவும் சொல்லலாகாது; ஆனால், ஸீஸரைக் குறித்து உன்னால் சொல்லக்கூடிய நல்லதை யெல்லாம் சொல்லலாம். எங்கள் அனுமதியின் பேரில் பேசுவதாகவும் நீ கூறவேண்டும். இல்லையானால், அவரது சவச்சடங்கில், நீ கலந்துகொள்ளக் கூடாது. எனது பிரசங்கம் முடிந்ததும், உனது பிரசங்கத்தை நீ புரியலாம்" என்று ஆந்தனிக்கு, புரூட்டஸ் கூறுகிறான். தான் வேண்டுவது அவ்வளவே என்று ஆந்தனியும் உறுதி யளிக்கிறான்.

புரூட்டஸிடம், ஜனங்களுக்கு மிக உயர்ந்த மதிப்பு இருக்கிறது. ஜனக்கூட்டத்தின் முன்னே, புரூட்டஸ், மேடைமீது ஏறுகிறான். ஜனங்களின் பேரன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமானவனாகவே, அவன் காணப்படுகிறான். ஜனங்கள், அவனது செயல்—ஸீஸரைக் கொன்ற சதியில் அவன் கலந்துகொண்டது—நியாயமாகவே யிருக்கும் என்ற நம்பிக்கை உடையவர்களாக விருக்கிறார்கள். புரூட்டஸ் தனது பிரசங்கத்தினிடையே, தான் ஸீஸரின் நண்பனே யென்று கூறுகிறான். எனினும், தான் ஸீஸருக்கு விரோதமாகக் கிளம்பியதேன் என்பதன் காரணத்தை அவன் சுருக்கமாக உரைக்கிறான்.

புரூட்டஸ், தனது பிரசங்கத்தினிடையே கூறுவதாவது:—"ஸீஸரை நான் கொன்றது அவரை நான் குறைவாக நேசித்ததா லல்ல; ஆனால், ரோம் நாட்டை நான் அதிகமாக நேசித்ததாலேயே. ஸீஸர் உயிருட னிருக்க, யாவரும் அடிமைகளாக இறக்க விரும்புவீர்களா; யாவரும் சுதந்திர மனிதர்களாக வாழ்வதற்காக, ஸீஸர் இறப்பதை விரும்புவீர்களா? என்னை ஸீஸர் நேசித்தார்; அவருக்காக நான் துக்கப்படுகிறேன். அவர் அதிருஷ்டசாலியாக விருந்தார்; அதற்காக நான் களிக்கிறேன். அவர் வீரராக விளங்கினார்; அவருக்கு எனது மதிப்பைச் செலுத்துகிறேன். ஆனால், அவர் பேராசை கொண்டார்; அவரை நான் கொன்றுவிட்டேன். அவரது நேசத்திற்குக் கண்ணீர்; அவரது பாக்கியத்திற்குக் களிப்பு; அவரது வீரத்துக்கு மதிப்பு; அவரது பேராசைக்கு மரணம்." இவ்வாறு, காரணகாரிய விளக்கத்தோடு, சுருக்கமாக, விவேகத்துக்கு ஒத்த முறையில், புரூட்டஸ் பேசுகிறான். ஜனங்கள் புரூட்டஸின் சொல்லை ஏற்கிறார்கள். தான் தவறு செய்தால், தன் நாட்டவர் தன்னையும் இவ்வாறே கொன்றுவிடலாம் என்றும் அவன் கூறுகிறான். ஜனங்கள் அவனை வாழ்த்துகிறார்கள்.

புரூட்டஸின் பிரசங்கம் முடிந்ததும், ஜனக்கூட்டத்தின் மனப்பான்மை, சதிக்கூட்டத்தவர் செயலை ஆதரிப்பதாக விருந்தது. ஆனால், புரூட்டஸ் கூறிய காரணத்தை, ஜனத்திரள் நன்கு விளங்கிக்கொள்ள வில்லை என்பது, பின்னால் விளக்கமாகின்றது. பொதுவாக, புரூட்டஸிடம் ஜனங்களுக்கு நல்ல மதிப்பு. புரூட்டஸ், அறிஞன்; உயர்குணம் வாய்ந்தவன்; குழந்தைகளைப்போல் வெள்ளை யுள்ளம் படைத்தவன். இவற்றால், ஜனங்கள், அவனை நேசித்தது இயல்பு. ஆனால், ஸீஸரின் மரணம், ஓர் பெருநிகழ்ச்சி. ஜனங்கள் யாவராலும் பெரிதும் வியந்து போற்றப்பெற்ற ஓர் மகாவீரர் சதிசெய்து கொல்லப் பெற்றார் எனில், சாதாரண ஜனங்களின் உள்ளம் பரபரப் பெய்தியிருத்தல் நிச்சயம். இந்நிலையில்தான் ஆந்தனி பேசப் போகிறான்.

தான் பேசி முடிந்ததும், ஆந்தனியின் பிரசங்கத்தையும் ஜனங்கள் கேட்க வேண்டுமென்று, அவர்களை புரூட்டஸ் வேண்டிக்கொள்ளுகிறான். தான்மட்டும் கூட்டத்தை விட்டுச் செல்லுவதாகக் கூறி, ஜனங்களில் எவரும் போகக்கூடாதென்றும் கேட்டுக்கொள்ளுகிறான். புரூட்டஸின் வேண்டுகோளுக் கிணங்கியே, ஜனங்கள் ஆந்தனியின் பேச்சைக் கேட்க இசைகிறார்கள். "புரூட்டஸைக் குறித்து, ஆந்தனி தீங்கொன்றும் பேசலாகாது" என்று ஜனங்களுள் ஒருவர் கத்தினார். "ஸீஸர் கொடுங்கோலன்" என்று ஒருவர் கூவினார். எனினும், ஆந்தனியின் பிரசங்கத்தை அமைதியுடன் கேட்கிறார்கள், புரூட்டஸின் கட்டளைக் குட்பட்டு.

"புரூட்டஸுக்காக வேண்டியே, உங்கள்முன் இங்கு நான் நிற்கிறேன்" என்று ஆந்தனி தொடங்குகிறான். ஜனங்களின் கவனத்தை இழுக்க வேறு வழியில்லை என்று, ஆந்தனி தனது பிரசங்கத் துவக்கத்தில் உணர்கிறான். "ஸீஸரைப் புதைப்பதற்காக வந்திருக்கிறேன்; அவரைப் புகழவல்ல. மனிதர்கள் செய்யும் பாவங்கள் அவர்க ளிறந்த பின்னும் நிற்கின்றன; அவர்கள் செய்த

புண்ணியங்கள் அநேகமாக அவர்களது எலும்புகளுடன் புதைபட்டு விடுகின்றன. ஸீஸர் விஷயத்திலும் இவ்வாறே யாகட்டும்" என்று, முதலிலேயே, நஞ்சை, தனது வாக்கில் கலக்கிறான். ஆனால், அது ஜனங்களின் அறிவுக்குப் புலப்படவில்லை. உணர்ச்சியிலே விஷத்தைத் தைக்கும்பொழுது, அறிவு செயலற்று விடுகிறது.

"பெருமைதங்கிய புரூட்டஸ், ஸீஸர் பேராசை கொண்டவரென உங்களுக்குக் கூறினார். அவ்வாறாயின், அது வோர் கொடும் பிழையாகும்; ஸீஸர் அதற்குரிய கொடும்பலனை அனுபவித்துவிட்டார்" என்று, ஆந்தனி மேலே தொடர்ந்துரைக்கிறான். புரூட்டஸையும், அவனது தோழர்களையும் பற்றி, இடையிடையே "கனந் தங்கியவர்கள்" என்று அடிக்கடி குறிப்பிடுகிறான். ஜனங்கள் தன் வார்த்தையை அமைதியாகக் கேட்க வேண்டுமாயின், இவ்வாறு செய்வது தேவையென்பது அவனது எண்ணம். ஸீஸர் அநேகரைச் சிறைப்பிடித்து ரோமுக்குக் கொண்டுவந்தார் என்றும், அவர்களின் மீட்புக்காகச் செலுத்தப்பட்ட திறைகள் ரோமின் பொக்கிஷத்தை நிறைத்தன வென்றும், ஸீஸருக்கு மும்முறை கிரீடம் அளிக்கப்பட அதனை ஏற்க அவர் மறுத்துவிட்டார் என்றும் கூறி, "இது பேராசையா?" என்று அவன் வினவுகிறான். நாட்டிலே ஸீஸர் ஏதேச்சாதிகாரம் புரிந்ததையும் அவரது அகங்காரத்தையும் மறக்க இவை போதுமா என்பதை, ஜனங்கள் சிந்திக்கமாட்டார்கள் என்பது ஆந்தனிக்குத் தெரியும்.

பின்னால், ஆந்தனி, முற்றிலும், ஜனத்திரளின் உணர்ச்சியைக் கலக்கும் அலைகளையே எழுப்புகிறான். "நேற்று தினம், ஸீஸர் உலக முழுவதையும் எதிர்த்திருப்பார். இப்பொழுதோ, இதோ கிடக்கிறார்; அவருக்கு வணக்கம் செலுத்தக்கூடிய அவ்வளவு தாழ்ந்தவர் இப்பொழுது எவருமில்லை. கனவான்களே! உங்கள் உள்ளத்தையும் மனத்தையும் கலகத்தக்கும் கோபத்துக்கும் தூண்ட யான் விரும்பினேனாயின், புரூட்டஸுக்குத் தீங்கு செய்வோனாவேன்; காஸியஸுக்குத் தீங்கு செய்வோனாவேன். அவர்களோ கண்ணியம் வாய்ந்தோரென்பது நீங்கள் யாவரும் அறிந்தது. அவர்களுக்கு நான் தீங்கிழையேன். இத்தகைய கண்ணியம் வாய்ந்த அவர்களுக்குத் தீங்கு புரிவதைவிட, இறந்தவருக்குத் தீங்கு இயற்றுவதே, எனக்கும் உங்களுக்கும் தீங்கு புரிந்துகொள்வதே, மேலெனத் தேர்வேன்" என்று, ஆவேசம் உண்டாகத் தக்கவாறு, தீ வைக்கிறான்.

ஷேக்ஸ்பியரது ஜனக்கூட்டத்தின் தன்மையையும், ஆந்தனியின் சொற்சாதுரிய தந்திரங்களையும் கூர்ந்து நோக்கவேண்டும். ஷேக்ஸ்பியரின் ஜனக்கூட்டத்திற்கு, படாடோபமும் பரபரப்பூட்டத்தக்க தூண்டுதல்களும் தேவையாயிருக்கின்றன. வெகு சீக்கிரத்தில், உணர்ச்சி அலைகள், மின்சார அலைகளைப் போல, அவர்களது உள்ளங்களை இயக்கி விடுகின்றன. அவர்கள், நொடியிலே மனம் மாறி விடுகிறார்கள்.

துவக்கத்தில், ஜனத்திரள், புரூட்டஸுக்குச் சாதகமா யிருக்கிறது. ஜனங்களின் கருத்துக்குச் சிறிது மாறுபடப் பேசினும், அவர்கள் பொறுமையிழந்து, அமைதி குலைந்து, ஆந்தனியை அடக்கிவிடக் கூடும். எனவே, புரட்சிக்காரர்களைக் 'கண்ணியம் வாய்ந்தவர்' என்று, திரும்பத் திரும்பக் கூறும் ஆந்தனி, ஜனக்கூட்டத்தின் அமைதிக்கு அணைகோலிக் கொள்ளுகிறான். ஆனால், அவனது நோக்கம், ஜனங்களைப் புரட்சியாளருக்கு விரோதமாக எழுப்பிவிட வேண்டுமென்பது. இதற்காக, ஸீஸரிடம் ஜனங்களின் அனுதாபத்தை எழுப்ப முயலுகிறான். எனவே, ஸீஸரின் சில செயல்களை உணர்ச்சி நிறைந்த சொற்களால் புகழ்ந்துரைக்கிறான். அதில் விஷத்தையும் கலந்து விடுகிறான். இவ்வாறு செய்துவிட்டு, ஜனங்களிடம் ஓர் ஆவலையும் எழுப்புகிறான்.

பின்னால், "ஸீஸரின் முகரிட்ட பத்திரமொன்று இதோ இருக்கிறது. அவருடைய அந்தரங்க அறையில், இதனை நான் கண்டெடுத்தேன். இது அவருடைய உயில்" என்று கூறும் ஆந்தனி அதைப் படிக்காமலே, நேரத்தைக் கடத்துகிறான். அந்த மரண சாசனத்தைப் படிக்குமாறு, ஜனங்கள் வேண்டுகிறார்கள். "பொறுமையா யிருங்கள், கண்ணியமிக்க நண்பர்களே! நான் இதனைப் படிக்கலாகாது. உங்களை ஸீஸர் எவ்வளவு நேசித்தார் என்பதை நீங்கள் அறிதல் நன்றன்று. நீங்கள் மரக்கட்டையல்ல; கல்லல்ல. நீங்கள் மனிதர்கள். நீங்கள் மனிதர்களாதலின், ஸீஸரின் உயிலைக் கேட்பீர்களாயின், என்னால் நீங்கள் ஆவேசங்கொள்ளத் தூண்டப்பட்டவர்களாவீர்கள்; அது உங்களை வெறிகொள்ளச் செய்துவிடும். ஸீஸரது சொத்துக்கு நீங்கள் வாரிசுகளா யிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறியாதிருப்பது நல்லது. ஏனெனில், அதனை நீங்கள் அறிவீர்களாயின், என்ன வந்து விடுமோ!" என்று, ஆந்தனி நடிக்கிறான். அந்த உயிலைக் கேட்கவேண்டுமென்று, ஜனங்களுக்கு ஆவல் இன்னும் அதிகரிக்கிறது.

உயிலை வாசிக்கும்படி ஜனங்கள் மறுபடியும் கூக்குரல் போடுகிறார்கள். உயிலை வாசிக்கு முன்னர், அதனை எழுதிவைத்தவரைக் காட்ட விரும்புவதாக, அவன் கூறுகிறான். ஜனங்கள் அதற்குச் சம்மதிக்கிறார்கள். ஆந்தனி, மேடையை விட்டுக் கீழே யிறங்கி, ஸீஸரின் ஒவ்வொரு காயத்தையும் ஜனங்களிடம் காட்டி, மிக உருக்கமாகவும், ஆத்திர மூட்டத் தக்க விதமாகவும் பேசுகிறான். கீழே யிறங்கிய பின்னர், புரூட்டஸுக்குத் தான் கொடுத்த வாக்குறுதியையும் மீறி, புரூட்டஸ் முதலியோரைச் சதிகாரர்கள் என்று கூவுகிறான். ஏனெனில், மேடையைவிட்டுக் கீழிறங்கியதும், அவ்வுறுதி தன்னைக் கட்டுப்படுத்ாதென்று கருதிவிட்டான். ஆந்தனியின் நோக்கம், பயன்பெறத் தொடங்குகிறது. பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்று ஜனங்கள் கூக்குரல் போடுகிறார்கள்.

மறுபடியும், ஆந்தனி பேச ஆரம்பிக்கிறான்: "நண்பர்களே! உங்கள் உள்ளத்தைக் கொள்ளைகொள்ள நான் வரவில்லை. நான் புரூட்டஸைப் போல வாக்குவல்ல பிரசங்கி யல்ல. ஆனால், எனது நண்பரை நேசிப்பவன் நான்; வெளிப்படையாக, உள்ளது உள்ளவாறு பேசுவோன் நான் என்பதை நீங்கள் யாவரும் அறிந்திருக்கிறீர்கள். பகிரங்கமாகப் பேச எனக்கு அனுமதி தந்தவர்களுக்கு, இது தெரியும். ஏனெனில், மனிதர்களின் ரத்தத்தைக் கொதிக்கச் செய்யுமாறு பேச ஞானமோ, சொற்களோ, தகுதியோ, அபிநயமோ, தொனியோ, பிரசங்க வன்மையோ உடையோன் அல்லேன். உங்களுக்குத் தெரிந்ததையே, நானும் கூறுகிறேன். ஸீஸரின் காயங்களை உங்களுக்கு நான் காட்டுகிறேன். எளிய, ஊமையான வாய்கள்போன்ற அவை எனக்காகப் பேசட்டும். ஆனால், நான் புரூட்டஸாகவும் அவன் ஆந்தனியாகவு மிருந்தால், அந்த ஆந்தனி, உங்கள் உணர்ச்சிகளைப் பொங்கச் செய்திருப்பான்; ஸீஸரின் ஒவ்வொரு காயமும் உங்களிடம் பேசுமாறு செய்திருப்பான். அது ரோமிலுள்ள ஒவ்வொரு சமாதியிலுள்ளவரும் உயிர்த்தெழுந்து கலகம் செய்யச் செய்திருக்கும்" என்று உத்வேகத்தோடு கூறுகிறான்.

ஜனங்கள் உயிலையும் மறந்து, "கலகம் செய்கிறோம்", "புரூட்டஸின் மனையைத் தீக்கிரை யாக்குகிறோம்", "வாருங்கள்! சதிகாரர்களைத் தேடுவோம்" என்று கூச்சலிடத் துவக்குகிறார்கள். இப்போதுதான், ஆந்தனி உயிலின் பொருளை அவர்களுக்குக் கூறுகிறான். தமது பணத்தையும் சோலைகளையும் ஜனங்களுக்கு ஸீஸர் எழுதிவைத்

திருப்பதாகச் சொல்லி, "இத்தகைய ஒரு ஸீஸர் இருந்திருக்கிறார். இவரைப் போல இனி யார் வரப் போகிறார்கள்?" என்று வினவுகிறான். இதோடு ஜனங்கள் கலைகிறார்கள். தனியே நிற்கும் ஆந்தனி, "வேலை நடக்கட்டும். சூழ்ச்சியே! உன்னைத் துவக்கி வைத்தாயிற்று; உன் விருப்பமான பாதையில் செல்" என்று கூறிக் களிக்கிறான்.

களங்கமற்ற புரூட்டஸுக்கு ஜனத்திரளின் மனோதத்துவம் தெரியவில்லை. அவன் சூழ்ச்சிகள் தெரியாதவன்; பிறரையும் தன்னைப்போலவே நம்பும் தன்மை வாய்ந்தவன். சவப்பிரசங்கம் செய்ய ஆந்தனி விரும்பிய பொழுதே, அதற்கு அனுமதிக்கலாகாதென்று, புரூட்டஸின் தோழன் காஷியஸ் என்பவன் புரூட்டஸுக்கு உரைத்தான். எனினும், தம்பியுரை செவிக்கேறாது, மானைத் தொடர்ந்த ராமனைப்போல, ஆந்தனிக்கு, புரூட்டஸ் அனுமதி தந்துவிட்டான். அதன் பலன் இது! ஜனக்கூட்டத்தின் முன்னே, தருக்க முறைப்படி சுருக்கமாக புரூட்டஸ் பேசுகிறான். தான் இல்லாத சமயத்தில் ஆந்தனி பேச, அனுமதித்துச் செல்கிறான். ஸீஸரின் நண்பனான ஆந்தனியின் இயல்பையும் அவன் உணரத் தவறிவிட்டான். யாரிடத்தும் தருக்கம் செய்வதில் பயனில்லை என்பதை அவன் அறியவில்லை. ஆந்தனியோ, ஜனக்கூட்டத்தின் மனோதத்துவத்தை உணர்ந்து, சாதுரியமாகப் பேசி, அவர்கள் மனத்தைத் திருப்புகிறான். அவர்களது, உணர்ச்சியைக் கொதிப்படையச் செய்யும் தந்திரத்தை அவன் கைக்கொள்ளுகிறான். அது பலித்துவிடுகிறது. ஜனக்கூட்டத்தின்மீது உணர்ச்சியும் அறிவும் நடத்திய பந்தயத்தில், அறிவு தோற்று, உணர்ச்சி வென்று விடுகிறது!

## அழியாத கிரீஸ்

மேல் நாட்டு நாகரிகம், கலை, யாவற்றிற்கும் கிரீஸ் உறைவிடமாகக் கருதப்படுகிறது. கிரீஸின் சரித்திரத்தில் வீரப் பிரதாபமான சம்பவங்கள் நிறைந்திருக்கின்றன. தெர்மாபிலே என்னும் ஒரு கணவாயில் சுமார் 400 பேர் நின்றுகொண்டு லட்சக் கணக்கான எதிரிகளைத் தடுத்து நிறுத்தி இருக்கின்றனர். கிரீஸின் சுதந்திரத்தைப்பற்றி, பைரன் என்னும் ஆங்கிலக் கவிஞர் உணர்ச்சியூட்டும் உன்னதக் கவிதைகளை எழுதியிருக்கிறார். அந்நாடு அழியாது. இன்று வீழ்ந்தாலும் நாளை உயிர் பெற்றெழும். அவ்வளவு சக்திவாய்ந்த தேசத்தை இதாலி சோதனை செய்கிறது. இது கொள்ளைக்காரர் காலம். ஆனால் என்றும் இப்படியே இருந்து விடாது. இவ்வுலகைக் கருணைநிறைந்த பரம்பொருள் ஆள்வது உண்மையாயிருந்தால், கிரீஸ் சாக முடியாது. —'ஹிந்துஸ்தான்.'

குழந்தைகள் அறிவு:

# குற்றச் சட்டம்

**லியோ டால்ஸ்டாய்**

கிரிஷ்கா: வயது 12.

ஸெம்கா: வயது 10.

திஷ்கா: வயது 13.

திஷ்கா: பிறத்தியாருடைய நெற்குதிரில் இனி அவன் திருட்டுத்தனமாய் நுழையாதபடி, அவனை ஜெயிலில் போட்டுவிடுவார்கள். இன்னொருதரம் திருட, அவன் பயப்படுவான்.

ஸெம்கா: அவன் நிஜமாகவே திருடியிருந்தால் இது சரி. ஆனால், மிட்ரோபானை, தப்பிதமாய் ஜெயிலுக்கு அனுப்பி விட்டார்கள் என்று தாத்தா மிகிடா சொல்லுகிறாரே!

திஷ்கா: என்ன சொல்லுகிறாய்? தப்பிதமாகவா? அவனைத் தப்பிதமாய்த் தண்டித்த மனிதருக்குத் தண்டனை கிடைக்காதா?

கிரிஷ்கா: அவர் தப்பிதமாய்த் தண்டித்திருந்தால், அவரைச் சொப்பை தட்டிக் கொடுக்கமாட்டார்கள். அவருக்கும் தண்டனை கிடைக்கும்.

ஸெம்கா: யார் அவரைத் தண்டிப்பார்கள்?

திஷ்கா: அவருக்கு மேலே யுள்ளவர்கள்.

ஸெம்கா: அவருக்கு மேலே யார் இருக்கிறார்கள்?

திஷ்கா: மேலதிகாரிகள்.

ஸெம்கா: அந்த மேலதிகாரிகளும் தப்பிதம் செய்துவிட்டால் —?



கிரிஷ்கா: இன்னும் மேலேயுள்ள அதிகாரிகள், அவர்களைத் தண்டிப்பார்கள். அதற்காகத்தான் ஜார் மன்னர் இருக்கிறார்.

ஸெம்கா: ஜார் மன்னர் தப்பிதம் செய்தால், அவரை யார் தண்டிப்பார்கள்?

திஷ்கா: 'யார் தண்டிப்பார்கள்? யார் தண்டிப்பார்கள்?' நமக்குத் தெரியும்.........

கிரிஷ்கா: அவரைக் கடவுள் தண்டிப்பார்.

ஸெம்கா: அப்படியானால், நெற்குதிரில் தொற்றிய மனிதனையும்தான் கடவுள் தண்டிப்பாரே? ஆகையால், கடவுள் ஒருவரே, குற்றவாளியைத் தண்டிக்க வேண்டும். கடவுள் தப்பிதமே செய்யமாட்டார்.

திஷ்கா: ஆனால், நீ பார், அந்த மாதிரி நடக்கமுடியாது!

ஸெம்கா: ஏன் முடியாது?

திஷ்கா: ஏனென்றால்.......

பிரபலஸ்தர் வரிசை 5:

# ★ சர்வாதிகாரி ஸ்டாலின் ★

ஆற்றங்கரையிலே ஒரு பழக்கடை. அதற்குள்ளே நுழைந்து ஒரு பெரிய கக்கரிப் பழத்தைத் திருடிக் கொண்டு வெளிக் கிளம்புகிறான் ஒரு சிறுவன். கடைக்காரிகள் கண்டு விடுகிறார்கள்; சிறுவனை விரட்டுகிறார்கள். சிறுவன் இடியிடி யெனச் சிரித்துக் கொண்டே, பழத்தோடு ஆற்றிலே குதிக்கிறான். பழம் முன்னே மிதக்க, ஆனந்தமாய் நீந்தி அதை அக்கரைக்குத் தள்ளிக்கொண்டு போகிறான் சிறுவன். கடைக்காரிகள் கையைப் பிசைந்து, சிறுவனைச் சபித்துக் கொண்டு இக்கரையிலே நிற்கிறார்கள். சிறுவன் தனி ஆளல்ல. அக்கரையிலே, தங்களது இந்தத் தலைவனின் வருகையை நோக்கி, குதூகலமாய் நிற்கிறார்கள் பல சிறுவர்கள். பழம் கரை சேர்ந்ததும் எல்லாச் சிறுவர்களுக்கும் குஷியாய் விநியோகம் நடக்கிறது. எல்லாரும் தின்று களிக்கிறார்கள். இப்படிச் சிறுவர்களைச் சேர்த்துக் கொண்டு ஒரு காலத்தில் பால்ய லீலைகள் நடத்திய அந்தச் சோர வாலிபன்தான், இன்று ருஷ்யாவின் சர்வாதிகார பீடத்தில் அமர்ந்திருக்கும் ஜோஸப் ஸ்டாலின்.

ஸ்டாலினின் தகப்பனார் ஒரு தையற்காரர். ஆசியாக் கண்டத்தையும் ஐரோப்பாக் கண்டத்தையும் இணைக்கும் காக்கஸ் பிரதேசத்தில் ஜியார்ஜியா என்ற ருஷிய மாகாணத்தில் கோரி என்னும் ஊரில் 1879-ஆம் ஆண்டு அந்த ஏழைத் தையற்காரரின் மகனாய்ப் பிறந்தார் ஸ்டாலின். சிறு வயதிலே, மகா விஷமம். கிராமக் குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு ஸ்டாலின் ஒரு முறை யுத்த விளையாட்டு நடத்தியபோது, பல பெரிய வைக்கோற் போர்கள் எரிந்து விட்டன. யார் செய்த புண்ணியமோ, ஊர் முழுதுமே அப்போது பற்றியெரியாமல் தப்பியது அதிர்ஷ்ட வசமேயாகும். ஸ்டாலின் குழந்தை நடத்திய யுத்தம் வெறும் யுத்தமல்ல; வெடிமருந்தும் வைத்துக்கொண்டே நடந்தது. அதுதான் வைக்கோற் போர் கொளுத்தப் பட்ட காரணம்.

ஸ்டாலினின் இயற்பெயர் ஜுகாச்வில்லி என்பதாகும். ஆனால், ஸோஸோ என்ற செல்லப் பெயரால்தான் தாயார்



அழைப்பாள். குழந்தையின் துஷ்டத்தனத்தைக்கண்டு பெற்றோருக்குச் சகிக்கவில்லை. டிப்ளிஸ் என்ற நகரிலே பாதிரி-படிப்புக் கற்பிக்கும் ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்கள். பள்ளிக்கூடத்திலேயேதான் சாப்பாடும் வாசமும். பள்ளிக்கூடத்தில் சிறுவன் என்ன அட்டகாசம் செய்கிறானோ என்று பெற்றோருக்குப் பரம கவலை. ஒரு மாதம் கழித்து, பள்ளிக்கூடத் தலைவரைக் கண்டு, உள்ளத்தில் கலங்கிக்கொண்டே, "குழந்தை எப்படி யிருக்கிறான்?" என்று கேட்டார்கள். "மகா பதவிசு. ரொம்பப் புத்திசாலித் தனமாய்ப் படிக்கிறான்" என்ற ஆச்சர்யமான பதில் கிடைத்தது. வெளியிலே மகா விஷமம் செய்த சிறுவன் பள்ளிக்கூடத்திலே மகா ஊக்கமாய்ப் படிக்கலானான்! நான்கு வருஷங்கள் இதே ஊக்கம், இதே நாணயம், இதே யோக்கியமான நடத்தை. பிறகு, பிறகு—?

அப்போது ஜாரின் ஆட்சிக்கு விரோதமாய்ச் சதிகள் ஆரம்பித்தன; போலீஸின் கண்காணிப்பும் அமுலும் வலுத்தன. டிப்ளிஸ் பாதிரி பாடசாலையிலும் சோதனை நடந்தது. ஸ்டாலினின் சகோதர மாணவர் இருவரைப் போலீஸ்காரர் பரபரவென்று இழுத்துக்கொண்டு போயினர். இந்தக் காட்சி, ஸ்டாலினின் உள்ளத்தைக் கிளறி விட்டது. கலாசாலையை விட்டு உடனே வெளியேற அவர் மனம் ஆர்வமுற்றது. கட்டுக்கடங்காத துஷ்டத்தனத்தை மீண்டும் ஆரம்பித்தார். மாணவர்களுக் குள்ளே ஒரு புரட்சிக் கமிட்டி யமைத்து அதன் தலைவரு மானார். பாடசாலையின் அதிகாரிகள், இவரை அடக்க முடியாததால் வெளியேற்றி விட்டனர்.

1897-ஆம் ஆண்டு டிப்ளிஸ் நகரில் ரகஸ்யப் புரட்சிக்காரர்களுடன் சேர்ந்தார். அங்கே தொழிலாளர் கிளர்ச்சியை ஆரம்பிக்க எண்ணினார். அதற்கோர் யுக்தி செய்தார். 'இருள் பஜார்' என்றதோர் பெரிய கடை வீதி அங்குண்டு. அதில் சுமார் 20,000 தொழிலாளர் வரை வேலை செய்தார்கள். அந்த 'இருள் பஜா'ரிலே, தாமும் ஒரு தொழிலாளராய் அமர்ந்து, மூட்டைகள் தூக்கிக் கூலிகள் வாங்கினார். சில நாளைக்குள்ளே சம்பள உயர்வு கேட்டார். அங்கே நீண்ட காலம் ஸேவை புரிந்த தொழிலாளர் கூட அஞ்சுவர் இவ்வாறு சம்பள உயர்வு கேட்க. ஸ்டாலினின் இந்த அதிகப்பிரசங்கித்தனம் அந்த முதலாளிகளுக்குப் புதுமையா யிருந்தது. அவர்கள் இவரை அக் கணத்திலேயே வேலையை விட்டுத் தள்ளினர். இதிலிருந்து ஆரம்பித்த வேலை நிறுத்தம் மகா வெற்றிகரமாய் நடந்தது. தமது புரட்சி நடவடிக்கைகள் காரணமாகக் கொஞ்ச காலத்துக் கெல்லாம் ஸ்டாலின் சிறைப்பட்டு, மூன்று வருஷங்கள் ஸைபீரியாவுக்கு அனுப்பப் பட்டார். ஆனால் தண்டனை முடியு முன்னரே அங்கிருந்து தப்பியோடினார்.

1905-ஆம் ஆண்டு பின்லந்தில் டாம்மெர் போர்ஸ் என்னுமிடத்தில் புரட்சிக்காரரின் ரகஸ்யக் கூட்டம் நடந்தது. ஸ்டாலினும் சென்றார். புரட்சித்தலைவன் லெனினை அங்குதான் முதன் முதல் சந்தித்தார். அதிலிருந்து புரட்சி இயக்கத்தின் முக்கியத் தலைவருள் ஒருவராக, ஸ்டாலின் மாறினார்.

'ஸரஸி'

புரட்சி பலிப்பதற்காக, தொழிலாளரை லெனின் கிளப்பிவிட்டார்; வேறு என்னென்னவோ செய்து பார்த்தார். ஒன்றும் பலன் தரவில்லை.

"பணந்தான் வேண்டும்; அதற்கு எங்கே போவது?" என்று ஏங்கினார் லெனின்.

"நான் சம்பாதித்துத் தருகிறேன்" என்று தைரியங் கூறினார் ஸ்டாலின்.

"எப்படிச் சம்பாதிப்பீர்?" என்று லெனின் கேட்டார்.

"ஸ்வீகாரத்தின் மூலம்" என்று பதில் தந்தார் ஸ்டாலின்.

'ஸ்வீகாரம்' என்றால் 'கொள்ளை யடித்தல்' என்று அர்த்தம்! சிறுவயதிலேயே அந்தத் தொழிலிலே நன்றாய்ப் பயின்றவரல்லவா ஸ்டாலின்? சர்க்கார் கஜானாவின் பணம் வழியிலே போய்க் கொண்டிருக்கும்போது அதைக் கொள்ளை யடிக்க முற்பட்டார். மூன்று லட்சத்து நாற்பத்தியோராயிரம் ரூபிள்களை அதாவது அக்காலத்தில் சற்றேறக் குறைய ஆறரை லட்ச ரூபாய் மதிப்புடைய ருஷ்ய நாணயங்களை ஒரு முறை கொள்ளை யடித்துவிட்டார். அது சம்பந்தமாக, டேவிட் என்ற மாறு பெயரோடு சிறைப்பட்டார். சிறிது காலத்தில் தப்பியோடினார்.

மீண்டும் கோபா என்ற பெயரோடு பல லீலைகள் புரிந்தார். ஸோஸோ, டேவிட், கோபா என்ற மூன்று புரட்சிக்காரர்களும் வெவ்வேறு பெயர் வழிகள் என்பது போலீஸ்காரர்களின் எண்ணம். "டேவிட் என்ற புரட்சிக்காரனும் கோபா என்ற புரட்சிக்காரனும் போட்டி போட்டு ஒருவனைவிட ஒருவன் மிஞ்சப் பார்ப்பதுபோல் தோன்றுகிறது" என்றுகூட அவர்களுடைய ரிபோர்ட் ஒன்றிலே எழுதிவிட்டார்கள். பின்னால் நிஜேராட் என்று ஒரு பெயர். அதற்கப்புறம் சிஜிகாவ் என்ற மற்றோர் பெயர். பின்னால் இவானேவிட்ச் என்ற புதுப்பெயர்—இப்படிப் பல திருநாமங்களுடன் பல திருவிளையாடல்கள் நடத்திய ஸ்டாலின், ஐந்து முறை சிறைப்பட்டார். அதில் நான்கு முறை புதுப் பெயர்களுடன் முதல் தடவைக் குற்றவாளியாகக் கருதப்பட்டு, சொற்பமான காவல் தண்டனைகள் பெற்றார்; ஒவ்வொரு தடவையும் தப்பியும் ஓடிவிட்டார். ஐந்தாவது தடவைதான் அவரது சகல பழைய வரலாறுகளோடும் போலீஸார் அவரைக் கைது செய்தார்கள். அப்போது அவர் பிராவ்டா என்ற பத்திரிகையை ஆரம்பித்து நடத்திவந்தார்.

அதோடு, லெனின் கட்டளைப்படி ருஷியப் பார்லிமெண்டில் உள்ள தங்கள் கட்சி அங்கத்தினர்களைக் கண்காணித்தும் வந்தார். அந்த அங்கத்தினர்களில், மலினோவிஸ்கி என்ற முக்கியஸ்தன் இருந்தான். அவனோடு மிக நெருங்கிப் பழகினார் ஸ்டாலின். அவனே இவரைக் காட்டிக் கொடுத்த துரோகி என்று பின்னால் தெரிந்தது. 1917-ஆம் வருஷம் இம் முறை ஸ்டாலின் கைதியாகி ஆயுள் பரியந்தம் சிறைத் தண்டனைப் பெற்று, ஸைபீரியாவுக்கு அனுப்பப்பட்டார். மகா கடுமையான பனிச்சாரலில் நாலு வருஷங்கள் வாடி வதங்கினார். தப்பித்தோடும் மார்க்கமே கிடையாது. ஆனால், உள்நாட்டுப் புரட்சியால், ஜார் மன்னர் முடிதுறந்தார். புரட்சி சர்க்கார் ஸ்டாலினையும் பிறரையும் விடுவித்தது. ஆனால், அது அபேதவாதப் புரட்சியல்ல; ஜனநாயகப் புரட்சி.

லெனின் கோஷ்டியார் இன்னும் ஓயவில்லை. லெனின், ட்ராட்ஸ்கீ போன்ற தலைவரெல்லாம் புதிய சர்க்கார் காலத்திலும் அஞ்ஞாத வாசம் புரிய வேண்டியதாயிற்று. ஸ்டாலின் மட்டில் உள்நாட்டிலேயே இருந்துகொண்டு சலியாது உழைத்தார். மீண்டும் சரியான காலத்தில் அவர்களும் வந்து சேர்ந்து கொண்டார்கள். லெனினின் புரட்சி வெற்றிபெற்றது. ஸோவியத் சர்க்காரும் அமைந்தது. ஸ்டாலினுக்கு, லெனின் அளித்த பதவி என்ன? கட்சிப் பொதுக் காரியதரிசி என்ற பதவிதான். அது அப்போது ஓர் அற்பப் பதவி. ஆயினும் அதன் மூலம் கட்சிக்குள்ளே பிரமாதமான செல்வாக்கை ஸ்டாலின் திரட்டிக் கொண்டார். இன்றுவரை ஸ்டாலினுக்கு ருஷ்ய சர்க்காரிலே எவ்வித உத்தியோகமும் கிடையாது; கட்சிப் பொதுக்காரியதரிசி பதவியே உண்டு. எனினும் ருஷியாவை ஆட்டிவைக்கும் சர்வாதிகாரி அவரே.

லெனின் உயிரோடிருக்கையிலேயே, ட்ராட்ஸ்கீக்கும் ஸ்டாலினுக்கும் பொறுமை யுண்டு. லெனின் காலமானதும் அது முற்றியது; குரோதமும் வலுத்தது. அதிகாரப் போட்டியில் ஸ்டாலினே வென்றார். ட்ராட்ஸ்கீ கோஷ்டியாரை நசுக்கினார். ட்ராட்ஸ்கீயையும் நாட்டைவிட்டு விரட்டினார். அஞ்ஞாதவாசம் புரியும் ட்ராட்ஸ்கீயையும் உயிரோடு விட்டு வைக்க மனமில்லை; நாடு நாடாய் அவரைத் துரத்தினார். கடைசியிலே மெக்ஸிகோவில் வசித்த ட்ராட்ஸ்கீ, இரண்டொரு மாதங்களுக்குமுன் பாதகன் ஒருவனால் கொலை செய்யப்பட்டார். இதில் ஸ்டாலினுக்கு எவ்வளவு தூரம் சம்பந்தமுண்டு என்பதைச் சரித்திரமே சொல்ல வேண்டும்.

ஏற்கனவே, ஜார் மன்னர்கள் வசித்த பிரம்மாண்டமான கிரெம்லின் அரண்மனையிலேயே இன்று ஸ்டாலின் வசிக்கிறார். ஆனால், அதில் மூன்றே மூன்று அறைகளைத்தான் தம் சொந்தத்துக்கு வைத்துக்கொண்டிருக்கிறார். தம்முடைய கிழத் தாயைச் சில வருஷங்களுக்கு முன், கிரெம்லின் அரண்மனைக்கு ஸ்டாலின் அழைத்துவந்தார். ஸ்டாலினுடைய இந்த வெற்றிகளையெல்லாம் கண்ட அவள் அதிசயித்து, "ஸோஸோ ரொம்ப நல்ல பையன். அவனுக்கு இந்தப் பெருமை யெல்லாம் எப்படிக் கிடைத்தது? ஜீவனத்துக்கு எப்படிச் சம்பாதிக்கிறான்?" என்று கேட்டாளாம். கிரெம்லின் அரண்மனை வாழ்வு ஒரு மாதத்துக்குமேல் அவளுக்குப் பிடிக்கவில்லை. பழைய டிப்ளிஸ் குன்றுகளுக்கே திரும்பிப் போய்விட்டாள்.

ஸ்டாலின் இரு முறை மணந்தார்: காதரைன் ஸ்வான் டைஸ் என்ற முதல் மனைவி சில காலத்திலே விலகிவிட்டாள். இரண்டாவது மனைவி, நடேட்ஜா என்பவளுக்கு ஸ்டாலினிடம் பரம பிரேமை. ஸைபீரியாவில் ஸ்டாலின் அஞ்ஞாதவாசம் புரிகையில், தானாகவே அவரிடம் சென்று தன்னை அவருக்கு மனப் பூர்வமாய் அர்ப்பணம் செய்து கொண்டாள். அவளது இளமையைப் பாழ் செய்ய, அவருக்கு மனம் வரவில்லை. அவர் முதலிலே மறுத்துவிட்டார். ஆனால், கூட வசிக்கமட்டில் அனுமதித்தார். பின்னால் காதல் மீறிவிட்டது. அவளை மனைவியாகவே அங்கீகரித்தார். ஸ்டாலினின் நன்மைக்குத் தன் ஜீவியத்தையே அவள் ஈடுபடுத்தினாள். பின்னால், அவர் சர்வாதிகாரியான பின்னர், அவர்மீது அவர் மனைவிக்கிருந்த செல்வாக்கைக் கண்டு, ஸ்டாலினின் சகாக்களெல்லாம் பொறாமை யுற்றனர். அவள் காலமானபோது, ஏதோ சூதால் கொலையுண்டாள் என்றெல்லாம் கூடச் சில வதந்திகள் கிளம்பின. குடல் அனுபந்த வியாதியாலேயே அவள் மாண்டாள் என்பதே உண்மையாம். அவள் மாண்டதும், ஸ்டாலின் பல மணி நேரம் அழுதழுது கண்ணீர் விட்டார்.

பிரேத ஊர்வலம் நடந்தது. வழியிலே, திடீரென்று சில ரோஜாப்பூக்கள் பிரேதப் பெட்டியின்மீது மழைபோல் சொரிந்தன. ஸ்டாலின் அண்ணாந்து பார்த்தார். மலர்களைத் தூவியவள் ஓர் அழகிய உயர்குலப் பெண் எனக் கண்டார். அவளது சைகைகளும் அபிநயங்களும அவரது நெஞ்சைத் தைத்தன. வீட்டுக்குத் திரும்பியதும் அவளை அழைத்துவரச் செய்தார். அவ்வளவு தான்; அவளுடன் தமது விதி பின்னிவிட்டதாக, அறிந்தார். அன்னா விளாடிமி

ராவ்ணா என்ற அந்தக் கோமகளைக் கலவாமல் இன்று ஸ்டாலின் ஒரு காரியமும் செய்வதில்லையாம். ஸ்டாலினுக்குப் பூர்ணமான உதவியும் அவள் புரிகிறாள். நடேட்ஜாவின் ஸ்தானத்தை அவள் வகிக்கிறாள். ஆனால் மணம் மட்டில் புரிந்து கொள்ளவில்லை. இதற்கிடையில் வேறோர் பெண்ணையும் ஸ்டாலின் விவாகம் செய்துகொண்டதாக ஓர் வதந்தி வருகிறது. அவள் காக்கஸிலுள்ள ஓர் வாலிப அர்மீனியப் பெண்ணாம்! இது எவ்வளவு உண்மையோ தெரியவில்லை.

ஸ்டாலினின் மூத்த மனைவிக்கு ஒரு மகனுண்டு. அவன் டிப்ளிஸில் தொழிற்சாலை இன்ஸ்பெக்டராக விருக்கிறான். இரண்டாவது மனைவிக்கு வாஸிலி என்ற பையனும் ஸ்வெட்லானா என்ற பெண்ணும் உண்டு. இருவரும் கலாசாலையில் படிக்கிறார்கள். முஸோலினியைப்போல, தமது குழந்தைகளுக்கு விசேஷப் பதவி எதையும் ஸ்டாலின் கொடுக்க வில்லை.

ஸ்டாலின் மும்முறை மூன்று ஐந்து வருஷத் திட்டங்கள் போட்டார். திட்டங்களெல்லாம் பூரண வெற்றி தந்ததாய்ச் சொல்ல முடியாது. ஆனால், ருஷியாவின் பழைய நிலைமையையும் இப்போதைய நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், பிரம்மாண்டமான முன்னேற்றம் என்றே எல்லாரும் சொல்லுகிறார்கள். நாட்டிலுள்ள முக்கால்வாசி நிலங்களைப் பொதுஉடைமை யாக்கிவிட்டார்கள். பல்வேறு கைத்தொழில்களும் ஸ்தாபிதமாகி நடந்து வருகின்றன. இத்தனைக்கும் ஸ்டாலினின் 'இரும்புக் கை' ஆட்சியே பெரிதும் காரணமாம்.

---

### சாராய 'நிமோனியா'

நிமோனியாக் காய்ச்சலால் மரணமடைபவர்களில் நூற்றுக்கு 53 பேர் லாகிரி வஸ்துக்களைக் குடிக்கும்குடிகாரர்களாம். டாக்டர் கென்னெத் விராய் பிக்ரெல் என்ற டாக்டர் மூன்று வருஷங்களுக்கு முன் எலிகள்மீது நடத்திய பரிட்சையால், பிரத்தியட்சமாய் இதை ருஜூப்பித்து விட்டார். ஒருவன் லாகிரி வகைகளைக் குடித்த மயக்கத்தில் இருக்கும்போது, தேகம் தனது எதிர்ப்புச் சக்தியை இழந்து விடுகிறதாம். அதாவது, வியாதிகளை எதிர்க்கத் தேகத்துக்குள்ள இயற்கைச் சக்தி மங்கி விடுகிறது. இச்சமயம் அவன் இழுக்கும் மூச்சிலேயுள்ள 'பாக்டீரியா' என்ற சிற்றுயிர்கள், தேகத்துக்குள்ளே போய், எதிர்ப்பற்று, ஒன்றுக்குப் பல மடங்காய் வளர்ந்து விடுகிறது. மயக்கம் தெளிந்ததும், ஈரற்குலை வீங்கி 'நிமோனியா' பலத்து விடுகிறதாம்.

---

# உடம்பும் மருந்தும்

### 'ஸ்பேர் பார்ட் டாக்டர்'

ஒரு கோழிக்குஞ்சு சிவலோகப்பிராப்தியடைந்து 27-வருஷ மாகிறது. ஆனால், அதன் இருதயத்தை இன்னும் உயிரோடு காப்பாற்றி வருகிறார் அமெரிக்காவிலே ஒரு டாக்டர். 1912-ஆம் ௵ வைத்திய சாஸ்திரப் புலமைக்காக நோபிள் பரிசு பெற்றவர் அந்த டாக்டர் அலெக்ஸிஸ் காரெல். வயது 66-ஆகிறது. கவிஞனைப்போல் தோற்ற முடையவர். அங்கமிழந்தவர்களுக்கு 'ஸ்பேர் பார்ட்' அங்கங்களை வைத்து ஒட்டி விடுவதிலும், பொத்துப்போன ரத்தக் குழாய்களுக்குத் தையல் போட்டு விடுவதிலும் அவர் நிபுணர். ஒருவரின் தேகத்திலுள்ள உறுப்புகளுக்கு வெளியி லிருந்தவாறே ரத்த ஓட்டம் கொடுத்து வரை யறையற்ற எத்தனைகாலம் வேண்டுமானாலும் ஜீவித்திருக்கச் செய்யும் ஆச்சர்யப் 'பம்பு' ஒன்றைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் அவர் இப்போது முனைந்திருக்கிறார். அவர் காப்பாற்றி வரும் கோழிக்குஞ்சு இருதயத்தின் அதிக வளர்ச்சியை அடிக்கடி கத்தரித்து ஒழுங்குசெய்து வருகிறாராம். இல்லாவிட்டால், ஒரே வருஷத்தில் அறைக்குள் அடங்காமல் மலைபோல் அது வளர்ந்து விடுமாம்!

### கொஞ்சினால் முற்றும் காசம்!

பீவர் புரூக் பிரபு தொடங்கிச் சுமார் ஐந்து லட்சம் பிரிட்டிஷ்காரர் காசநோயால் தவிக்கிறார்களாம். இத்தகைய காசத்தைப் பற்றிச் சமீபத்தில் நடந்த பல ஆராய்ச்சிகளின் முடிவுகளை டாக்டர் மூரியெல் பார்ட்டன் ஹால் விளக்கியிருக்கிறார். நாசிக் குழாயில் வீக்க மேற்பட்டு, சளி உண்டாவதால்தான் காசம் ஏற்படுகிறதாம். இந்தக் காசம் வரவர முற்றுவதற்கு ஒரு ஆச்சர்யமான காரணத்தை, டாக்டர்கள் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். தங்கள் குழந்தைகளுக்குச் சொற்பக் கபம் உண்டானவுடனே, "இந்தாடாப்பா, வாசலில் போகாதே; விளையாடாதே. சளி அதிகரித்துவிடப் போகிறது" என்று மிதமிஞ்சிய ஜாக்கிரதையோடு குழந்தைகளைக் கொஞ்சும் பெற்றோரால்தான், காசநோய் முற்றுகிறதாம். இப்படிக் கன்றி, குழந்தைகளை இயற்கையாய் ஓடி யாடும்படி விட்டுவிடுவதே, கபம் முற்றாமல் குணப்படுத்தும் சிறந்த சிகிச்சை யென்கிறார்கள் அந்த டாக்டர்கள்! ஆனால், வியாதி ஒரு அளவுக்குமேல் முற்றிய பிறகு, இந்தப் பரிகாரம் பலிக்காது. ஆதலால், எதற்கும் டாக்டரிடம் ஆரம்பத்திலேயே காட்டி விடுவது மட்டில் அவசியமாம்.

### எது உயர்ந்த பிண்ணாக்கு?

"செக்குப் பிண்ணாக்கிலே எண்ணெய் அதிகமாய் மிஞ்சி நிற்கிறது. அந்த எண்ணெயை ஆடுமாடுகளால் ஜீரணிக்க முடியாது. ஆதலால், மில் பிண்ணாக்கையே வாங்குங்கள்" என்று ஒரு பிரசாரம் நடக்கிறதாம். இது உண்மைதானா என்று ஸ்ரீ ஜாவேரிபாய், பி. படேல், நிபுணர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிறார். அதன்மேல், மத்திய மாகாணம் இஸாத் நகரில் உள்ள ஏகாதிபத்திய மிருக சிகிச்சை ஆராய்ச்சிக்கூடத்தின் விலங்குணவு இலாக்கா அதிகாரியும், புது டில்லியிலுள்ள ஏகாதிபத்திய விவசாய ஆராய்ச்சிக்கூட விவசாய ரசாயன சாஸ்திரியாரும் தந்துள்ள பதில்களை விவரித்து, 'கிராம உத்தியோகப்' பத்திரிகையில் ஸ்ரீ படேல் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். செக்குப் பிண்ணாக்கில் மிஞ்சும் எண்ணெய், 8 முதல் 11 சதவிகிதம் வரையில் இருக்கிறது. மில் புண்ணாக்கிலோ 11 முதல் 13 சத விகிதம் வரையில்தான் மிஞ்சுகிறது. செக்குப் பிண்ணாக்கில் உள்ள அதிக எண்ணெயை ஆடுமாடுகள் ஜீரணம்செய்ய முடியாமல் கஷ்டப் படுவதில்லை. அது மாத்திரமன்று; செக்குப் பிண்ணாக்கின் உணவு ஸத்தும் அதனால் அதிகமா யிருக்கிறது. இதனால், அந்த ஆடு மாடுகள் தரும் பாலில் உள்ள கொழுப்பு ஸத்தின் தன்மையும் உயர்கிறது. இவைதான் அந்த நிபுணர்கள் தந்த அபிப்பிராயங்களின் சாரம். எனவே, மில் பிண்ணாக்கைவிடச் செக்குப் பிண்ணாக்கு அதிக மதிப்புடையதென்று நிச்சயமாகிற தல்லவா?

### தருப்பையின் குணம்

நமது நாட்டில் சகல வித வைதீக காரியங்களுக்கும் உபயோகிக்கப்படுகிறதே தருப்பைப் புல், இதன் மணிமந்திர சக்தி அபரிமிதமாகும்.

சென்னை சர்க்கார் வெளியிட்ட 'குணபாடம்' இதைப் பற்றிக் கூறுவதாவது:

'தோடஞ் சிறியவிடம் சோராக் கபம்
பெருக்கஞ்
சாடுஞ் சகலசுரம் தாகமிவை—
—யோடும்
அரிப்பு மகலும் அடல்வேள்விகட்காந்
தருப்பை யெனும் புல்லுக்குத் தான்.'

அதாவது, தருப்பைப் புல்லை முறைப்படி கஷாயமிட்டுக் குடித்தால், சகலவித தோடங்கள், சிறிய விடங்கள், மிஞ்சின கபம், சகலவித சுரங்கள், தாகம், நமைச்சல் ஆகிய நோய்கள் தீரும்.

யுத்தக் கருவி :

# சோதனை விளக்கு—நாட்டின் 'பூனைக் கண்'

அவர்களுக்கு இரவிலே ஒரு விநாடியும் தூக்கம் கிடையாது. ஜனசஞ்சார மற்ற மலையிலும் காட்டிலும், வயலிலும், புதரிலும், சகோதர ஜனங்களுக்கு வெகு தூரத்திலே, ஆசிரம வாசிகளைபோல், இங்கிலாந்தெங்கும் வசிப்பவர் அவர்கள். நாட்டை இருட்டிலே காவல் புரியும் எச்சரிக்கையான '**பூனைக் கண்கள்**' அவர்களே. அவர்கள்தான் **சோதனை விளக்குப் படையினர்.**

*இரவிலே பல நூறு மைல் தூரத்திலே வரும் எதிரி விமானங்களையும் கண்டு பிடித்து, நேச பீரங்கிகளுக்கும் நேச விமானங்களுக்கும் குறி காட்டுவன* **சோதனை விளக்குகளே.**

இந்த ஆச்சரியச் சோதனை விளக்குகள் மட்டில் இல்லாவிட்டால், படுகொலைக்கும் அஞ்சாத அரக்க எதிரிகள், இரவிலே என்ன அநியாயமும் புரிந்து விடுவார்கள். இவ் வற்புதக் கருவியின் வரலாறும் அமைப்பும் உபயோகங்களும் பற்றிய விவரங்கள் மிக்க ரஸமானவையாகும்,



சோதனை விளக்கின் நான்கு பாகங்கள் :

(1) விளக்குக் கூண்டு; இது உருண்டையான குழாய் போலிருக்கிறது.

(2) 'கார்பன்' பெட்டி. இதில்தான் சோதனை விளக்கை எரியச் செய்யும் மின்சார இயந்திரமும் இருக்கிறது.

(3) சோதனை விளக்கைத் தூக்கிக்கொண்டிருக்கும் கவைக் கால்.

(4) விளக்கைச் சுழற்ற வசதியுள்ள அகண்ட பாதம்.

1862-ஆம் வருஷத்தில் அமெரிக்காவில் நடந்ததோர் சண்டையில், சில வீரர்கள் மகா துணிச்சலாய் ஒரு காரியம் செய்தார்கள். சிறிய படகொன்றின் முன்புறத்தில் நீண்டதோர் கொம்பைக் கட்டினார்கள். அந்தக் கொம்பின் முனையில் வெடிமருந்தைத் தொங்க விட்டார்கள். பிறகு அந்தப் படகை வெகு விரைவாகச் சத்துரு கப்பலருகே செலுத்தினார்கள். அந்தக் கொம்பில் தொங்கிய வெடி மருந்து சத்துரு கப்பலைத் தொட்டவுடன், படகின் மின்சார இயந்திரத்தால் அந்த வெடி மருந்தை வெடிக்கச் செய்தார்கள். சத்துருவின் கப்பல் நாசமாயிற்று. இதுதான் டார்ப்பிடோ வெடி தயாரான மூல காரணம். சத்துருக்கள் இரவில் இவ்வாறு ரகஸ்யமாகச் சிறு படகில் வந்து வெடிவீசத் தொடங்கியவுடனே, ஒவ்வொரு கப்பலிலும் மிகப் பிரகாசமான விளக்கை வைத்துக்கொண்டு, எதிரிகள் யாராவது வருகிறார்களா என்று ஜாக்கிரதையாய்ச் சோதனை புரிவது அவசியமாயிற்று. அதற்காகச் செய்யப்பட்டதுதான் சோதனை விளக்கு. அது பின்னால் வர வர அபிவிருத்தி செய்யப்பட்டு, இப்போது நீரிலும் நிலத்திலும், எதிரி கப்பல்களை மட்டுமன்றி, எதிரி விமானங்களையும் கவனித்து வருவதற்கு உபயோகமாகி வருகிறது.

சாதாரண மோட்டார்க்கார்களின் விளக்குகள் இல்லையா, இதே மாதிரி குறிப்பிட்ட திசையில் நேராக வெகு தூரம் வரையில் ஒளியை வீசக்கூடிய பிரம்மாண்டமான தீபங்கள் இந்தச் சோதனை விளக்குகள். முந்நூறு மைல் தூரம் ஒளி வீசக்கூடிய பத்து லட்சம் மெழுகுவர்த்திச் சக்தியுள்ள சோதனை விளக்குகள் கூட இருக்கின்றன.

சோதனை விளக்கில் பொதுவாகப் பின்வரும் நான்கு முக்கிய பாகங்கள் இருக்கின்றன : (1) உருண்டையான குழாய் போன்ற கூண்டு ; (2) அதற்குக் கீழே, சோதனை விளக்கு எரிவதற்காக வைக்கப்பட்டுள்ள 'கார்பன்' அடங்கிய பெட்டி ; (3) அவ்விரண்டையும் தூக்கிக் கொண்டிருப்பதற்காக இரண்டு இரும்புக் கால்கள் ; (4) அவற்றுக் கடியில், சோதனை விளக்கைச் சுழற்றச் சௌகரியமான ஒரு அகண்ட பாதம்.

விளக்கின் குழாய்க் கூண்டு, மிக உறுதியான மெல்லிய இரும்புத் தகட்டால் செய்யப்பட்டிருக்கிறது. விளக்கின் வெளிச்சம் நாலா திசையிலும் பரவி வீணாகாமல் ஒரே திசையில் குவிந்து வீசுவதற்காக, ஒரு உபாயம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது, விளக்கின் பின்புறக் கதவில், வெளிச்சத்தைப் பிரதிபலிக்கும் பூதநிலைக் கண்ணாடி ஒன்றை

## ‘நாதன்’

அமைத்திருக்கிறார்கள். அந்த நிலைக் கண்ணாடி, சற்றேறக்குறைய ஒரு பந்திலிருந்து வெட்டியெடுத்ததோர் பாகம் போல, வளைந்திருக்கும். 5-வது படத்தை உற்றுப் பாருங்கள். உக்கிரமான வெளிச்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே, அங்கேதான் ‘கார்பன்’ எரியும் ஜ்வாலை இருக்கிறது. அதன் ஒளிக் கதிர்கள், பின்புறமுள்ள பூதநிலைக் கண்ணாடியில் பட்டு எதிர்த்துத் திரும்பும்போது, சமதூர நேர்க்கோடுகளாக நேரே வீசுகின்றன. ஒளியைப் பிரதிபலிக்கும் நிலைக் கண்ணாடிக்குப் பின்புறம் பாதரஸ முலாம் பூசப்பட்டால், சொற்ப வெளிச்சமே பிரதிபலிக்கும். அதைவிடப் பிரகாசமாய் ஒளி வீசுவதற்காகச் சிலகாலம் இந்தச் சோதனை விளக்கு நிலைக்கண்ணாடியில் வெள்ளி முலாம் பூசி வந்தார்கள். ஆனால், நாள்பட்டால் உஷ்ணப் பிரதேசங்களில் வெள்ளி முலாம் அழிந்துவிடுகிறது. ஆகையால், மின்சார சக்தி மூலம் தங்க முலாம் பூசத் தொடங்கினார்கள்.

சோதனை விளக்கில் எரிவது மின்சார சக்தியல்ல; ‘கார்பன்’ என்ற வஸ்துவே. ஆனால், நினைத்தபோது அந்தக் ‘கார்’பனை மின்சார சக்தியால் எரிக்கவும் அணைக்கவும் உபாயம் செய்திருக்கிறார்கள். பாஹ்ரன்ஹீட் 5,400 டிகிரி உஷ்ணத்தில் அது எரிக்கப்படுகிறது. இவ்வளவு உக்ரமான உஷ்ணத்தால், விளக்குப் பூராவும் தகதகவென்று சுட்டுவிடக் கூடாதல்லவா? அதைக் குளிர்ச்சி செய்துகொண்டேயிருப்பதற்காகச் சில விசேஷ உபாயங்களைச் செய்திருக்கிறார்கள்.

இனி, கூண்டைத் தவிர்த்த இதர பாகங்களின் உபயோகங்களைக் கவனிக்க வேண்டும். கீழேயுள்ள பெட்டியில் ‘கார்பன்’ இருப்பது விளக்கு எரிவதற்காக. கவைக் கால்கள், விளக்கை மேலும் கீழும் தொட்டில் ராட்டினம் போல் சுழற்றுவதற்காக. அடியிலுள்ள பாதம், விளக்கை நாற்புறமும் குடை ராட்டினம்போல் சுற்றுவதற்காக. இந்த வசதிகள் அமைக்கப்பட்டிருப்பதால், விளக்கை எத்திசையில் வேண்டுமோ அத்திசைக்குத் திருப்ப முடியும்.

இத்தகைய சோதனை விளக்குகளையும் தூரதிருஷ்டிக் கண்ணாடிகளையும் அங்கங்கே வைத்துக்கொண்டு, இங்கிலாந்து பூராவும் பல வீரர்கள் இரவில்




படம் 5: வெளிச்சம் வீசும் விதம்

சோதனை விளக்கு எவ்வாறு வெளிச்சம் வீசுகிறது என்பதை இந்தப் படம் விளக்குகிறது. உக்ரமான வெளிச்சம் உண்டாகுமிடத்திலிருந்து ஒளிக் கதிர்கள் பூத நிலைக்கண்ணாடியில் பட்டு, பிரதிபலித்துத் திரும்பும்போது சமதூர நேர்க்கோடுகளாகச் செல்வதைக் கவனியுங்கள்.

காவல் புரிந்து வருகிறார்கள். ஒரு விளக்கை நிர்வகிப்போர், ஏதாவதோர் எதிரி விமானத்தை இரவிலே கண்டுபிடிப்பதாக வைத்துக்கொள்ளுவோம். உடனே அவர்கள் அந்த விமானம் போகுமிடமெல்லாம் விளக்கைத் திருப்பித் தொடர்ந்துகொண்டேயிருப்பார்கள். இப்படி ஒரு விளக்கு வேலைசெய்வதைக் கண்டவுடனே, இருபது, முப்பது, மைல் தூரத்திலுள்ள மற்றும் சில சோதனை விளக்குகளும் அந்த விமானத்தைத் தொடர ஆரம்பிக்கும். இப்படி இரண்டு மூன்று சோதனை விளக்குகள் ஒன்றையொன்று குறுக்கிட்டுச் சந்திக்குமிடத்தில்தான் எதிரி விமானம் இருக்கிறது என்று, நமது விமான வீரர்களும் விமான எதிர்ப்பு பீரங்கி வீரர்களும் சுலபமாய்க் கண்டுகொண்டு, அந்தச் சத்துரு விமானத்தைத் தாக்குவார்கள்.

இவ்வாறு சோதனை விளக்குகள் யுத்த காலத்தில் சத்துருக்களைக் கண்டுபிடிக்க உபயோகமாவது மாத்திரமல்ல; சாதாரண வியாபாரக் கப்பல்களிலும் பிரயாணிகள் கப்பல்களிலும்கூட, அவை உபயோகப் படுகின்றன. ஒரு சமயம் ‘டிடானிக்’ என்ற மிகப் பெரிய பிரயாணிகள் கப்பல் 4,000 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடந்தபோது, இருட்டில் பனிப்பாறையில் மோதி ஏராளமான உயிர்ச்சேதமுண்டாயிற்று. சோதனை விளக்கு அக்காலத்தில் உபயோகிக்கப்பட்டிருந்தால், இந்த விபத்து நேரிட்டிராது. இப்போது, பெரும்பாலான வியாபாரக் கப்பல்களும் பிரயாணிகள் கப்பல்களும் சோதனை விளக்குகள் வைத்துக்கொண்டிருக்கின்றன. குறுகலான சூயஸ் கால்வாய் மார்க்கத்தில் வரும் கப்பல்கள் அனைத்தும் சோதனை விளக்குகள் வைத்திருக்கவேண்டும் என்று நிர்ப்பந்தமிருக்கிறது. சோதனை விளக்கில்லாத கப்பல்கள், அங்குள்ள அதிகாரிகளிடமிருந்து ஒரு விளக்கை இரவல் வாங்கிக்கொள்ள வேண்டுமென்ற கட்டாயமுமிருந்து வருகிறது.

கோட்டைகளில் எல்லாம் ஏராளமான சோதனை விளக்குகள் வைத்துக்கொண்டு, சமீபத்தில் எதிரிகள் வராதபடி கவனித்துக் கொள்ளுகிறார்கள். போர்க்களத்தில் மோட்டார் வண்டிகளில் சோதனை விளக்குகளை ஏற்றிக்கொண்டு, தேவையான இடங்களுக்கெல்லாம் விரைவாய்க் கொண்டு செல்லுகிறார்கள். இத்தகைய அபூர்வமான விளக்குகளுக்கு, நாட்டின் ‘பூனைக் கண்கள்’ என்று சிறப்புப் பெயர் வைத்திருப்பது எவ்வளவு பொருத்தம்!

# அழகு

**சங்கு சுப்பிரமணியன்**

**க**ண்ணுக்குக் குளுமையா யிருப்பது இருதயத்தைக் கவ்வுகின்றது. காதுக்கு இனிமை தருவதும் இருதயத்தை அள்ளுகின்றது. பிறகு அறிவும் இருதயத்தோடு ஒன்றுகின்றது. அழகான உருவம், அழகான பாட்டு, அழகான எண்ணம், இன்னும் எங்கெங்கு அழகு தவழ்கின்றதோ அங்கெல்லாம் அறிவும் இருதயமும் ஸம்மேளித்து விடுகின்றன. இதுதான் அழகின் சக்தி. இந்தச் சக்திக்கு அகப்படாத மனித மனமும் உண்டா?

மனதுக்கு மனம் அழகை ரஸிப்பதில் வித்தியாசங்க ளிருக்கலாம். நந்தலால் வசுவின் படமொன்றை ஒரு குழந்தை பார்க்கிறது. 'பாப்பா!' என்று வாய்விட்டுக் கூறி, கையினால் காட்டி, அதிசயக் கண்களோடு நோக்குகின்றது. இன்னொரு ரஸிகன் அந்த ஓவியனின் வரிகளையும் வர்ணங்களையும் அனுபவிப்பதில் மெய்மறந்து நின்று விடுகிறான். ஆனால் அந்தப் படம் இருக்கும் கட்டிடத்திலுள்ள ஒரு குமாஸ்தாவோ, ஒரு எஞ்ஜினியரோ அந்தப் படத்தை ஒரு பிரமாதமாக நினைத்து நின்றது மில்லை; சொக்கிப் போனதுமில்லை. ஓவியச் சுவைக்கேற்ற மனமும் எழுச்சியும் அவர்களிடம் அதிக மில்லை என்று கூறலாமே யன்றி, அழகின் வலைக்கு தப்பித்துக்கொண்டவர்க ளெனக் கூற முடியாது. உருவ அழகுக்கு உருகாதவன் ஒலி அழகில் உருகுகிறான். இல்லாவிடில் வேறெந்த விதமான அழகிலேயோ அவர்களும் மனதைப் பறிகொடுத்து விடுவார்க ளென்பது நிச்சயம்.

**கா**லத்தை வென்றது அழகு. அழகான ஓவியமும் சிற்பமும் எந்தக் காலத்திலும் இன்பம் தருவனவே. கவிஞன் கீட்ஸ் சொன்னது முற்றிலும் உண்மை; உண்மை யென்பதற்கு எவ்வளவோ உதாரணங்கள் தரலாம். ஆனால் மனிதனுக்கு மனிதன் அழகை உணர்வதிலும், அழகைக் கண்டு எழுச்சி யுறுவதிலும் எவ்வாறு வித்தியாசங்க ளுளவோ அவ்வாறே காலத்துக்குக் காலம் அழகைச் சித்தரிப்பதிலும் அழகை யனுபவிப்பதிலும் வித்தியாசங்க ளேற்படலாம். ஆனால் எழி லின்பத்தை ஊட்டிய வஸ்துவின் பெருமை குறைந்து விட்டதாக எண்ணுவதற் கில்லை. நிற்க,

உருவ அழகை உணர்பவர் பலருண்டு. ஒலி அழகை அனுபவிப்பதும் சகஜம். ஆனால் ஓர் சேர்க்கையின் அழகை—ஸங்க ஸவுந்தர்ய மென்று வடமொழியில் சொல்லுவார்கள்—உணர்வதும் அனுபவிப்பதும் ஒருபடி உயர்வான ரசனை. ஸங்க ஸவுந்தர்யத்தை சிருஷ்டிப்பதும் கஷ்டம்தான். சிற்பங்கள் பல சேர்ந்த தென்னாட்டுக் கோயில், ராமாயண காவியத்தின் அமைப்பு, சந்திரகுப்தனின் அரசியல் முறை, முதலியவைகளை ஸங்க ஸவுந்தர்ய மெனக் கூறலாம். அவற்றை மொத்தமாகப் பார்த்து அனுபவிப்பதோடு பிரித்துப் பிரித்துப் பார்த்து அனுபவிப்பதற்கும் உயர்வான ரஸிகத்துவம் தேவை. ஆனால் இவை எல்லாவற்றையும் விட எண்ணங்களின் அழகை உணர்வதற்கு அதிகமான ரஸிகத்துவம் வேண்டும். மனோலய சித்திரங்களையும் பாகுபாடுகளையும் உணர்வது எளிதான காரிய மல்ல. பாரதியின் கவிதைச் சித்திரங்களையோ, ஈன்ஸ்டீன் கண்டுபிடித்த 'வெளி' விஞ்ஞானக் கருத்தையோ, சாதாரண மனிதன் ரஸிக்க வில்லையே என்று வருத்தப்படுவதற் கில்லை. எண்ணங்களின் அழகை ரஸிப்பதற்கு, பயிற்சி யடைந்த அறிவு அவசியமா யிருக்கிறது; என்ன செய்வது?

**உ**லகின் எண்ணங்களில் அழகு அதிகப்பட அதிகப்பட, புதுமைப் புஷ்பங்கள் அரும்பி அரும்பி மலர்ந்து கொண்டே யிருக்கும். 'பழமை' யென்ற இலைகள் புதுமைப் புஷ்பங்களைக் கண்டு பொறாமைப் படலாமா; கோபிக்கலாமா?

அழகான உருவத்தைப் பார்க்கப் பார்க்க க்ஷணத்திற்கு க்ஷணம் புதுமை தோன்றுகிறது என்றார் ஒரு வடமொழிக் கவி. இப்படி நவ நவமாய்க் களிப்புத் தோன்றுவது உருவ அழகுக்கு மட்டு மன்று; எண்ண அழகுக்கும் இந்தப் புதுமைச் சக்தி உண்டு. ஸாக்ரடீஸின் எண்ணங்கள், ரூஸோவின் எண்ணங்கள், துளஸீ தாஸனின் கருத்துக்கள், இன்னும் எவ்வளவோ பெரியாரின் எண்ணங்களை யெல்லாம் அறிஞர் இன்றைக்கும் சுவைத்துக் கொண்டிருக்கின்றனர். அதற்குக் காரணம் எண்ணங்களின் அழகு வற்றாத ஊற்றாகும்.

## வாடகை சுய க்ஷவரம்!



ஆள் நிறையை நிறுக்கவும் பிளாட்பாரம் டிக்கட் வாங்கவும் ஒரு அணாவைப் போட்டால், தானாகவே சேவைசெய்யும் சில மெஷின்கள் நம் நாட்டுக்கு வந்திருக்கின்றன அல்லவா? இம்மாதிரி, வாடகைக்கு க்ஷவரக்கத்தி தரும் மின்சார மெஷின் ஒன்று அமெரிக்காவில் தயாராகி யிருக்கிறது. மெத்த அவசரமாய் சினிமாவுக்குப் போகிறவர், வழியிலே இந்த மெஷினில் ஒரு காசைப் போட்டால், இதிலுள்ள க்ஷவரக் கத்தி வந்து தொங்கும். அதைக் கொண்டு, தம் வேலையை முடித்துக் கொண்டு, கத்தியைத் திரும்பவும் அதன் இடத்தில் சொருகி விட்டால், மெஷின் தானாகவே மருந்துத் தண்ணீர் விட்டுக் கத்தியைச் சுத்தமாகக் கழுவி வைத்துக் கொள்ளும். கத்தியைப் பிணைத்திருக்கும் சங்கிலியை வெட்டி அதை அபகரித்துக் கொண்டுபோக யாராவது முயன்றால், மெஷின் அபாய அறிக்கை மணி யொன்றை அடிக்கத் தொடங்கிவிடும்.

# காந்தி வாக்கு

ஏகாதிபத்திய நாஸ்திகம்
'கும்பலோடு கோவிந்தா'வா?
'கட்டையும் கோக்கும்'



சர்க்காரின் அவசரச் சட்ட கெடுபிடிக்குப் பணிய மனமில்லாமல், 'ஹரிஜ'னையே மகாத்மா காந்தி நிறுத்திவிட்டார்.

ஒரு சத்தியாக்ரகி, மகாத்மாஜிக்கு எழுதியதே போல, தேசீய இந்தியாவை இன்று போஷித்து வளர்க்கும் உணவு, காந்தியின் வாக்கும் எழுத்தும்தான். அவையின்றித் தேசீய இந்தியா இப்போது உயிர்வாழ முடியாது. அவை தேசத்துக்கு மட்டினு மல்ல; சர்க்காருக்குமே இந்த நெருக்கடி நேரத்திலே மெத்த அவசியமாகும்.

*தேசிய இந்தியா காட்டாறுபோல் பொங்காமல், ஜீவநதியாய் அதனைக் காப்பாற்றும் அணைகரைகள், காந்திஜியின் வாக்கும் எழுத்துமே யாகும்.*

ஆதலால், மகாத்மாஜி ஏற்கனவே நடத்திய 'யங் இந்தியா' பத்திரிகையிலே எழுதிய கட்டுரைகளின்றும் சில பொன் மொழிகளைக் கொய்து, இங்கே தந்திருக்கிறோம். 'யங் இந்தியா' இதழின் அந்தந்தத் தேதியையும் அந்தந்தக் கட்டுரைத் தலைப்பையும் அவ்வக் கொய்வுகளுக் கடியிலே குறிப்பிட்டிருக்கிறோம்.

பிரஸ்தாப அவசரச் சட்ட உத்திரவு, பிரபல இந்தியப் பத்திராதிபர்களின் ஏகோபித்த முயற்சியின் பலனாக, ரத்தாகி விட்டதால், 'ஹரிஜன்' புதிய எழுச்சியுடன் மீண்டும் தோன்றுமென்றும், மகாத்மாஜியின் நவ நவமான வாக்குகளை 'ஹரிஜ'னிலிருந்தே எடுத்துப் பிரசுரிக்கும் பாக்கியம் அடுத்த 'மாதமே' நமக்குக் கிட்டுமென்றும் இதே சமயத்தில் நம்புகிறோம்.

— ஆசிரியர் 'சக்தி'

இந்தியர்கள் அனைவரும் கோழைகள் அல்ல. ஹிந்துக்கள், முஸல்மான்கள், சீக்கியர், கூர்க்கர் ஆகிய பல வகுப்புக்களிலும் ராணுவஜாதியினர் காட்டியுள்ள தீரம் இதனை நிரூபித்துள்ளது. சண்டை உணர்ச்சி இந்திய பூமியின் இயல்புக்குப் புறம்பானது என்பதே என் கருதது. உலக பரிணாமத்தில், இதனினும் உயரியதோர் ஸேவையை இந்தியா அநேகமாய்ப் புரியக் கூடும் என்று நான் கருதுகிறேன். இந்தியாவின் முடிவான லட்சியம் யாதென, காலந்தான் சொல்ல வேண்டும் — (நமது குறைகள்: 22-6-1921)

### தலைவனின் கடமை

பொது ஜனங்கள் கைக்கொள்ள வேண்டிய புதிய தர்ம சூத்திரங்களைத் தயாரிக்கவும், பொது ஜனங்களுக்குப் போதனை புரிந்து நமது செல்வாக்குக் குட்படுத்தி வழி காட்டி நடத்திச் செல்லவும் விரும்பும்போது, அவர்கள் மனதில் குழப்பமுண்டாக்கக் கூடிய எதையும் நாம் செய்யலாகாது; 'கூட்டத்தோடு கோவிந்தா போடுவது' போல் தோன்றவுங் கூடாது. இந்த நேரத்திலே, கும்பலின் பாராட்டு தலைப் பெறுவதற்காக அவர்களிஷ்டப்படி நடப்பதைவிட, பிடிவாதிகளென்றும் எதேச்சாதிகாரமாய் நடப்பவர்களென்றும் நாம் பெயர் வாங்குவதே மேல் என்று நான் நம்புகிறேன். மகா ஜனங்களுக்குத் தாங்கள் தலைமைதாங்கி நடத்திச் செல்வதாகப் பாத்தியங் கொண்டாடுவோர், அந்த ஜனங்களைத் தாங்கள் பின்பற்றிச் செல்ல மறுத்து விட வேண்டும். இல்லையானால், நாட்டிலே அமைதியான முன்னேற்றம் ஏற்படாது; கும்பல் போன போக்கே தர்மமாகி விடும். மகா ஜனங்களின் அபிப்பிராயத்தை, தலைவர்கள் ஆட்சேபம் மாத்திரம் செய்துவிட்டு, அதற்குப் பணிந்து விடவும் கூடாது; மிக ஜீவாதாரமான விஷயங்களில், மகா ஜனங்களின் அபிப்பிராயம், தங்கள் புத்திக்குத் தவறு என்று படும்போது, அந்த அபிப்பிராயத்தை எதிர்த்துக் கருமமும் புரிவது அவசியம் என்று நான் நம்புகிறேன் — (பெரும்பான்மையோர் சட்டம்: 14-7-1920)

### ஏகாதிபத்தியம் கடவுளையே மறுப்பது

இன்று உலகத்தைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் மிகப் பெரிய

அபாயம், பிறரைச் சுரண்டி வாழும் பொறுப்பற்ற ஏகாதிபத்திய தத்துவமே. அதற்கு இந்தியா அடிமைப்பட்டிருப்பதால், உலகிலுள்ள பலவீன நாடுகள் சுதந்திரமாய் வாழ்ந்து வளர்வதற்கு அபாய முண்டாகி யிருக்கிறது. ஏகாதிபத்திய தத்துவம், கடவுளையே மறுப்பதாகும். கடவுளின் திருநாமத்தால், கடவுளுக்கு வெறுப்பான காரியங்களை யெல்லாம் அது செய்கிறது—(போல்ஷ்விஸிமா, கட்டுப்பாடா?: 21-8-1924)

## 'கட்டை ராஜாவா, கொக்கு ராஜாவா?'

சுயராஜ்யம் வேண்டு மென்றால், முஸல்மான்களுடன் நாம் சமாதானம் பெற வேண்டுவது அவசியமாகும்; அதே மாதிரியே, நாம் சுயராஜ்யம் பெறுவதே நியாயம் என்றோ சுயமதிப்பு அதுதானென்றோ பேசுமுன்னதாக, பஞ்சமர்களுக்கு நாம் சமாதானம் அளிக்க வேண்டும். ஆங்கிலேயரின் நுகத்தடியி லிருந்து இந்தியாவை விடுவிப்பதற்காக மாத்திரம் நான் உழைக்கவில்லை; எந்த வித மான நுகத்தடியினின்றும் அதை விடுவிக்கவே நான் சங்கல்பம் செய்துகொண் டிருக்கிறேன். 'கட்டை ராஜா போய்க் கொக்கு ராஜா வர வேண்டும்' என்று நான் விரும்பவில்லை. ஆதலால், சுய பரிசுத்த இயக்கமே எனக்குச் சுய ராஜ்ய இயக்கமா யிருக்கிறது—(தீண்டாமையும் சுயராஜ்யமும்: 12-6-1924)

## சத்தியமும் அஹிம்சையும்

சத்தியம் உடன்பாட்டுப் பொருள்; அஹிம்ஸை எதிர்மறைப் பொருள். சத்தியம், ஒரு உண்மை; அஹிம்சை, ஒரு உண்மையை மறுப்பது. அப்படி யிருந்தும், அஹிம்சையே மகா உன்னதமான மதமாகும். சத்தியம், சுயம்-பிரகாசமானது; அதன் முதிர் மதுரக் கனி, அஹிம்ஸை. சத்தியத்திலே அஹிம்ஸை அடங்கி யிருக்கிறது. ஆனால், அது சுயம்பிரகாசமானதல்ல வாதலால், அதை அங்கீகரியாமலே, சாஸ்திரங்களுக்கு ஒரு மனிதன் வியாக்கியானம் செய்துவிட முயலலாம். ஆனால், சத்தியத்தை அவன் அங்கீகரித்து விட்டால், அஹிம்ஸையையும் அவன் அங்கீகரிக்கும்படி நேர்வது நிச்சயம். சத்ய தர்சனத்துக்கு, தேக இச்சைகளைத் துறப்பது அவசியம். தம்மைச் சூழப் பொங்கிக்கொண்டிருந்த ஹிம்ஸையி லிருந்து அஹிம்ஸையைக் கண்டுகொண்ட சத்ய தர்சியான ஓர் ரிஷீச்வரர் கூறுகிறார்: "ஹிம்சை அசத்யமாகும்; அஹிம்ஸையே சத்தியம். அஹிம்ஸை யின்றி, சத்திய தர்சனம் அசாத்யமாகும். பிரம்மசர்யம், அஸ்தேயம் (திருடாமை), அபரிக்கிரகம் (உடைமையின்மை) ஆகியவை, அஹிம்ஸையை அடையும் சாதனங்களாகும். சத்தியத்தின் ஜீவன், அஹிம்ஸையே. அஹிம்ஸையில்லாத மனிதன் விலங்கே யாவான்." சத்யோபாசகன், தனது சத்திய சோதனையிலே இதை யெல்லாம் அறிந்து கொள்வான்; தனது சாஸ்திர விசாரணைகளில் அவனுக்கு இதன்பின் எவ்விதச் சிரமமும் உண்டாகாது—(கீதையின் பொருள்: 12-11-1925)

---

# யுத்த உதவி!

யுத்தம் ஆரம்பமாகிச் சில நாட்கள் சென்றன. கென்யாவில் உள்ள தென் நைரி ஜில்லாவின் கமிஷனருக்கு ஒரு கடிதம் வந்தது. அது அந்த ஜில்லாவில் உள்ள ஒருவனால் எழுதப் பெற்றது. அந்தக் கடிதமாவது:—

"அன்புள்ள ஐயா!

"யுத்தத்தில் உபயோகப் படுத்துவதற்காக என்னுடைய மூன்று பன்றிகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். சில மனிதர்கள் தங்களது உயிரையும் கொடுத்துப் பிறரைக் காக்க முயலுகின்றனர். ஆனால், எனக்கோ எவ்வித வேலை செய்யவும் போதிய அறிவோ திறமையோ கிடையாது. ஆகையால் எனது அன்பைக் காட்டும்பொருட்டு என்னிடமுள்ள மூன்று பன்றிகளையுமே கொடுக்க விரும்புகின்றேன்.

"எனது பன்றிகளில் ஒவ்வொன்றும் நாலடி நீளமிருக்கிறது.

"ஆனால், எனது வேண்டுகோளுக்குத் தாங்கள் என்ன பதில் கூறப்போகிறீர்களோ? அதை அறிய மிக ஆவலாய் இருக்கிறேன்.

"தங்கள் கீழ்ப்படிதலுள்ள

"கனேகா"

குடும்ப வர்ணனை :

# அண்ணனும் அண்ணியும்

**பண்டித எஸ். முத்துசுவாமி பிள்ளை**

அப்பாவுக்கு முற்றிலும் மாறுபட்ட குணமுடையவர் என் அண்ணன். அப்பா சாந்த சொரூபி; அண்ணன் மூர்க்க சொரூபி. அப்பா சிக்கனக்காரர்; இவர் ஊதாரி. அவர் எளிய வாழ்வில் பிரியமுடையவர்; இவர் டம்பாச்சாரி. இப்படியிருந்தும் அப்பா இவரிடம் கடிந்து ஒரு வார்த்தை பேசுவது கிடையாது. "உங்கள் மகன் நவாப் தர்பார் நடத்துகிறாரே! கொஞ்சம் கண்டிக்கக் கூடாதா?" என்று யாராவது கேட்டால், "அவன் என்ன சிறு பிள்ளையா? சொல்லிக் கொடுத்த புத்தியும் கட்டிக்கொடுத்த சோறும் எத்தனை நாள் பிரயோஜனப்படும்? சுயபுத்திதான் பலன்தரக் கூடியது. ஆடும் பம்பரம் தானாகவே நிற்பதுபோல, அவன் கூத்தும் தன்படியே நிற்கும்" என்பார். "கூத்து நிற்குமுன் குடும்பப் பணப்பெட்டி காலியாகி விட்டாலோ?" என்று கேட்டால், "வருமானத்தைத் தானே தொலைக்கிறான். மூலசொத்து அழியாது. அவிபக்த குடும்பமல்லவா? கிரய விக்ரயம் செய்தால் செல்லுபடியாகாது. கண்ணை மூடிக்கொண்டு கடன் கொடுக்கும் பைத்தியக்காரர் யாராவது இருந்தால், கொடுத்த முதலையிழந்து திண்டாடட்டுமே; நாமென்ன செய்வது?" என்று வெகு சாவதானமாகச் சமாதானம் கூறுவார். மேலும் "சப்த ஸ்வரங்களும் ஒன்று போலவா இருக்கின்றன? ஒவ்வொரு ஸ்வரமும் ஒவ்வொரு மாதிரியாக இருப்பதனாலேயே சங்கீதம் இனிமையாக இருக்கிறது. ஸ்வரங்களெல்லாம் ஒரே மாதிரியாக இருந்தால், சங்கீதம் சந்திக்குப் போக வேண்டியதுதான். அதுபோலவே ஒரு குடும்பத்திலே குழந்தைகள் எல்லாம் ஒரே மாதிரி குணமுடையவையாக இருந்தால், குடும்ப வாழ்வு ஸ்வாரஸ்யப்படாது; பல ரகமாய் இருந்தால் தான், குஷியாக இருக்கும். காலநிலையைப் பாருங்களேன். வெயிலும் மழையும் பனியும் மாறி மாறி வருவது எவ்வளவு சுகமாக இருக்கிறது!" என்றெல்லாம் பெரிய ஞானி மாதிரி அவர் பேசுவது வழக்கம். தமையனாரின் திருவிளையாடல்கள் வளர்வதற்கு, அப்பாவின் இந்த வேதாந்தப் பேச்சே காரணம்.

அண்ணன் சண்டை போடாமல் சாப்பிடும் நாளே கிடையாது. சண்டையோ அர்த்தமற்ற சண்டை; குழம்புச்சண்டை, சட்ணிச்சண்டை, அப்பளச்சண்டைதான்! அப்பா உலக ரகஸ்யமறிந்த அனுபவ ஞானி; அம்மா பொறுமையே உருக்கொண்ட புனிதவதி. இவ்விருவருக்கும் சந்ததியாக என் தமையனார் பிறந்தது ஒரு பெரிய பிரபஞ்ச விநோதமல்லவா!

அவரது மனைவியான என் அண்ணியார் சுத்த நாட்டுப்புறம். கணவரைப் பேணுவதே கற்புடைப் பெண்டிர் கடமை என்ற திட நம்பிக்கையுடையவர்! வாயாடிப் பெண்களால் சீர்திருந்திய டம்பாச்சாரிகள் பலருண்டு. கலியாணமாகுமுன் காசைக் கரியாக்கிய எத்தனையோ விடர்கள், கலியாணமான பின், மனைவியின் வாயாடித்தனத்தால் குணம் மாறுபட்டு உத்தமர்களானதை நான் பார்த்திருக்கிறேன். சில குடும்பங்களுக்கு வாயாடிப் பெண்களும் தேவையே. "பக்கத்து வீட்டுப் பாமணி அம்மாளைப்போல் என் அண்ணியார் வாய்த் துடிப்புடையவளாயிருந்தால், அண்ணா தங்கக் கம்பி ஆகியிருப்பாரே" என நான் பலமுறை எண்ணியதுண்டு.

பாமணி அம்மாளின் புருஷன் முதலில் குஷால் பிரியராகவே இருந்தார். கிளாஸ்கோ மல்லைத் தவிர வேறு எதையும் கட்டமாட்டார். பட்டுச் சொக்காய்தான் அவரது மேனியை எப்பொழுதும் அலங்கரித்துக் கொண்டிருக்கும். பனாரிஸ் பட்டு ஜரிகை அங்கவஸ்திரமே அவரது உடலுக்குப் பிரியமானது. ரூபாய்கள் அவருக்கு அணாப்பட்ட பாடுதான். ஜேபியிலிருந்து இடக்கையால் ரூபாய்களை எடுத்து அவர் அலட்சியமாக வீசுவதைப் பார்த்தால், அவர் கர்ணாவதாரம் என்றே தோன்றும். இப்படியெல்லாம் இருந்தாலும், பாமணியைக் கைப்பிடித்த ஒரு வருஷத்துக்குள் ஒரு புது மனிதனாகி விட்டதுதான் வெகு ஆச்சரியம். இப்பொழுது அவர் கட்டுவதுமில் 'கதர்'. சொக்காயை மறந்து வெகுகாலமாகி விட்டது. பனாரிஸ் துப்பட்டாவின் ஸ்தானத்தை ஒரு சாதாரண நூல் துண்டு பெற்றுவிட்டது. 'உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம்' என்பதே அவரது இன்றைய ஜீவிய லட்சியம். "என் மூத்த அண்ணியும் பாமணியைப்போல் இருந்திருந்தால் அண்ணா திருந்தியிருக்க மாட்டாரா?" என்றெல்லாம் நான் பல சமயம் மனோராஜ்யம் செய்ததுண்டு. ஆனால் மனோராஜ்யம் நிஜராஜ்யம் ஆகாதல்லவா! ஆகவே அண்ணி அண்ணியாகவே இருக்கிறார். அண்ணாவும் அண்ணாவாகவே இருக்கிறார்; இம்மியும் மாற்றமடையவில்லை.

## துன்பம் தீர வழி

ஒரு அரசர் எப்பொழுதும் துன்பப்பட்டுக்கொண்டேயிருந்தார். துன்பத்தை நீக்கப் பல வழிகளிலும் முயன்றார். பயன்படவில்லை. இறுதியில் ஒரு வேதாந்தியை அழைத்து யோசனை கேட்டார். "உன் ராஜ்யத்துக்குள்ளே போதுமென்ற மனத்துடனுள்ள ஒருவனைக் கண்டுபிடித்து, அவனது சட்டையை வாங்கி அணிந்து கொண்டாயானால் துன்பம் அனைத்தும் பறந்துவிடும்" என்று அவர் யோசனை சொன்னார். அரசன் எங்கெங்கோ தேடிக் கடைசியாய் அப்படிப்பட்ட ஒரு மனிதனைக் கண்டுபிடித்தார். ஆனால் அவனிடம் சட்டையில்லை!

செக்காவ் சித்திரம்:

# பேரும் புகழும்

க. நா. சுப்ரமண்யம்

அவர்கள் இருவரும் அதற்குமுன் ஒருவரை யொருவர் சந்தித்த தில்லை. ரயிலில் அந்த முதல் வகுப்பு வண்டியில் அவர்கள் இருவரையுந் தவிர வேறு யாருமில்லை. பெரிய ஜங்ஷனில் வண்டி நின்றதும் இருவரும் இறங்கிப் போய்த் திருப்தியாய்ச் சாப்பிட்டுவிட்டு வந்தனர். ஹாய்யாகச் சிறிது நேரம் மெத்தையில் சாய்ந்து கிடந்தனர்.

அப்புறம் ஒருவன் மெதுவாகச் சொன்னான்: "என்னை மன்னிக்கவேணும். எனக்கு என்னவோ எப்பவுமே சரியாகச் சாப்பிட்டபின் யாரிடமாவது ஒரு அரை மணி பேசாவிட்டால் உடம்பு சரியாக இராது. அப்படிப் பேசாவிட்டால் அன்று நாள் முழுவதுமே வீணாகிவிட்டது போலிருக்கும். நான் உங்களிடம் பேச விரும்புகிறேன். உங்களுக்கு ஒரு ஆக்ஷேபமும் இல்லையே!"

இரண்டாமவர் அதே குரலில், ஆனால் கொஞ்சம் தயங்கித் தயங்கி, அசையாமல் சாய்ந்தபடியே பதிலளித்தார்: "ஆமாம், பேச்சு என்பது மனித வாழ்வுக்கு இன்றியமையாத அம்சங்களில் ஒன்று. எனக்குப் பேச அவ்வளவாகத் தெரியாது என்பதைத் தவிர, நீங்கள் பேசினால் கேட்பதற்கு எனக்கு ஒரு ஆக்ஷேபமும் இல்லை. நீங்கள் என்ன சொன்னாலும் நான் என் முழுக்கவனத்துடனும் கேட்கத் தயார்."

"அதுவும் இன்று கிடைத்ததே அது போல நல்ல சாப்பாடாகக் கிடைத்தால், அதற்கப்புறம்தான் என் மனத்தேர் வெகு வேகமாக ஓட ஆரம்பிக்கும். வயிறு நிறைந்திருக்கும் போதுதான் என் ஆயுளில் மிகச் சிறந்த சிந்தனைகள் எல்லாம் உதித்திருக்கின்றன.

"இதைப் பாருங்கள் உதாரணமாக. நாம் சாப்பிட்டுவிட்டு ஹோட்டலிலிருந்து வெளியே வரும்போது இருவர் நின்று பேசிக் கொண்டிருந்தார்களே, கவனித்தீர்களா? அவர்கள் என்ன சொல்லிக் கொண்டிருந்தார்கள் தெரியுமா? ஒருவன் மற்றொருவனைப் பார்த்துச் சொல்லுகிறான்: 'உனக் கென்னப்பா குறை: நீ பேரும் புகழும் பெற்றுவிட்டாய். இனிமேல் கவலை யென்ன?' என்று. மற்றவன் பெருமையுடன் புன் சிரிப்புச் சிரித்தான்.

"அவர்களிருவரும் நடிகர்களாகவோ, பத்திரிகாசிரியர்களாகவோ இருக்க வேணும் என்று தோன்றிற்று எனக்கு. வேறு எந்த வழியிலும் அவர்கள் பிரபலமடைந்திருப்பார்கள் என்று எனக்கு அவர்களைப் பார்த்தால் தெரியவில்லை. ஆனால் அவர்களைப்பற்றி நான் இப்போது பேச விரும்பவில்லை. ஒட்டுக்கேட்ட அந்த வாக்கியத்தால் எழுப்பப்பட்டு என் மனதில் பல தரப்பட்ட சிந்தனைகள் கிளம்புகின்றன.

"புகழ், பெருமை என்பதை எப்படிச் சரியானபடி அர்த்தம் பண்ணிக்கொள்வது என்ற யோசனையில் நான் ஈடுபட்டிருக்கிறேன். உங்களுக்கு அதைப் பற்றி என்ன தோணுகிறது? புகழ் என்பது பழைய, அழுக்குப்படிந்த கந்தலாடையில் பளிச்சென்று தெரியும் புதிய ஒட்டு என்றான் ஒரு ஆசிரியன். எனக்கு அவன் சொன்னது சரிதான் என்று தோணுகிறது. புகழ் என்ற ஒட்டினால் கந்தலாடையெனும் மனிதனுக்கு ஏதாவது லாபமுண்டா?......ஆனால் புகழ் என்ற வார்த்தைக்கு இன்னும் உலகில் எந்தப் பாஷையிலும் சரியான அர்த்தம் கண்டு பிடிக்கப்படவில்லை என்றுதான் எனக்குத் தோணுகிறது."

இரண்டாமவர் கேட்டார்: "புகழ் என்பது என்ன என்று தெரிந்து கொண்டு என்ன ஆகவேணும் இப்போது? அவசியம் என்ன அப்படி!"

"அப்படியா சொல்லுவது? இதோ பாருங்கள். புகழ் என்பது என்ன என்று தெரிந்தால் அதைப் பெறும் வழியும் ஒருவாறு தெரியவரும்.

"என்னைப் பாருங்கள். நான் வாலிபனாக இருந்தபோது—ஆமாம், அது ரொம்ப நாளைக்கு முன்தான்—பேரும் புகழும் எப்படியாவது சம்பாதித்துவிட வேணும் என்று அரும்பாடுபட்டேன். உலகம் முழுவதும் என் பெயரும், என் செயல்களும் பரவியிருக்கவேணும் என்று அபாரப் பிரேமை எனக்கு. அதற்காக நான் விழுந்து விழுந்து இரவு பகலாக உழைத்தேன்; படித்தேன்; சாப்பாட்டைக்கூட லக்ஷியம் செய்யாமல் கருமமே கண்ணாயிருந்தேன்.

"பேரும் புகழ் பெறுவதற்கு வேண்டிய அம்சங்கள் என்னிடம் நிறைந்திருந்தன என்றே நான் நினைக்கிறேன். நான் பெருமையாகச் சொல்லவில்லை. எஞ்ஜினியர் தொழிலில் என்னைப்போல் உழைத்தவன் இருக்கமாட்டான். இந்தத் தேசத்திலே உள்ள ஆறு பெரிய பாலங்களில் மூன்று என்னால் கட்டப்பட்டவைதான். மூன்று பெரிய நகரங்களில் தண்ணீர்த் திட்டம் என்னால் வகுக்கப்பட்டுப் பொது ஜனங்களுக்கு மிகவும் நன்மை பயக்கும் முறையில் ஏற்பாடு செய்யப்பட்டது. என் வேலைத்திறத்தை மெச்சி அன்னிய நாடுகளின் சர்க்கார்களில்கூடச் சிலர் என்னை வேண்டி அழைத்திருக்கின்றனர்.

"எஞ்ஜினியராக மட்டுமல்ல. நான் ரஸாயனத்திலும் ஆராய்ச்சிகள் பல புரிந்து வெளியிட்டிருக்கிறேன். என் ஆராய்ச்சி முடிவுகள் எல்லாம் நவீன ரஸாயனப் பாட புஸ்தகங்களில் கூடச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

"என் நடத்தையிலும் குற்றங் கண்டு பிடிக்க முடியாது. நான் ஒருதரமாவது லஞ்சம் வாங்கி அகப்பட்டுக்கொண்டது கிடையாது. என் சகா உத்தியோகஸ்தர்களும் சரி பொது ஜனங்களும் சரி, என்மேல் எவ்விதப் பழியும் சாற்றமுடியாது. எங்கள் ஊர் நகரக் கவுன்சிலில் நான் ஒரு அங்கத்தினன்.

"என் பிரதாபங்களை இன்னும் விவரித்து உங்களைத் தொந்திரவுசெய்ய எனக் கிஷ்டமில்லை. இதுதான் நான் சொல்லக்கூடும்: இப்போது பேரும் புகழும் பெற்று விளங்கும் பலரைவிட நான் அதிகமாகவே, ரொம்ப அதிகமாகவே, அத்தகைய பேரும் புகழும் பெற அருகதையானவன் என்று, பக்ஷபாதமின்றி யோசிக்கையில், எனக்குத் தோணுகிறது. ஆனால் இப்போது சாகும் தருவாயில் இருக்கும் எனக்கு எவ்விதப் புகழும் இல்லை. தெருவில் குறுக்கும் நெடுக்கும் ஓடும் சொறி நாய்க்குள்ள பெருமைதான் எனக்கிருக்கிறது; அதைக் கவனிப்பதைப் போலத்தான் என்னை ஜனங்கள் கவனிக்கிறார்கள்."

மற்றவர் சொன்னார்: "அதை எப்படி நீங்கள் சொல்லலாம்? நீங்கள் அறியாமலே உங்களுக்குப் புகழ் இருக்கலாம்."

"இருக்கலாம்; சரி. ஆனால் இருக்கிறதா என்று இப்பவே பார்த்துவிட

லாமே! என் பெயர் க்றுகுனாவ்; அந்தப் பெயரை நீங்கள் எப்பவாவது இதற்குமுன் கேட்டிருக்கிறீர்களா?''

சற்று நேரம் பதில் சொல்லாமல் தயங்கினார் நண்பர். முகத்தைக் கொஞ்சம் சுருக்கிக்கொண்டார். கடைசியில் "இல்லை; நான் கேள்விப்பட்ட தில்லை" என்றார்.

"க்றுகுனாவ்தான் என் பெயர். நீங்கள் படித்தவர்தான்; என்னைப்போலவே பெரியவர். ஆனால் நீங்களும்கூட என்னைப்பற்றிக் கேள்விப்பட்ட தில்லை என்று ஏற்படுகிறது பார்த்தீர்களா? புகழ் பெறுவதற்குரிய சரியான மார்க்கத்தை நான் பின்பற்ற வில்லை என்று ஏற்படுகிற தில்லையா?''

"புகழ் பெறுவதற்குச் சரியான மார்க்கம் எது?''

"அது தெரிந்தால் நானே பயன்படுத்திக்கொண் டிருப்பேனே! சாமர்த்தியம் மட்டும் போதாது. மேதையும் சில சமயம் போதுவ தில்லை. என்னுடன் ஒப்பிட்டால், பதர்கள், கேவலமானவர்கள், மிகச் சிறியவர்கள் என்று சொல்ல வேண்டியவர்கள் எல்லோரும்கூடப் புகழுடன் வாழ்கிறார்கள்! அவர்கள் ஒரு சிறிதும் சிரமப்பட்ட தில்லை; என்னைப் போல் உழைத்த தில்லை. அவர்களுக்குச் சாமர்த்தியமும் கிடையாது; தொழில் வன்மையுங் கிடையாது. புகழுக்காக என்று அவர்கள் எவ்விதத் தியாகமும் செய்தது கிடையாது! ஆனால் அவர்களுடைய பெயர்கள் சதா பத்திரிகைகளில் அடிபடுகின்றன. அவர்களுடைய பெயரை ஜனங்கள் சதா உச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்.''

"நான் பேசுவதைக் கேட்பது உங்களுக்கு அலுப்பாக இல்லாவிட்டால் இன்னொரு விஷயம் சொல்லுகிறேன்.''

"சொல்லுங்கள்''

"பல வருஷங்களுக்கு முன் நான் ஒரு சின்ன டவுனில் ஒரு பாலம் கட்டும் வேலையை ஒப்புக்கொண்டேன். சற்றுச் சிரமமான வேலைதான். அந்தப் பாலத்தைக் கட்ட என் தொழில் ஞானம் முழுவதையும் உபயோகிக்க வேண்டி யிருந்தது; உபயோகித்துக் கட்டினேன். டவுன் சின்ன டவுன்தான். ஒரு முப்பதினாயிரம்தான் ஜனத்தொகை யிருக்கும். பாலம் கட்டி முடிந்தபின் ஒரு நல்ல நாள் பார்த்து அதைத் திறப்பதற்கு அந்தப் பிரதேசத்து கவர்னரையே வரவழைத்தார்கள். எனக்கு இப்போதுள்ள அனுபவம் அப்போது கிடையாது. 'பாலத் திறப்புவிழாவில் எனக்குப் பெரிய மரியாதை கிடைக்கும்; நகர் முழுவதும் என்னைப்பற்றிய பேச்சாகவே யிருக்கும்' என்று எண்ணிக்கொண் டிருந்தேன்.

"அந்தச் சுபதினமும் வந்தது. கவர்னர் வந்தார். விருந்தின்போது என்னை கவர்னருக்கு அறிமுகம் செய்துவைத்தார்கள். என்னுடன் கவர்னர் இரண்டு நிமிஷம் பேசிக்கொண் டிருந்தார். அப்புறம் அவருக்கு எவ்வளவோ ஜோலிகள், போய்விட்டார். அதைப்பற்றி எனக்கு வருத்தமில்லை. பாலத்தின் திறப்பு வைபவத்துக்கு எனக்கும் அழைப்பு வந்திருந்தது; போனேன். கவர்னர் பக்கத்தில் எனக்கும் இடம் அகப்படுமா என்று பார்த்தேன். கவர்னரைச் சுற்றி உள்ளூர்ப் பெரிய மனிதர்கள் எல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் நான் வருவதைப் பார்த்தார்கள். ஆனால் ஒருவராவது எழுந்து எனக்கு இடம் கொடுக்கவோ, வா என்று சொல்லவோ இல்லை.

"சரிதான்: பெரிய மனுஷர்கள் விஷயமே எப்பவும் இப்படித்தான் என்று நான் அங்கிருந்து நழுவி, திறப்பு விழா வேடிக்கை பார்க்க வந்திருந்த ஜனங்களுடன் கலந்துகொண்டேன். உள்ளூரில் அவர்களின் நன்மைக்காகக் கட்டப்பட்டிருந்த அந்தப் பாலத்தைப் பற்றிய எல்லா விஷயங்களையும் ஊரார் அறிந்திருப்பார்கள் என்று நான் எண்ணினேன்; ஏமாந்தேன். கொஞ்சம் விஷயந் தெரிந்தவர்களாகத் தோன்றிய பலரைக் கேட்டுப்பார்த்தேன்: 'இந்தப் பாலத்தைக் கட்டியது யார் தெரியுமா?' என்று. ஒருவருக்காவது தெரியவில்லை. 'யாராவது எஞ்ஜினியர்தான் கட்டியிருப்பான்' என்றார்கள். அவர்கள் அதைச் சொன்ன குரலே எனக்கு வெறுப்பைத் தந்தது.

"திடீர் என்று கூட்டத்தில் கிசுகிசுவென்று பேச்சு ஆரம்பித்தது. ஜனங்கள் ஒரே பக்கம் பார்த்தனர். என்னடா விஷயம் என்று நானும் திரும்பிப் பார்த்தேன். சோதாக்கள் பத்துப்பேர் புடைசூழ ஒரு ஸ்திரீ வந்துகொண்டிருந்தாள். கூட்டத்தில் எல்லோருடைய கண்களும் அவள் பக்கம் திரும்பி இருந்தன. எல்லோருடைய வாய்களும் அவளைப் பற்றி ஏதேதோ சொல்லிக்கொண்டிருந்தன. 'என்ன அழகு! அடடா! ஒரு பார்வையில் மயக்கி விடுகிறாளே!' என்று என் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஒருவன் சொல்லிக்கொண் டிருந்தான்.

"'யாரப்பா அது?' என்று கேட்டேன் நான். அவனுக்குத் தன் காதையே நம்ப முடியவில்லை. என்னை ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தான். அவளைத் தெரிந்து கொள்ளாமல் ஒருவன் இருக்கவும் முடியுமா என்று ஆச்சரியமாக இருந்தது அவனுக்கு. 'யார் அவள் என்றா கேட்டீர்கள்?' என்றான். 'யார் என்றா கேட்டீர்கள்?' என்றான் இரண்டாந்தரம். அப்புறம் முகத்திலும் குரலிலும் ஆனந்தம் ததும்பச் சொன்னான்: 'அவள்தான் நடிகை மேரி. அவளைத் தெரியாதவர்களும் உண்டோ!' நான் அவளைப் பற்றித் தெரிந்துகொள்ளாமல் இருப்பதை விட இறப்பதே மேல் என்று அவன் குரலும் பார்வையும் கூறின. சற்று நேரத்துக்கெல்லாம் அவள் – அந்த நடிகை – கவர்னர் உட்கார்ந்திருந்த பக்கம் போனாள். அங்கு உட்கார்ந்திருந்தவர்கள் எல்லோரும் – எல்லோரும் – எழுந்து அவளுக்கு இடங்கொடுத்து வரவேற்றார்கள்!

"மறுநாள் பத்திரிகைகளிலாவது என் பெயர் வாராதா என்று பார்த்தேன் நான். எல்லாப் பத்திரிகைகளும் பாலத் திறப்பு விழாவைப் பற்றிப் பிரமாதமாக எழுதி யிருந்தன. ஆனால் அவற்றில் ஒன்றிலாவது பாலத்தைக் கட்டியவனைப் பற்றி ஒரு வரியைக் காணவில்லை; என் பெயர் கூட ஒரு இடத்திலும் வரவில்லை. ஆனால் அந்த நடிகை மேரியைப் பற்றிப் பத்தி பத்தியாக—அவள் என்ன உடுத்தியிருந்தாள், என்ன சொன்னாள், அவள் ஜலதோஷம் எப்படி இருந்தது—என்றெல்லாம் எழுதி யிருந்தன.

"அவள் அப்படிப் பிரமாதமான நடிகையா என்று அறிய எண்ணினேன். அந்த ஊரில் எனக்கு அதற்குமேல் ஒருவேலையும் இல்லா விட்டாலும் பதினைந்து நாள் தங்கி மேரி நடித்த ஒரு நாடகத்தைப் பார்த்தேன். அவளைத் தெரிந்தவர்களைக் கொண்டுதான் அவளை அறிமுகம் செய்துகொண்டேன். அவளுக்குச் சம்பாஷணைத் திறனோ மூளையோ பூஜ்யம் என்றுதான் சொல்ல வேணும். நடிப்பும், பாட்டும் கிட்டத்தட்டப் பூஜ்யம்தான். மொத்தத்தில் அவள் நம்முடைய மற்ற நடிகைகளுக்கு எவ்விதத்திலும் கீழ்பட்டவளு மல்ல, மேற்பட்டவளு மல்ல; அவளைப் பற்றித்தான் இந்தப் பாடு!''

"இது ஆயிற்றா? இன்னொரு உதாரணம் சொல்லுகிறேன். நம்மூரில்தான் இப்படி. வெளியூரில் இப்படி இராது என்று நம்பினேன் நான். அந்தச் சமயம் வெளியூரில் பல பிரபலஸ்தர்கள் அடங்கிய ஒரு கமிட்டி ஏற்பாடு செய்திருந்த ஒரு ரஸாயனப் போட்டிக்கு நானும் விடை யனுப்பி யிருந்தேன். முதல் பரிசு எனக்குக் கிடைத்தது. பரிசை நேரில்வந்து வாங்கிக் கொள்ளும்படியும், அச்சமயம் அங்குப் பிரசங்கம் செய்ய வேணும் என்றும் எனக்கு அழைப்பு வந்தது. 'அப்பாடி! கடைசியில் புகழ் வரவே வந்துவிட்டது' என்ற பூரிப்புடன், நான் அழைப்புக் கிணங்கிப் போனேன்.

"நான் அவ்வூர் சென்றவுடன் ஊரிலிருந்த பத்திரிகைகள் எல்லாவற்றையும் வாங்கி, ஆவலுடன் ரஸாயனப் போட்டியைப் பற்றியும் பரிசு பெற்றவனைப் பற்றியும் என்ன எழுதியிருக்கிறது என்று பார்த்தேன். பக்கம் பக்கமாக நடிகைகளையும் உள்ளூர் முனிசிபல் கவுன்சிலர்களையும் பற்றி நிறைய எழுதியிருந்தது. நான் வாங்கிப்பார்த்த அரைடஜன் பத்திரிகைகளில் ஒன்றில் மட்டும் ஒரு மூலையில், சின்ன, கண்ணில் படமுடியாத எழுத்துக்களில், பரிசு பெற்றவன் இவன் என்று என் பெயர் எழுதப்பட்டிருந்தது. அப்படியும் என் பெயர் தப்பாக எழுதப்பட்டிருந்தது.

"நான் என் பிரசங்கத்தைச் செய்து முடித்தேன். அதைக்கேட்க வந்தவர்கள் ஒரு டஜனுக்கு மேல் இல்லை. அவர்களில் ஒருவர் ஜோராகக் குறட்டைவிட ஆரம்பிக்கும் சமயத்தில் நல்ல வேளையாக என் பிரசங்கம் முடிந்துவிட்டது. நான் எவ்வளவோ சிரமப்பட்டுப் பல புது விஷயங்களையும் புதுக் கொள்கைகளையும் விளக்கிப் பேசினேன். ஆனால் அதைப் பற்றியும் ஒரு பத்திரிகையும் ஒரு வார்த்தையும் எழுதவில்லை.

"இம்மாதிரி நான் உங்களுக்குப் பல உதாரணங்கள் சொல்ல முடியும். ஆனால் என்ன பிரயோஜனம்? முடிவு இதுதான். எனக்கும் புகழுக்கும் வெகுதூரம் என்று இப்போது நான் விட்டுவிட்டேன். அவ்வளவுதான்."

ரயில் இச்சமயம் ஒரு சின்ன ஸ்டேஷனில் நின்றது. வண்டியிலிருந்து யாரோ ஒருவன் இறங்கினான். ப்ளாட்பாரத்தில் இருந்தவர்கள் எல்லோரும் அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துத் தங்களுக்குள்ளேயே கிசுகிசு வென்று பேசிக் கொண்டனர்.

"அவன் புகழ்பெற்றவன்; அவன் யார் என்று விசாரிக்கிறேன். பாருங்கள், அவன் யாராவது பயூனாகவாவது நடிகனாகவாவது, சர்க்கஸ்வாலா வாகவாவது தான் இருப்பான், பாருங்களேன்......" என்றார் எஞ்ஜினியர்.

ஒரு போர்ட்டரைக் கூப்பிட்டு விசாரித்தார். அவன் — அந்தப் பிரபலஸ்தன்—ஏதோ குஸ்தியில் ஜயித்த வீரன் என்று அறிந்துகொண்டார்.

"பார்த்தீர்களா? நம்மூரில் எல்லோருக்கும் நடிகர்களையும், பயூன்களையும், சர்க்கஸ் வாலாக்களையும், குஸ்திப் பயில்வான்களையும் தெரியும்; தில்லானாப் பாடுபவர்களையும் தெரியும்; பாங்கில் கொள்ளையடித்தவனைத் தெரியும். ஆனால் யாருக்காவது நல்ல இலக்கிய ஆசிரியனையோ, கலைஞனையோ பற்றி ஒன்றும் தெரியாது. ......இதுதான் நம்முடைய இன்றைய அறிவு......என்ன உலகம்......!"

அவருடைய உணர்ச்சி மிகுந்த வார்த்தைகள் ஆத்திரத்துடன் வெளிவந்தன.

முதல் வகுப்பு வண்டியில் அவருடன் இருந்தவர் புன்சிரிப்புடன் தயங்கிய படியே சொன்னார்: "நான் உங்களை ஒரு கேள்வி கேட்கட்டுமா?"

"கேளுங்களேன்"

"நீங்கள் புஷ்காவ் என்ற பெயரைக் கேட்டதுண்டா?"

"புஷ்காவா?........உம்........இல்லை........"

"உம்....அதுதான் என் பெயர். நான் சென்ற முப்பத்தைந்து வருஷங்களாக ஒரு பெரிய சர்வகலாசாலையில் பேராசிரியனாக இருந்து வருகிறேன். பல புஸ்தகங்கள் எழுதியிருக்கிறேன். பல விஞ்ஞானச் சங்கங்களில் அங்கத்தினன். ......எனினும் என் பெயர் உங்களுக்குக்கூடத் தெரியவில்லை."

இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு சிரிக்க ஆரம்பித்தனர்.

---

### கல்யாண அவசியம்

"எப்பாடு பட்டாவது கலியாணம் செய்துகொள். நல்ல மனைவியாய்க் கிடைத்தால், நீ இன்பம் அடைவாய். கெட்ட மனைவியாய்க் கிடைத்தால், ஒரு வேதாந்தி யாகிவிடுவாய்; வேதாந்தி யாவதோ எந்த மனிதனுக்கும் நல்லதேயாகும்."

—ஸாக்ரடீஸ்.

## நிஜந்தானா?



பிரம்மசாரி ஹிட்லரின் ரகஸ்யக் காதல் நிஜந்தானா என்று ஆச்சர்யப் படுகிறீர்களா; வேண்டாம். நீங்கள் இந்தப் படத்தைப் பார்த்து ஆச்சர்யப்பட வேண்டியதுதான். ஆனால், இதற் கல்ல; வேறோர் விநோதத்துக்காக. படத்தி லிருப்பது ஹிட்லரல்ல; அவரோ மாதிரி கானடாவிலுள்ள ஜே. எ. விட்டாகர் என்பவர்தான் போட்டோவி லிருப்பவர். அவர் பிரிட்டிஷ் பிரஜை. தெருவிலே அவர் போனால், "ஹிட்லர்! ஹிட்லர்!" என்று குழந்தைகள் கூச்சலிட்டு அவரைத் துரத்திக்கொண்டு போகின்றன! ஹிட்லரின் தத்ரூபமா யிருக்கிறார். ஹிட்லர் போலவே தமது ரூபம் இருப்பதை எப்படி வேண்டுமானாலும் தங்கள் சர்க்கார் பிரயோசனப் படுத்திக்கொள்ளலாம் என்று தம் சர்க்காருக்கு இவர் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்!

JL
11241, N36, S
M40.3




134180

[சுவாமி சுத்தானந்த பாரதியார்]

## மூன்றும் அங்கம்

### ஐந்தாம் காட்சி (தொடர்ச்சி)

**சிவம்**

கொட்டு கொட்டு கொட்டு கண்மழை !
சம்பந்தி விருந்து சாப்பிடு கின்றேன்.
வாடீ மங்களம் மணமக னுடனே !

**மங்களம்**

மணமு மில்லை மகனு மில்லை !
அப்பா வுன்னை இப்படி யாக்கிய
கொடியர் வீட்டிற் கொட்ட மடிக்கிறுர் !
ஏற்ற மிழுக்கும் எளிய மாடுபோல்,
செக்கு மாடு போல், சிவனற்றுப்
பார மிழுக்கும் பஞ்சை மாடுபோல்
உழைத்துழைத் திவர்க்கே ஓடாய்ப் போனேன் !
செல்வத் திருவைச் செருப்பென மதித்தனர்.
துக்க மெல்லாம் யாரிடஞ் சொல்வேன் ?

**சிவம்**

சுகதுக் கத்தைத் தூவெனத் தள்ளு !
வெய்யி லாலே மழையும் பெய்யும்.

**மங்களம்**

நமது வீடிது ... நமக்கே யுரிமை
உரிமை யிழந்து வறுமை சுமப்பதோ ?
வீட்டைக் காப்போம், விடுதலை முழக்குவோம்,
அன்னியப் பேய்களை அடியோ டொழிப்போம்.

[சுந்தரி, பொன்னு திடீரெனக் கதவைத் திறந்து விளக்குடன் வருதல்]

**சுந்தரி**

மோசம் போனது ! மோசம் போனது !

**பொன்னு**

திக்குவாய் ராஸ்கல் திறந்தான் கதவை !

**சுந்தரி**

யாரிந் நாயை யவிழ்த்து விட்டது ?

**பொன்னு**

யாரைக் கேட்டுச் சோறு தந்தாய் ?
இன்றுடன் அப்பு நின்றிட வேண்டும்.
ஓட்டலில் உண்போம் உல்லாச மாக !

**அப்பு**

இஇவ் வீட்டின் எஜமான் இவரே !

**மங்களம்**

யாரென் வீட்டில் அதர்மப் பேய்கள் !
கடவுளே யிந்தக் கொடுமையைக் காணுய் !

**பொன்னு**

சாமி கடவுள் சாத்திர மென்றே
பிதற்றியுன் அப்பன் பித்த ஞனன்.

**மங்களம்**

என்னைப் பெற்ருள், இலக்குமி யன்னை,
அருந்ததி போன்ருள், அன்புத் தெய்வம்,
கணவனுக் கேற்ற குணவதி யானுள்.
வாசுகி போன்ற மறுவிலா நங்கை ;
அருளும் திருவும், அறிவும் அடக்கமும்
பொலிந்த நல்ல புண்ணியத் தெய்வம்
விளங்கிய வீட்டில் வேசை புகுந்தாள் ;
கணவனைக் கெடுத்தாள் ; கன்னியை அடித்தாள
விடுதலை பேசிப் பெண்மையை விற்ருள்
அவளைக் கண்டால் ஆத்திரம் பொங்குதே !

**சுந்தரி**

குலைத்தது போதும் கொல்லை நாயே !

**பொன்னு**

தூதூ நாயே, போபோ வெளியே !

**மங்களம்**

நீபோ வெளியே, நீசப் பதரே !

**சுந்தரி**

கணவனை இப்படிக் கடிபவள் பெண்ணா ?

**மங்களம்**

கொழுநனை அப்படிக் கொன்றவள் பெண்ணா ?
கண்ணை யிழந்த காம ராக்ஷஸி
ஒன்று சொன்னால் ஒன்பது சொல்வேன் ;
பிரிய கணவனைப் பித்த னாக்கினாய்,
ஆகாத பேரை அள்ளிக் கலந்தாய்.
உதட்டில் நகையும், உளத்தில் பகையும்
வாயிற் பொய்யும், வயிற்றிலே பல்லும்
கொண்டென் மாசிலாக் குலத்தைக் கெடுத்தாய் !

**சுந்தரி**

பெண்ணாய்ப் பிறந்து பேயாய் நடித்தாய் !

**மங்களம்**

பேயாய்ப் பிறந்து பெண்ணென நடித்தாய் !

**சுந்தரி**

கொல்லு, கொல்லு கொள்ளிவாய்ப் பிசாசை !

[அடிக்கப் போகிறாள்]

**மங்களம்**

பாதகி, யுன்னைப் பகவான் கேட்பார் !

**சிவம்**

[குறுக்கே விழுந்து]
கக்குதே எரிமலை கந்தகத் தீயை !
தீப்பிடித்தது, தீப் பிடித்தது
தீனிக் கிடங்கினிலே
நாக் கொளுத்திய தீப் பிடித்தது
நல்ல வீட்டினிலே !

[ஆடிப்பாடிக் குதித்து உள்ளே ஓடுகிறார்]

**பொன்னு**

பைத்தியம் உள்ளே பாய்ந்தது...துரத்து !

[பொன்னு துரத்திச் செல்கிறான்]

**மங்களம்**

அப்பா வுன்னை அடிக்கப் போகிறார்
ஐயோ அப்பா............!

[மங்களம் உள்ளே போக முயல்கிறாள்]

**சுந்தரி**

நில்லடி அடிமை !
மாட்டுக் கொட்டிலிற் பூட்டி வைக்கிறேன்.

[முரட்டுத்தனமாகத் தள்ளிப் பூட்டுகிறாள்]

**மங்களம்**

யாரடி அடிமை ? யாருடை வீடிது ?

**சுந்தரி**

வீடென் வீடு...வீதி நாயே !
பேசினாற் பிண்டம் பெருங்கா யந்தான் !
நானிங் கரசி......

**மங்களம்**

நானே யரசி !
இந்த வீடென் சொந்த வீடாம்.

**சுந்தரி**

தகரங் கெட்டுத் தங்க மாமோ ?

**மங்களம்**

குப்பை யுயர்ந்து கோபுர மாமோ ?

**சுந்தரி**

அழுந்த மிதித்துனை அப்பள மாக்குவேன்.

**மங்களம்**

அக்கிர மத்தை அம்பல மாக்குவேன்,

**சுந்தரி**

இங்கே இனிநீ யிருக்க மாட்டாய்.

**மங்களம்**

உரிமை எனக்கென ஊரெலாஞ் சொல்லும்.
உனது நாற்றம் ஊரெலாந் தெரியும்.
செத்தா லுஞ்சரி...திருமா ளிகையில்
வேசை யிருக்க விடவே மாட்டேன்,

**சுந்தரி**

சிரித்துக் கெட்டாள் திரௌபதை யன்று ;
வாயாற் கெட்டாள் மங்கள மின்று.

**மங்களம்**

சுந்தரி கெட்டாள் சுதந்தரத் திமிரால் ;
உயிர்போ னலும் உரிமையை நாட்டுவேன்.

**சுந்தரி**

சுட்டுக் கொல்லுவேன் துட்டப் பேயே !

[அடிக்கப் போகிறாள். இச் சமயம் உள்ளிருந்து பெரிய சத்தம் ; சிவம் ரகளை செய்தல்]

**பொன்னு**

ஐயோ செத்தேன், ஐயையோ செத்தேன் !
சுந்தரீ, சுந்தரீ சுருக்க வாடீ !

**சுந்தரி**

சென்று வந்து செருப்பா லடிக்கிறேன்.

[உள்ளே ஓடுகிறாள்]

**மங்களம்**

அச்சந் தவிர்ப்பாய் அன்பர் நண்பா !
அரக்கரை வெல்லும் ஆற்ற லளிப்பாய்.
எத்துயர் வரினும் எதிர்த்து வெல்லும்
சக்தி யருளாய், சரணம் முருகா !

[வருதல் அப்பு, சீனு]

**அப்பு**

சிசி சிசி சீக்கிரம், சீக்கிரம் !

**சீனு**

மங்களம் வாவா !

[கதவைத் திறந்து மங்களத்தை இட்டுச்செல்லல்]

மங்களம்

எங்கே செல்வது......?

சீனு

வள்ளிவீட் டிற்குத் துள்ளி யோடு!
இங்கே யிருந்தால் இறப்ப துறுதி;
பொன்னுவும் அவளும் புட்டி போட்டு
வெறிகொண் டிருக்கிறார்; வெய்யதுப் பாக்கி
வைத்துக் கொண்டுனே வணக்க முயல்வார்;
ஓடு விரைவாய்! ஓடு விரைவாய்!

மங்களம்

முருகா, முருகா, சோதி முருகா!
எத்தனை யின்னல் இச்சிறு வாழ்விலே!
சீனு, வீட்டைத் திறமுடன் காப்பாய்......!

[ஓடுகிறாள்]

சீனு

வீரர் போலே வீட்டைக் காப்போம்

[சீனு கொல்லைக் கதவைப் பூட்டுகிறான். அப்புவை அதே அறையில் படுக்க வைத்துப் புடவை போர்த்துகிறான்.]

சீனு

வாய்திற வாதே, வர்ணச் சேலையுள்
பொதிந்திரு சற்றே! பூட்டிச் செல்கிறேன்,
சிவாஜி வேலை, செய்வோ மின்று!

அப்பு

தத தத தலையணை கொண்டுவா!

[சீனு செல்கிறான், அப்பு பிணம்போல் புடவையுள் மூடுண்டு கிடக்கிறான்.]

## ஆறுங் காட்சி

[அலங்காரக் கூடம். **சிவம்** அங்கிருக்கும் கண்ணாடிச் சாமான்கள், ரேடியோ, சாராயப் புட்டிகள், முகச்சாயப் புட்டிகள் அனைத்தையும் எடுத்தெறிந்து, பாடியாடிக் கூத்தாடுகிறார். **பொன்னு** குடிமயக்கத்தில் கண்டபடி சீறுகிறான். **சுந்தரி** மிரட்டுகிறாள்.]

பொன்னு

போகி றாயா? சாகி றாயா?

சுந்தரி

மானம் போனதே மந்தி...போபோ!

சிவம்

தந்தினத் தானனே தன தன
தந்திரக் கோனனே
மந்திரக் கோனனே இந்த
மந்தியைப் பாருமையா

சுந்தரி

பித்துப் பிடித்துப் பிதற்றும் குரங்கே!

பொன்னு

குடித்துக் களித்துக் குதிக்கும் குரங்கே!

சிவம்

தந்தினத் தானனே—தனதன
தந்திரக் கோனனே
மூலையி லேகிடந்த—சரங்கு
முச்சந்திக் கொம்பேறிச்
சேலைக் கடையினிலே—குதித்துச்
சேட்டை செய்ததம்மா
சேலை முதலாளி—அதைச்
சிக்கெனப் பற்றிக்கொண்டே
வாலை யறுத்தோட்டி—ஹ ஹ ஹ
வஞ்சந் தீர்த்துக்கொண்டான்
தத்தினத் தானனே

[பொன்னுவை பிடித்துக் குலுக்குகிறான்]

பொன்னு

இதென்ன தொல்லை...!

சுந்தரி

இரண்டு கொடுங்கள்!

சிவம்

கிக்கிக் கிக்கிறி...கெடுமதிக் குரங்கே!

சுந்தரி

தெரியுமா செய்தி... ...?

சிவம்

ஊரெலாந் தெரியும்.

பொன்னு

கட்டிப் போட்டுச் சுட்டுப் போடுவோம்!

[வாசற்கதவு தட்டுதல்]

அண்ணு

பொன்னு கதவைப் பொட்டெனத் திறதிற!

[சுந்தரி ஓடிப்போய்த் திறக்கிறாள்; வருதல் அண்ணுவுடன் சுந்தரி]

பொன்னு

அண்ணா வாவா!

அண்ணு

ஆஹா வந்தேன்;
யாரிதை உள்ளே யழைத்து வந்தது?
வரவரப் பைத்தியம் வலுத்துப் போனதே!

**சுந்தரி**

கரண்டித் தடியன் கதவைத் திறந்தான்
முதிய குரங்கை வெளியே முடுக்கு !

**அண்ணு**

பைத்தியக் கிழவரைப் பதமாய்க் கடத்துவேன்.

**சுந்தரி**

மதுரையி லிருந்தால் மானம் போகும்.
தெருத்தெரு வாகத் திரிந்து தொலைக்கிருன் ;
வம்பர் என்னையே வைகின் ருர்கள் !

**அண்ணு**

இந்தப் பைத்தியம் என்ன பைத்தியம்,
நமது பைத்தியம் நல்ல வைத்தியம் !

**சுந்தரி**

ஆளைப் பாரும் ஆந்தை போலே !

**சிவம்**

தந்தனத் தானனே - தனதன
மந்திரக் கோனரே
அன்னமென் றேநினைத்தேன்—என்வீட் டில்
ஆந்தை புகுந்ததையா
சொன்னமென நினைத்தேன்— எல்லாம்
சுட்ட கரித்திரளே
கன்னமென நினைத்தேன்—இது
கற்றாழை யாச்சுதையா
என்ன வுலக மென்றே—கோனரே
எச்சிலுமிழ்ந் திடுவோம் (தந்தன)

**சுந்தரி**

எதற்கெடுத் தாலும் இப்படிப் பாட்டு !

**அண்ணு**

(சிவனிடம்)

டார்வின் சொன்ன தருமப் படியே
மந்தியி னின்று மனிதன் வந்தான்.
தரும மெல்லாம் தலை கிழாகி
மனிதனிப்போ மந்தி யாகிருன்.
மாமா வாரும் மனிதக் குரங்குகள்
உள்ள வீட்டில் உதைவாங் காமல்,
உண்மைக் குரங்குக ளுடனே யிருப்போம்.
ஆடிப் பாடலாம் ஆனந்த மாக

**சிவம்**

மங்களம் மங்களம் மரகதக் கிளியே !
அழாதே கண்ணே அப்பச்சி தாரேன் ;
எங்கே குழந்தை ?

**சுந்தரி**

எமலோ கத்தில் !

**சிவம்**

ஐயோ மகளே ! ஹாஹா சிவனே !
எப்படிப் போனுள் ?

**சுந்தரி**

ஆற்றில் இறந்து !

**சிவம்**

ஆழியைக் குடித்த அகத்தியர் போலே
ஆற்றைக் குடிப்போம்...அவளைக் கொணர்வோம்

**அண்ணு**

தக்க யோசனை... தாவிச் செல்வோம் !

**சிவம்**

வருகிறேன் மங்களம் !

**சுந்தரி**

வராதே திரும்பி !

**அண்ணு**

இந்த வண்டியில் ஏற்றி விடுகிறேன்

[சிவனை அழைத்துச் செல்லல்]

**பொன்னு**

இந்த வீட்டில் இருக்க வேண்டாம்.
கேளாய் கண்ணே...... !

**சுந்தரி**

கேட்கிறேன் சொல், சொல்... !

**பொன்னு**

பாட்டும் பரதமும் பாவையர்க் கழகு ;
நாரிக் கழகு நடிகை யாதலே
சிந்தைக் கினிது சினிமாச் சுருளே.
பணக்குவை தருவது படத்தொழி லொன்றே
ஒன்று போட்டால் ஒன்பது லாபம்,
ஆடல் பாடல் அழகெலாந் தேர்ந்த
பக்கா நடிகர் பழக்குவர் உன்னை.
ஆகவேண் டியதை அண்ணு செய்வான்
பணத்தைப் பேசும் படத்திற் போட்டுக்
கலைவனம் என்றொரு ஸ்டுடியோ காண்போம்.
ஊர்வசி நானும் ஒருநட் சத்திரம்
இருக்கிருள் ; அவளால் எல்லாம் வெற்றியாம்
நானு நீயும் சேர்ந்து நடிப்போம்,
நீல மயிலென நீநடஞ் செய்யக்
கண்டால் என்மனங் களித்துப் பொங்குமே.
ஊரெலாம் உன் பெயர் ஓங்கி ஒலிக்கும்.
சுவரெலாம், இதழெலாம் உன்படம் சொக்கும்
தோன்றிற் புகழொடு தோன்றுக வென்ற
வள்ளுவர் சொன்னதை வாழ்ந்து காட்டுவோம்,

**சுந்தரி**

நல்லது; செய்வோம் ; நாட்டியங் கற்போம் ;
என்னையே பழிக்கும் இந்நகர் விட்டுச்
சென்னை சென்று செய்வன செய்வோம்

**பொன்னு**

நாளையே உனக்கு நாட்டியந் தொடங்கும்.
வெள்ளித் திரையில் வெற்றி பெறுவாய்.

**சுந்தரி**

(பொன்னுவிடம்)

வாரும் அந்த வாய்ப்பட் டியினை
வஞ்சந் தீர்த்து வருவோம் உடனே !

[இருவரும் கொல்லைப்புறம் செல்லல்]

வேதாந்த விசாரணை :

# நடராஜா

வத்தலக்குண்டு ஆர். ராஜமய்யர்

[வத்தலக்குண்டு காலஞ் சென்ற ஆர். ராஜமய்யர், தமிழ் நாட்டு மேதைகளுள் ஒருவர். தமது இருபதாவது வயதிலே அவர் எழுதிய '**கமலாம்பாள் சரித்திரம்**' என்ற அற்புத நாவல், இன்னும் ஈடு இணையற்று விளங்குகிறது. 'பிரபுத்த பாரதா' வின் ஆசிரியராயிருந்து, அவர் ஆங்கிலத்தில் எழுதிய பல அரிய வேதாந்தக் கட்டுரைகளில் ஒன்றான '**நடராஜா**' என்பதை இந்த மொழிபெயர்த்துத் தந்திருக்கிறேன். **—தி. ஜ. ர.**]

**ந**டராஜா என்றால், அரங்கத் தலைவன் என்று பொருள். உலகமே ஒரு நாடக மேடை; சர்வ வியாபியான ஆத்மா அல்லது கடவுள் ஆட்டி வைத்தபடி ஆடும் பொம்மலாட்டம். இந்தத் தர்சனத்தையே நடராஜ சொரூபம் குறிக்கிறது. "நீ ஆட்டி வைத்தால் யார்தான் ஆடமாட்டார்? நீ பாட வைத்தால் யார்தான் பாடமாட்டார்?" என்று கேட்கிறார் ஓர் வேதாந்தப் புலவர். உள்ளுறையும் ஆத்மா இல்லாவிட்டால், உலக முழுதுமே வெறும் ஜடமாகத்தான் இருக்கும்.

மனித மனத்தைச் சீர்திருத்தும் உண்மைக் குருநாதன் ஆத்மாவே. ஆதலால், குருநாதனைக் குறிக்கத்தான் நடராஜா. இருவகைக் குருநாதருண்டு; வெளிப்படையும் உண்மையும், கண்ணுக்குப் புலனாவதும் புலனாகாததுமான இருவகை. வெளிப்படையாய்க் கண்ணுக்குப் புலனாகும் குருநாதன், தமது சீடனுக்குப் போதனைகள் புரிந்து, ஞான மார்க்கத்தில் அழைத்துச் செல்வார்—இதுதான் குரு என்பதற்கு வழக்கமான பொருள். ஆனால், உண்மையான போதனை அகத்திருந்தே பிறக்கிறது. புறக் குரு, ஆத்மா அல்லது கடவுளின் கைக்கருவியே யாவார். அதுமாத்திர மல்ல; சகல வளர்ச்சியும் உள்ளிருந்தே உண்டாகிறது. உதாரணமாக, செடியின் வளர்ச்சி, உள்ளிருந்தே உறுகிறது; எருவும் நீரும் அந்த வளர்ச்சிக்கு உதவிதான் புரிகின்றன. இதே விதமாக, மனமும், குருநாதனின் போதனைகளை ஜீர்ணித்துக் கொண்டு, உள்ளிருந்தே வளர வேண்டும். எனவேதான், உண்மைக் குருநாதனின் சொரூபமாக நடராஜா உருவகிக்கப் பட்டிருக்கிறார். குருநாதனின் ஒரு தர்மம்—என், மிக முக்கியமான தர்மம்—தாம் எதை உபதேசிக்கிறாரோ அதுவாகத் தாமே யிருப்பதுதான்; தமது உபதேசத்தைத் தம் நடத்தையிலேயே உதாரணங் காட்டுவதுதான். நடராஜா சொரூபத்தின் உட்கருத்து இதுவே யாகும்.

**வ**லது கைகளுள் ஒன்றில் உள்ள சின்னஞ்சிறு உடுக்கு, சர்வ உலகத்துக்கும் மூலகாரணமான சப்தத்தைக் கடவுள் அல்லது குருநாதர் தம்கையிலே வைத்திருக்கிறார் என்பதைக் குறிக்கிறது. ('**சப்த நிஷ்டம் ஜகத்**'—நாதத்தின் மீதே உலகம் நிற்கிறது.) வேறு வார்த்தைகளில் சொன்னால், அகில வுலகங்களையும் தம் உள்ளங்கையிலே ஆண்டவன் வைத்துக் கொண்டிருக்கிறார்; அவர் இஷ்டப் பட்டால், அதை விரிக்கவும் சுருட்டவும் அவரால் முடியும் என்பதே கருத்து. ஞானிக்கு, அவன் இஷ்டப்பட்டால்தான் உலகம் உண்டு; இல்லையாயின் இல்லையே யாகும். ஒரு புறமுள்ள மான், மனத்தைக் குறிக்கிறது. மானைப் போலத்தானே மனமும், விஷயக் கூட்டங்களில் ஒன்றிலிருந்து ஒன்றில் காட்டுத்தனமாய்த் தாவிக் குதிக்கிறது? மானைப் போன்ற மனத்துக்கு எட்டாத வெகு தூரத்திலே ஆத்மா இருக்கிறது. ஆதலால் தான், நடராஜா சித்திரத்தின் கால்களுக் கருகே நிறுத்தப்பட் டிருக்கிறது இந்த மான்.

நடராஜா ஒரு புலித்தோலைப் போர்த்திருக்கிறார். புலித்தோல், அஹங்காரத்தைக் குறிப்பிடுவதாகும். அஹங்காரத்தைத் தாக்கினால், அது மிருகத்தனமாய், மூர்க்கமாய், குரூரமாய் எதிர்த்துப் போராடுகிறது. ஆனால், அதைக் கொன்றே தீரவேண்டும்; குருநாதனான நடராஜா ஒருவரால்தான் அதைக் கொல்ல முடியும்.

**ந**டராஜா தம் தலையிலே கங்கையை அதாவது **சித்-சக்தி** அல்லது **ஞானத்தை** வைத்துக்கொண்டிருக்கிறார். அது மிகக் குளுமையாய், ஆயாசந்தீர்ப்பதா யிருக்கிறது. கங்கையுடன் சந்திரனையும் அவர் தரித்திருக்கிறார். அது ஆத்மாவின் **சுயம்பிரகாசத்தையும் ஆனந்தத்தையும்** குறிப்பதாகும்.

முயலகன் என்ற அசுரன்மீது நடராஜாவின் ஒரு கால் அழுந்தி நசுக்குகிறது. அந்த அசுரன்தான் **மகா மாயை**. பிறப்பிறப்புக்களுக்குக் காரணமான முடிவற்ற மயக்கமே மாயை. நடராஜாவின் மற்றொரு கால், **ஊர்த்துவ முகமாய்த்** தூக்கியிருப்பது, **துரீய** நிலையைக் காட்டுகிறது. **விழிப்பு, கனவு, கனவற்ற தூக்கம்** ஆகிய மூன்று நிலைகளையும் கடந்துயர்ந்தது 'துரீய' நிலை. அந்நிலையில் மனமும் மாயையும் உலகமும் அற்றுவிடுகின்றன.

இரண்டாம் வலக்கை **சாந்தி**யைக் குறிக்கிறது — **ஞானத்தி**னால் கிடைக்கும் பாக்கியமான சாந்தி. இடது கைகளுள் ஒன்றில் அக்நி இருக்கிறது. தமது உபதேச உண்மைக்கு அத்தாட்சியாக **ஆத்ம ஜோதி**யையே குருநாதன் கொண்டு வருகிறார். குருவின் உபதேசத்தை **அநுபவத்**தால்தான் பூர்ணமாய் அறிந்துகொள்ள முடியும் என்பது கருத்து. நாட்டிய சாலை, **தில்லை வனம்**. சரீரம்—அண்டம், பிண்டம் இரண்டின் சரீரமுந்தான்—**வனம்** என்று சொல்லப்படுகிறது. ஏனெனில், அந்தச் சரீரத்தில் எண்ணற்ற பொருள்கள் அடங்கி யிருக்

கின்றன. நாட்டிய சாலையிலுள்ள நடன அரங்கம், ஸ்மசானமாகும். உலகக் காட்சியின் காரணமான சகல இச்சைகளும் நாம ரூபங் களும் அங்கே எரித்து விடப்படு கின்றன. புறப்பொருள் எதனி லும் நசையற்று மாயை யொழிந்த புனிதப் பிரஞ்ஞையே மிஞ்சுகிறது.

இவை, நடராஜா சொரூபத்தின் சில முக்கிய தத்துவங்கள். "மாயையை நசுக்கு. உலகம் நமக்கு அடிமைப்பட வேண்டும்; உலகத்துக்கு நாம் அடிமைப்பட லாகாது. மானைப்போன்ற மமதை யை விட்டொழி. இச்சைகளும் மயக்கமு மொழிந்த, தூய, பந்த மற்ற, உன்னதப் பிரஞ்ஞையை அடை. உனது பிறப்புரிமையான சாந்தியைப் பெறு. ஆத்ம சொரூப மான சச்சிதானந்தத்தை அனுபவி" என்றே குருநாதர் உபதேசிக்கிறார். இந்தப் புதை பொருள்களை நோக் கும்போது, நடராஜா விக்கிரகம் அர்த்த மற்றதோர் மர அல்லது பித்தளைப் பதுமை யல்ல என்று புலனாகும்; உள்ளத்தைத் தூண்டி உயர்த்துவிக்கத் தக்க, மகோன் னத உபதேசத்தை புரியும் சின் னமே அது என்று விளங்கும்.

---

### ஸோயா-பீன்ஸ்

ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சைன தேசத்தவர் ஸோயா-பீன்ஸை ஓர் ஆகாரமாய்க் கொண்டனர். தற்காலத் திலோ அது மனிதருக்கு மட்டுமல்ல; மிருகங்களுக்கும் ஆகாரமாகிறது; இன் னும் பல தொழில்களுக்கும் உபயோகப் படுகின்றது. வார்னிஷ், பேப்பர், மை, வர்ணம் முதலியன செய்ய உதவுகிறது.

'ஸோயா-பீன்ஸே ஏழைக்குச் சோறு டன் பாலாம்' என்று சைன தேசத்தவர் ஒரு பழமொழி கூறுவர். ஸோயா-பீன் ஸில் ஏராளமான சத்துப் பொருள்கள் உள்ளன. சைனப் பெண்கள் 400 வகை ஆகாரத்தை அதனுதவியால் செய் கிறார்கள்.

---

### பக்தனைப் பார்த்தால்

"வக்கீலைக் காணும்போது வழக்கு களும் நியாயஸ்தலங்களுமே ஞாபகத் துக்கு வரும். அதுபோல, பக்தனைக் காணும்போது, ஈசுவரனையும் மறுமை யையும் பற்றிய ஞாபகம் வரும்."

—பரமஹம்சர்.

நாட்டுப் பாட்டு :

# மதுராயி

## "பூ"

கொண்டையிலே பூமணக்க
குங்குமப் பொட்டுமின்ன
அண்டையிலே வந்ததுமே
ஆவேசம் கொள்ளுதடி (1)

ஆவேசம் கொள்ளுதடி
ஆத்திரமும் பொங்குதடி
பூவாசம் தூக்குதடி
புதுமோகம் தாக்குதடி (2)

வண்டிகு திரையுண்டு
வண்டிக்குத் திரையுமுண்டு
பெண்துணைக்கு நீயுமுண்டு
பெட்டிப டுக்கையுண்டு (3)

காணமும் கட்டியாச்சு
கட்டுக்கட்டாய்ப் புல்லுமாச்சு
நாணுமல் வண்டியிலே
நாசூக்காய் ஏறிடடி (4)

மதுரைக்குப் போயிடுவோம்
மறுநாளே வந்திடுவோம்
மதுராயி கொண்டையிலே
மருக்கொழுந்தும் ஏறிடுமாம் (5)

கட்டம்போட்ட சேலைஒண்ணு
கட்டாயம் வாங்கித்தாரேன்
கட்டிச்சாய வேட்டிஇந்தக்
கட்டைக்குப் போதுமடி (6)

ரவிக்கைக்குத் துணியெடுத்து
ராணிபோலப் போட்டுக்கடி
சவுக்கமரச் சோலையிலே
சல்லாப மாயிருப்போம் (7)

ரதியடி நீயெனக்கு
மதனடி நானுனக்கு
விதிமு டியுமட்டும்
விட்டுப்பி ரியவேண்டாம். (8)



# பறித்த பூக்கள்

## தமிழரின் 'கோஹினூர்'

'மாடர்ன் ரிவ்யூ' பத்திரிகையில் பாபு நளின மோஹன் ஸன்யால், 'திருக்குற'ளின் பெருமையைச் சிலாகித்தும், அதை இதுகாறும் தெரிந்து கொள்ளாத வங்காளிகளின் அறியாமைக்கு வருந்தியும் அடியில் வருமாறு குறிப்பிட்டிருக்கிறார் என்று 'இந்தியத் தொழிலாளி' கூறுகிறது :

இந் நூலைப் பற்றிய ஆராய்ச்சியை ஆரம்பிக்குமுன், குறள் என்பது என்ன என்பதை நான் வாசகர்களுக்கு விளக்க வேண்டும். வட இந்திய மக்களாகிய நமக்கு இந்நூல் இதுகாறும் முத்திரை வைத்து மூடப்பட்ட புத்தகமாகவே யிருந்து வந்திருக்கிறது. ஆரம்ப காலத் தமிழ் இலக்கியத்தின் கோஹினூராக விளங்கும் இந்நூலை, மூன்றரை வருஷங்களுக்குமுன் நான் வங்காளியில் மொழிபெயர்த்த பிறகுதான், இத்தமிழ் ஞானக் களஞ்சியம் ஒன்றிருப்பதை, (ஒரு சில பண்டிதர்களைத் தவிர) வங்காளக் கல்விமான்கள் அறிய முடிந்தது. பிரெஞ்சு, ஜெர்மானிய, இத்தாலிய, ஆங்கிலப் பண்டிதர்கள் இந்தக் கோல் கொண்டா ரத்தினத்தின் ஒளியைக் கண்டு, சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன்பே, அவரவர் சக்திக்குத் தக்கபடி இந்தப் பொக்கிஷத்திலிருந்து எடுத்துத் தங்களது பொக்கிஷங்களை நிரப்பிக் கொண்டனர். ஆனால் இந்தியாவின் இப்பாகத்தி லிருக்கும் நாம், இப்படியொரு செழிப்பான சுரங்கம் இருப்பது தெரியாமலே இத்தனை காலமாகத் தூங்கிக்கொண் டிருக்கிறோம். இது வடக்கத்தியாராகிய நமக்கு மதிப்புத் தருவதாகாது. இந்தியா போன்ற ஒரு பெரிய தேசத்தில் ஒரு வகுப்பினர் மட்டும் பல நூற்றாண்டுகளாக இந்தச் சிறந்த பொக்கிஷத்தை வேறு யாருடைய தொந்தரவுக்கும் இடைப்படாமல் வைத்துக் கொண்டிருக்கும்படி விட்டு வைத்தது பரிதபிக்கத்தக்க விஷயமாகும்.

## கதாசிரியர் தந்திரம்

சம்பள உயர்வு கிடைப்பதற்காக, லண்டன் கதாசிரியர் ஒருவர் செய்ததோர் தந்திரத்தைக் 'குமரன்' எழுதியிருக்கிறது :

லண்டன் நகர்வாசி யொருவர் பதினைந்து வருஷ காலமாக, ஒரு லண்டன் தினசரிக்கு, திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த தொடர் கதைகளை யெழுதி வந்தார். அவர் தமது சம்பளத்தை அதிகரிக்க வேண்டுமென்று கேட்ட பொழுது, நிர்வாகிகள் மறுத்தனர். உடனே கதாசிரியர் தமது கதையில் நூதனமாக ஒரு சம்பவத்தைச் சேர்த்தார்.

கதாநாயகன் சங்கிலிகளாற் பிணைக்கப்பட்ட நிலையில் ஒரு சிறு குளத்தின் நடுவில் அகப்பட்டுக் கொண்டான்; தண்ணீரோ மெல்ல மெல்ல ஏறி, கழுத்தளவுக்கு வந்து விட்டது. அவனுக்கு நேராக அவனது எதிரி நிற்கிறான். ஒரு யந்திர பீரங்கி கதாநாயகனுடைய மார்புக்கு நேரே சுடுவதற்குத் தயாராக நிற்கின்றது—இதுதான் அந்தச் சம்பவம். இந்த அத்தியாயம் வெளியானதும், கதாசிரியர் தமது உத்தியோகத்தை ராஜீனாமாச் செய்துவிட்டார். பத்திராதிபர்கள் கலக்கமுற்று, என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தார்கள். தர்ம சங்கடமான நிலைமையில் அகப்பட்டு உயிரிழக்குந் தருவாயிலிருக்கும் கதாநாயகனை விடுவிக்கத்தக்க கதாசிரியனைத் தேடினார்கள். அகப்படவில்லை. முடிவில் வேறு வழியின்றிக் கதாசிரியருக்கு அவர் கேட்ட சம்பளத்தைக் கொடுக்க இசைந்தார்கள். ஆசிரியரும் "தெய்வ எத்தனத்தால் நமது கதாநாயகன் ஆச்சர்யமாய்த் தப்பினான்......" என்று ஒரே வாக்கியத்தில் அந்தக் கட்டத்தைப் பூர்த்தி செய்துவிட்டு, மேலே தமது கதையைத் தொடர்ந்தாராம்!

## பொறுத்துப் பார்

யுத்தத்தைப் பற்றிப் பேசாதவர் கிடையாது; தர்க்கம் செய்யாதவர் கிடையாது. திரிகால ஞானி போல் ஜோஸ்யம் சொல்லுவோருமுண்டு; பழுத்த ராஜதந்திரி போலும், பட்டமிட்ட ராணுவ தந்திரி போலும் கட்சி பேசுவோரும் எங்கு மிருக்கிறார்கள். இந்த வினோதத்தை, மோல்மேன்சூனிலுள்ள கோவிந்தன் என்ற ஒரு தையற்காரர் 'கல்வி'யில் வர்ணிக்கிறார் :

யுத்தம் வந்தது; எங்கே பார்த்தாலும் மனித வர்க்கத்துக்கே பித்தம் தலைக்கேறிவிட்டது. எவரைப் பார்த்தாலும் "என்ன சமாச்சாரம்? யுத்தச் செய்தி எப்படி யிருக்கிறது?" என்ற கேள்வியோ டல்லாமல், "என் சார், இந்த யுத்தம் எங்கே போய் நிற்கும்?" என்ற பேச்சே பெரும் பேச்சாக விருக்கிறது. "பொருளாதாரத்தில்தான் போய் நிற்கும்" என்கிறார் ஒருவர். "சிநேகத்தினால்தான் முடியும்" என்கிறார் மற்றொருவர். "ராவணன் ஆண்டா லென்ன? ராமனாண்டா லென்ன?" என்று அலட்சியம் செய்கிறார் ஒரு பிரகஸ்பதி. "அடேயப்பா! ஒரு குண்டுபோட்டால் ஆயிரக்கணக்கான மக்கள் சேதப்படுகிறார்களாமே!" என்று வியக்கிறார் ஒரு அனுதாபி. "இந்தச் சண்டாளச் சண்டை வேண்டாமென்றுதானே காந்தி சொல்லுகிறார்" என்கிறார்கள் ஒரு கோஷ்டியார். "இப்படிப் பேசுகிறவர்களெல்லாம் கோழைகள்" என்று சொல்லுகிறவர் இன்னொர் பக்கம். இவ்வாறெல்லாம் உலகம் பிதற்றுகிறது. முடிவென்ன? பொறுத்துப் பார்த்தால்தான் தெரியும்.

## விருந்து விளம்பரம்

பணக்கார விருந்தாளி வந்துவிட்டால், சில பெண்களுக்குப் பரமானந்தம். அதை அவர்கள் விளம்பரம் செய்யும் அழகை 'லோகோபகாரி'யில் ஸ்ரீ கே. ஆர். ஜயலக்ஷ்மி சித்தரிக்கிறார் :

ஒருநாட் காலை எதிர்வீட்டு வாசலில் கல்யாணம்போல் தடபுடலாய் இருந்

தது. வாசலில் இரட்டைமாடு கறவை; வீட்டு யஜமான் வீட்டுக்கும் கடைத்தெரு வக்குமாய் ஓயாமல் நடமாடுகிறார்; டாக்ஸி மோட்டார்க்கார் ஒன்று வந்திருக்கிறது — இவை யெல்லாம் பணக்கார விருந்தினரின் விஜயத்தைத் தெரிவித்தன. சுமார் ஒரு வாரத்திற் கப்புறம் விருந்தாளிகள் புறப்பட்டுப் போய்விட்டனர்.

அன்று மத்தியானம் அம்மாமி என்னைத் தேடிக்கொண்டு வந்தாள்.

"உங்கள் ஆத்தில் மெழுகின முறம் இருக்குமா?" என்று விசாரித்தாள்.

"ஏன்? இருக்கிறது."

"கொஞ்சம் கொடு, அம்மா! புது முறம் வாங்கிப் போட்டு ஒரு வாரம் ஆச்சு; மெழுக ஒழியவில்லை."

"எப்படி முடியும், வீட்டில் விருந்தாளி வந்திருக்கும்போது?" என்று அம்மாமிக்கு ஒத்துப் பாடினேன். அம்மாமிக்குப் பரம திருப்தி.

"அதிலும் விருந்தாளி யென்றால் சாமானியமானவர்களா! நமது வீட்டைத் தேடி வரக் கூடியவர்களா!" என்று உத்ஸாகத்துடன் ஆரம்பித்தாள் அம்மாமி.

"யார் அவர்கள்? ரொம்பப் பெரிய மனிதர்கள் போல்தான் எனக்கும் தோன்றியது."

"அவர்கள்தான் ராவ் ஸாஹேப் வெங்கடசுப்பய்யரும் அவர் குடும்பமும். நீ அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லையோ?"

"உம்."

"அவர்களுக்குத் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் ஏகபோக கிராமம்" என்று தொடர்ந்தாள் அம்மாமி: "ஒரு பிள்ளையை ஐ. ஸி. எஸ். ஸுக்குப் படிக்க அனுப்பப் போகிறார்கள். ஒரு மாப்பிள்ளை ஏதோ பெரிய வேலையில் இருக்கிறான். அவரது அகமுடையாள் இருக்கிறாளே, மஹா பத்விசு. கை நிறைய வைர வளையல்கள்; அப்படி இருந்தும் காப்பிப் பாத்திரத்தைத் தானே அலம்புகிறாள்!"

"அவர்கள் உங்களுக்குச் சிநேகமா, உறவா?"

"சிநேகமாவது? — உறவுதான்; கிட்டின உறவு. என் அகத்துக்காரருடைய அம்மாஞ்சி வெங்கடசுப்பய்யருக்கு ஸாக்ஷாத் அத்தான்" என்று அம்மாமி சுருக்கமாயும் நெருக்கமாயும் உறவைப் பொருத்திக் காட்டினாள்.

அம்மாமிக்கு இத்துடன் நேரமாகி விட்டது. கோரி வந்த காரியமும் முடிந்து விட்டதுபோ லிருந்தது.

"நான் வருகிறேன்; அவர் ஆபீஸிலிருந்து வரும் சமயமாகி விட்டது" என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டு விட்டாள்.

மெழுகின முறத்தை அம்மாமி மறந்து விட்டாள்; நானும் ஞாபகப்படுத்தவில்லை. ஏனெனில், முதல் நாள்தான் அம்மாமி ஒரு மெழுகின முறத்தில் வாசலில் குப்பை கொண்டுவந்து கொட்டினதை நான் பார்த்திருக்கிறேனே!

## காளியை எதிர்த்த ஞானி

பித்தனைப் போல் வாழ்ந்த ஓர் ஞானி அன்னை காளியை எதிர்த்த கதையை 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்'தில் ஸ்ரீ சித்பவானந்த சுவாமிகள் எழுதியிருக்கிறார்:

கொஞ்ச காலத்துக்கு முன்பு கேரளத்தில் நாராயணப் பிராந்தன் என்று அழைக்கப்பட்ட ஒருவன் வாழ்ந்தான்.

உடலில் ஒரு கோவணத்தைத் தவிர அவனுக்கு உடையொன்றும் கிடையாது. விசும்பே கூரை, பசும்புல்லே பித்தன் படுத்துறங்கும் மஞ்சம். மக்களைச் சதா பயமுறுத்திக்கொண் டிருக்கின்ற உண்டி, உடை, இருப்பிடம் ஆகிய வற்றைப் பற்றிய பிராந்திகள் நாராயணனை அணுகவில்லை.

ஒரு நாள் மாலைவேளையில் நாராயணப் பிராந்தன் ஓர் ஊருக்கு அருகாமையில் உலாவிக்கொண் டிருந்தான். இயற்கையெங்கும் அமைதி குடிகொண்டிருந்தது. அதைவிடப் பன்மடங்கு அதிகமான அமைதி உன்மத்தனது உள்ளத்தில் ஒளிர்ந்தது. இருளும் படலம் படலமாக விரைவில் வந்து சூழ்ந்துகொண் டிருந்தது. இனி ஓரிடத்தில் நெருப்பைக் கிளப்பி உட்கார வேண்டுமென்று அவன் குனிந்தபோது, கண்ணெதிரே தீ வெளிச்சம் ஒன்று தென்பட்டது. தான் அமர்ந்த இடம் சுடுகாடு என்று அப்பொழுது அவனுக்கு விளங்கிற்று.

சிலம்பொலி கேட்கிறது. சூரியோதயம் போன்று ஒளிப் பிழம்பு உருவெடுக்கிறது. பயங்கரமே வடிவெடுத்துள்ள சம்ஹார சொரூபிணி பிரசன்னமாகிறாள். ..."எமக்குரிய இடத்தைவிட்டு அகன்றோடு. அல்லாவிடின் அண்டங்கள் அடிபடும் அடியின்கீழ் நீமட்டும் மிஞ்சுவது எங்ஙனம்?" என்று ஆக்ஞாபிக்கின்றாள் அவள்.

அவனும் பித்தம் தலைக்கேறியவன் போன்று பகர்வானாயினன்: "இப்பரந்த உலகில் உனக்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை எனக்குமுண்டு. உட்கார்ந்த இடத்தைவிட்டு ஒருவர்க்கு அஞ்சி நான் அகலுதல் கிடையாது. அதோ அங்கே சென்று நீ விரும்பியவாறு ஆடு."

இத்தகைய வீர மொழியைக் காளிகா தேவி, முன்பு எங்கும் கேட்டது கிடையாது. தன் தாண்டவங்களில் மிகக் கொடியதும் பயங்கரமானதுமான சம்ஹார தாண்டவத்தைத் துவக்குகிறாள்.

உயிர்களை வாட்டுகிற சம்ஹார தாண்டவம் அவனுக்குச் சப்பையாகத் தோன்றுகிறது. "இவ்வளவுதானா இவளுடைய ஆர்ப்பாட்டம்!" என்று எண்ணுகிறான். "உம், உன்னுடைய பொம்மலாட்டம் முழுவதையும் காட்டு. வேண்டுமானால் இந்த உடலத்தையும் எடுத்துக் கொள்" என்று தன் தேகத்தையும் அவளுக்குப் படைக்க முன் வருகிறான்.

பயங்கரி தேவிக்கு வெட்கம் வந்து விடுகிறது. அவளுடைய கொடூரச் செயல் பிராந்தனிடம் பலிக்கவில்லை. "மகனே, உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்கிறாள் அவள்.

பிராந்தன்: நான் யாரிடத்திலும் எதையும் கெஞ்சிக் கேட்பதில்லை.

தேவி: என் தரிசனம் கிடைக்கப் பெற்றவர்க்கு ஏதாவது வரம் கொடுக்க நான் கடமைப்பட் டிருக்கிறேன்; ஆதலால் என் பொருட்டு நீ ஏதாவது ஒன்றைக் கேட்பாயாக.

பிராந்தன் சற்றுச் சிந்தித்துப் பார்த்து விட்டு "அப்படியானால் எனது இடது காலில் இருக்கும் இந்த வீக்கத்தை வலது காலுக்கு மாற்று" என்றான்.

தேவி: பிராரப்த கருமத்தை மாற்றியமைக்கும் சுதந்திரம் எனக்கில்லை.

பிராந்தன்: அப்படியாயின், உன்னிடமிருந்து பெறும் வரமும் எனக்கொன்று மில்லை.

மாயாதேவி வேறு ஒன்றும் செய்ய முடியாதவளாய் மறைகிறாள்.

வாழ்க்கை விநோதம்:

# எனது முதல் 'கேஸ்'

## (ஒரு வக்கீலின் பிரசுரிக்கப்படாத சுய சரிதத்திலிருந்து)

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

பத்து வருஷங்கள்! தொலையாமல் நீண்டு, ஆசைப்பட்டு ஆசைப்பட்டு வியர்த்தமான பத்து வருஷங்கள் கழிந்தன! சட்டக் கல்லூரியில் படித்து உயர்தரமாய்த் தேறி, சென்னை ஹைக்கோர்ட்டில் அட்வொகேட்டாய்ப் பதிவுசெய்து கொண்டு தொழில்நடத்தத் தொடங்கிப் பத்து வருஷங்களாகி விட்டன. இந்த நிம்மதியற்ற காலத்தில், ஒவ்வொரு நாட் காலையிலும் சரியாய்ப் பதினோரு மணிக்கு, கவுனை மாட்டி டர்பனை யணிந்து, ஹைக்கோர்ட் கட்டிடத்தின் இருண்ட 'கர்ப்பக்கிரக'ப் பிராகாரங்களில், ரத்தம்செத்த என் சோனி உடம்பைத் தாங்கிக்கொண்டு நான், உலாத்துவதைக் காணலாம். நேருவைப் போலவும் நார்ட்டனைப் போலவும் உற்சாகமாகத் தான் நான் நடைபோடுவேன். மாலை ஐந்து மணி வரையில் இந்த அவஸ்தையே. ஸர் டி. முத்துசாமி அய்யரின் சலவைக் கல் சிலையைக் கடக்கும் ஒவ்வொரு சமயமும், ஓர் புதிய நம்பிக்கையோடும் அந்தச் சிலையின் உதடுகளினின்று பிறந்ததோர் புதிய ஆசியுடனும், எனதுள்ளம் துள்ளிக் குதிக்கும். ஏனெனில், அந்த மகானின் ஜீவியம், வாலிபருக்கு உன்னதமானதோர் படிப்பினையைப் போதிக்கிற தன்றோ—மெல்லமெல்லச் சலியாது போராடிப் பெருமையும் புகழும் அடையுங்கள் என்ற படிப்பினையை? ஆனல், பூ! இது ஓர் மூடத்தனமான, வேதாந்தமான மன ஆறுதல்! அந்த ஆசியருளின் இன்ப கீதம் ஓசை யிழந்துவிட்டது!

எனது அதிர்ஷ்டத்தை விவில், கிரிமினல் சகல கோர்ட்டுகளிலும் பரிட்சை பார்த்துவிட்டேன். என் தொழிலில் என்னைவிட நல்லதிர்ஷ்டம் வாய்ந்த சகோதரர் ஒருவர் அர்மீனியன் தெருவில் இருக்கிருர். அவரோடு, சட்டப் பாயிண்டுகளைப் பற்றி அதி உக்ரமும் ஆவேசமுமான ஆர்குமெண்டுகளெல்லாம் நடத்திப் பார்த்துவிட்டேன். சுருக்கெழுத்துக் குமாஸ்தாக்களையெல்லாம் (எனக்கு யாருங் கிடையாது), எனது வாக்குவாத வன்மையால், வாயைப் பிளந்து திணறி விழிக்கும்படி செய்துவிட்டேன். ஆயினும், இது வரையில், ஒரு 'பீஸை' எனது வேட்கை கொண்ட கண்கள் காணவில்லை; என் ஜேபி ஸ்பர்சிக்கவில்லை. அடடா! இந்தப் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை. 'பீஸ்' வராத வக்கீலால் என்ன பயன்? அவன் ஓர் அநாமதேயம், வெறும் நிழல் தானே? உண்மையிலே, நான் ஓர் வெறும் நிழலாகிக் கொண்டுதான் வருகிறேன். ஒரு நாள் நான் டிராமில் சென்றுகொண்டிருந்தபொழுது, எனக்குப் பின்னுலிருந்த இரண்டு வாலிபர்கள், உடற்கூறு நுட்பத்தையும் உயிரோடு திரியும் எலும்புக் கூட்டையும் ரசாயன ஆராய்ச்சிச் சாலையையும் பற்றிப் பேசிக்கொண்டு போனுர்கள். வைத்தியக் கல்லூரியருகே டிராம் மெதுப்பட்டது. அந்த இரண்டு பசங்களும் என்னைப் பார்த்து நகைத்துக்கொண்டே குதித்தோடினுர்கள்!

எனது சட்டப் பணியை ஏன் ஜனங்கள் அசட்டை செய்கிருர்கள்? எனது திறமையையும் சிக்கலான சட்டப் பாயிண்டுகளைச் சிடுக்கறுக்கும் எனது மதிநுட்பத்தையும் பற்றி என் உள்ளத்தினுள்ளே, எனக்குள்ளே, அடிக்கடி சிந்தித்து மகிழ்வேன். சட்டப் புத்தகங்களைப் படிப்பதிலும் நான் ஒன்றும் குறை வைக்கவில்லை. சட்ட சம்பந்தமாக நான் படித்து, உருப்போட்டு, ஜீர்ணம் செய்யாத ஒரே ஒரு புத்தகமோ பத்திரிகையோ கிடையாது. சம்ஸ்கிருதத்திலோ, எனக்கு அடங்கா வேட்கையுண்டு. காளிதாஸனிலிருந்தும் பவபூதியிலிருந்தும் சுலோகம் சுலோகமாகக் 'கணீர்' என்று வர்ஷித்து, அவற்றில் புதைந்து கிடைக்கும் அழகுகளையெல்லாம், மல்லிநாதனும் தோற்கத் தக்க புலமையோடு, வியாக்கியானம் செய்வேன். ஆங்கில இலக்கியத்தில் நாடகங்களை நான் விசேஷ ஆராய்ச்சி செய்திருக்கிறேன். 'ஷேக்ஸ்பியர் முதல் ஷா வரையில்' என்று ஒரு கட்டுரை எழுதி, உள்ளூர் இலக்கியப் பத்திரிகைக்குக் கூட அனுப்பினேன். அதன் ஆசிரியர், அதை வருத்தத்தோடு (எவ்வளவு நல்ல மனுஷன்!) திருப்பி யனுப்பிவிட்டார். ஆனல், அப்படித் திருப்பி யனுப்புகையில் எழுதியிருந்த நறுக்கில், "இங்கிலாந்தின் இருதயம் போன்ற சீமையிலிருந்து வெளியாகும் ஏதாவதோர் உன்னத இலக்கியப் பத்திரிகையில் கோயில் கொண்டருளத்தக்க கட்டுரை இது" என்று புகழ்ந்திருந்தார். என்ன இனிப்பான பாராட்டு! ஆனல், என் புத்திசூட்சுமத்தின் பல்வேறு திறன்களைப் புரிந்துகொள்ள இந்த உலகத்துக்கு ஆற்றலில்லைபோல் தோன்றுகிறது.

அட மூடர்களே, முட்டாள்களே, அசடர்களே, மக்குச் சாம்பிராணிகளே! நீங்களெல்லாம் எப்படிச் செழிக்கிறீர்கள்! நடுத்தெருவிலுள்ள ஸ்ரீ தண்டபாணி அய்யர் இருக்கிருரே, அவர் எவ்வளவு மட்ட ரகமான ஆசாமி என்று நான் அறிவேன். "கோர்ட்டார்" என்றும் "அவர்களே" என்றும் அவர் இரண்டு வார்த்தைகள் திக்கித் திக்கிச் சொல்லுவதற்குள் இரண்டுமணி நேரம் ஆகிவிடும்! ஆயினும், ஜட்ஜிகளின் கடாட்சம் அவருக்கிருக்கிறது. அது ஏதோ மந்திர ஜாலமாய்த்தானிருக்க வேண்டும். அவர் கம்பீரமான மாரிஸ் ஸெடான்காரிலேதான் சவாரி செய்கிருர். அவருடைய விலை மதிப்புள்ள மேஜை, கேஸ் கட்டுக்களைத் தாங்காமல் நொந்துகொண்டிருக்கிறது.

அன்றொரு நாள், என் முதுகிலே மிகச் செல்லமாய் ஏதோ ஒரு கை சொப்பை தட்டிக் கொடுத்தது. என்னவோ 'கேஸ்' தான் வந்துவிட்டது என்ற பரமானந்தத்தோடு நான் திரும்பினேன். யாரைக் கண்டேன் என்று நினைக்கிறீர்கள்? அந்தச் சனியன் தண்டபாணி அய்யரைத்தான். அவர் என்னைப் பார்த்துப் பல்லை யிளித்துக் கொண்டு நின்றுர். "சௌக்கியமா?" என்று கேட்டு, "எனது கட்சிக்காரர்கள்—எத்தனைபேர், எழவு! பெரிய நியூஸன்ஸா யிருக்கிறது—அவர்கள் கத்தை கத்தையாய்க் கேஸ் கட்டுகளை வைத்துக்கொண்டு காத்துக் கிடக்கிருர்கள்" என்று ஜம்பமாய்ச் சொல்லிவிட்டு, நடந்தார். அட ஈசுவரா! என்னிடம் என்ன இருக்கிறது! ஒரு 'கேஸ்' உண்டா? கிடையவே கிடையாது. கேஸுக்கும் பீஸுக்கும் பதிலாய், என் உயிரை வாட்டும் கிலேசந்தான் என்னிடமுண்டு.

கேஸ் வரும் வரும் என்று நம்பி நம்பிக் காத்தேன். கேஸ் வரவில்லை; நோய்தான் வந்தது. மாசம் மாசமாய்க் கழிந்தது. வெற்றி கிடைக்கவில்லை; ஆசைப்பட்ட சங்கதி நடக்கவேயில்லை; கட்சிக்காரன் வரவேயில்லை—'பீஸ்' கிடைக்கவேயில்லை. எனது பீஸற்ற வாழ்க்கையை, என் ஏழை மனைவி பொறுமையோடு பொறுத்துக்கொண்டாள். அவளது தங்கக் காப்புகளும் இதர சிறு நகைகளும் அடகு போயின. பால்காரனும் தயிர்க்காரனும் பல சரக்குக் கடைக்காரனும், தங்கள் பணத்தைக் கொடுக்காவிட்டால், என்னென்னவோ சொல்லுகிருர்

கள்; அதெல்லாம் ஒன்றும் ரசப்படவில்லை.

ஒரு ஞாயிற்றுக்கிழமை யன்று மாலை மூன்று மணி யிருக்கும். எனது கிலேசங்களைப் பற்றி யெல்லாம் சிந்தித்துக்கொண்டு என் அறையில் உட்கார்ந்திருந்தேன். சிந்தனை ரொம்பக் கடுமையான கட்டத்தை யெட்டியபோது, வெளிக்கதவை யாரோ தட்டியதால், குலைந்தது. வேலைக்காரி கதவை இப்படித் தட்ட மாட்டாள்; தபால்காரனுமல்ல. அவ்விருவரும் தட்டும்போது, அந்தச் சத்தத்தின் கெத்துக்கள் தனித்தனுசா யிருக்கும். அது எனக்குத் தெரியும். இந்தத் தட்டலின் சத்தம் புதிதா யிருந்தது; என் காது குளிரவு மிருந்தது. என் உள்ளம், மெல்ல ஆடிய ஊஞ்சல் போல அசைந்து களித்தது. அதிர்ஷ்ட தேவதை, யாரோ ஒரு கட்சிக்காரனை என் வாசற்படிக்கு இழுத்து வந்திருக்கிறதா? களிப்பும் கவலையும் கலந்தவனாய் எனக்குள் நானே இப்படி யெல்லாம் யோசித்துக் கொண்டு, நிலைப்படியருகே ஓடிக் கதவை இழுத்துத் திறந்தேன். என் இருதயம் அடைந்த ஆனந்தத்திலே, அதன் துடிப்பைக் கூட மறந்துவிடும் போல் இருந்தது. அது ஓர் கட்சிக்காரர்தான். ஆமாம், அவர் கையிலுள்ள நீண்ட கணக்குப் புஸ்தகமே சொல்லுகிறதே!

வக்கீல் மோஸ்தரிலே ஓர் இங்கிதப் புன்னகையோடு அவரை உள்ளே அழைத்துச் சென்று, ஒரு நாற்காலியில் அமர்த்தினேன். அங்கிருந்ததற்குள்ளேயே அதுதான் நல்ல நாற்காலி. அதன் ஒரு கால்கூட முறியவில்லை, பிரம்புப் பின்னலும் சிதையவில்லை.

"நடுத்தெருத் தண்டபாணி அய்யர், என்னை உங்களிடம் அனுப்பினர்" என்று அவர் ஆரம்பித்தார்.

"ஓஹோ!" என்று கூவிய நான், அந்த மனிதரின் விசேஷக் கருணையைப் பற்றி அதிசயித்தவனாய், "நீங்கள் யார்?" என்று விசாரித்தேன்.

"நான் மந்தைவெளியி லுள்ள காசி விலாஸ் ஓட்டலின் முதலாளி" என்றார் அவர்.

வஞ்சக மில்லாமல் பருத்திருந்த அவர் உடம்பு, அவரது தொழிலை—அதன் செழிப்பை—ஊர்ஜிதம் செய்தது. ஏதேனும் அப்பீல் சம்பந்தமாக—ஒரு வேளை பலத்த வருமானவரி அப்பீலா யிருக்கலாம்—என்னைக் கலந்தாலோசிக்க வந்திருப்பார் என்றெண்ணி, "உங்களுக்கு என்னால் ஆகவேண்டிய காரியம் என்னவோ?" என்று கேட்டேன்.

இதைக் கேட்டதும் அவரது உதடுகள் மடிந்தன; அவரது நீண்ட மூக்கின் நுனியிலே வியர்வை அரும்பியது. தமது நீளமான புஸ்தகத்தை மேஜை மீது வைத்துக்கொண்டே, அவர் சொல்லலானார்:—"அதுவா, அதுவா?—என்னை ஒரு பயல் ஐம்பது ரூபாய் வரையில் மோசம் செய்துவிட்டான். அந்தப் பணத்துக்கு அவன்—அந்த நாய்—தின்று குடித்து விட்டு, வெட்கமின்றிப் பணத்துக்கு மழுப்புகிறான். எவ்வளவோ மரியாதையாய்க் கேட்டுப் பார்த்து விட்டேன். அவன் மோசக்காரன், திருட்டுப் பயல், கொல்லுக் கொலைக்கு அஞ்சாத கிராதகன். வெள்ளைக்காரனின் தர்ம நியாயமான சட்டம் ஒன்று இருக்கிறது என்று அவனுக்குப் பாடம் புகட்ட வேண்டும்."

இதே வேகத்தோடு, இடையிடையே சுயசரிதத் துணுக்குகளுடன், அவர் பேசிக்கொண்டே யிருந்திருப்பார். ஆனால் நான் இடை மறித்துக் கேட்டேன்:

"அவனுக்கு என்னை ஒரு லாயர் நோட்டீஸ் கொடுக்கச் சொல்லுகிறீர்களா?" என்ற நான், இதோ ஒரு கேஸில் 'பீஸ்' பணம் கிடைக்கப் போகிறது என்று சந்தோஷித்து, அவரது பிள்ளையார் தொந்திக்கு அருகே இடுப்பில் பணப் பைபோல் மடிந்திருந்த துணியைக் கடைக்கண்ணால் நோக்கினேன்.

"ஆமாம்" என்று மகா உறுதியுடன் அவர் பதிலளித்தார்: "ஆமாம், இதோ இருக்கிறது கணக்குப் புஸ்தகம்." பிறகு ஸ்வாரஸ்யமாக, "சும்மாச் சும்மாத் தின்று விட்டு, பணத்துக்கு நாமம் போட்டு விடுகிறான்களே! காலிப் பயல்! காசி விலாஸ் ஓட்டல் முதலாளியிடம் வாலாட்டினால் என்ன நடக்கும் என்று அவனுக்குப் புத்தி புகட்டுகிறேன்" என்று உறுமினார்.

"நாளைத் திங்கட்கிழமை, கோர்ட்டில் உள்ள என் சேம்பரிலிருந்து (ஸீனியர் வக்கீலின் கம்பீரத்தோடு 'சேம்பர்' என்பதை நன்றாய் அழுத்திச் சொன்னேன்) அந்த நோட்டீஸை அனுப்பி விடுகிறேன். அந்தப் பயல் வெட்கத்தால் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகும்படி அதை எழுதுகிறேன், பாருங்கள். ஊஹூம்!"

மந்தைவெளி காசி விலாஸ் ஓட்டல் முதலாளி புன்முறுவல் பூத்தார். நான் எதிர்பார்த்த மங்களமான சுபவேளை வந்துவிட்டது என்று எண்ணினேன். அவர் தோளில் கிடந்த ஜரிகை உத்தரீய மடிப்புகளுக்குக் கீழே இதுவரை எனக்காகத் தமது கையில் அவர் மறைத்து வைத்திருந்த ஒரு காகிதப் பொட்டணம் வெளியே வந்தது. அதை அவர் பூத்தாற்போல் மேஜைமீது வைத்து, ரொம்ப அன்போடும் நன்றியோடும் புன்னகை புரிந்து, "நாளை மாலை உங்களை வந்து பார்க்கிறேன்" என்றார். இவ்விதம் உரைத்து, அறையைவிட்டு அவசரம் அவசரமாய் வெளியேறினார்; இல்லை, பந்துபோல் உருண்டோடினார்.

அவர் தலை மறையும்வரை காத்திருந்து, பிறகு வாசற்கதவைச் சாத்தி உட்புறம் தாளிட்டுவிட்டு, மிகுந்த ஆவலுடன் அந்தக் காகிதப் பொட்டணத்தில் என் கையைவிட்டுத் துழாவினேன். என்ன ஆச்சர்யம்! அதில் இருந்த வஸ்துக்கள் என்ன தெரியுமா? இதோ பாருங்கள்:

| | | |
|---|---|---|
| ஐட்டம் 1. | ஜிலேபி | 4 |
| ஐட்டம் 2. | குலோப்ஜான் | 4 |
| ஐட்டம் 3. | மைசூர்போண்டா | 8 |
| ஐட்டம் 4. | வெங்காய வடை | 8 |

அட தேவுடா! வானபீடத்திலிருந்து பூலோக விவகாரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஈசுவரா! எனக்குப் 'பீஸ்' வந்து விட்டது-வடையும் போண்டாவும் ஜிலேபியும் குலோப்ஜானுமாக!

## தெய்வத் தாய்

"குழந்தைகள், தனித்து மரப்பாவைகளை வைத்துக்கொண்டு மனம்போனபடி யெல்லாம் விளையாடும்போது, தாயை நினைப்பதில்லை. ஆனால் அவ்விடத்திற்குத் தாய் வந்துவிட்டால் குழந்தைகள் மரப்பாவைகளை அப்பால் போட்டுவிட்டு 'அம்மா! அம்மா!' என்று கூவிக்கொண்டே அவளிடம் ஓடும். அக்குழந்தைகளைப் போலத்தான் நீங்களும் இவ்வுலகத்தில் செல்வம், கௌரவம், கீர்த்தி முதலிய மரப்பாவைகளில் கருத்தூன்றியவர்களாய் வேறொன்றையும் கவனிக்காமல் விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் ஒரு தரம் உங்களுள்ளே இருக்கும் திவ்ய மாதாவை நீங்கள் காண்பீர்களானால், செல்வம், கௌரவம், புகழ் முதலியவற்றில் அப்பால் உங்களுக்கு ஒருபோதும் இச்சை உண்டாகாது. அவற்றை யெல்லாம் தூர எறிந்து விட்டு, நீங்கள் அவளை நாடி ஓடுவீர்கள்."

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

நகைச்சுவை :

# ஆளுக்குப் பாதி

அழ. வள்ளியப்பன்

"ஞாயிற்றுக்கிழமை உனக்கு நான் டெலிபோன் பண்றேன். பிறகு நாம் இருவரும் ஸினிமாவுக்குப் போகலாம்" என்று கூறினேன்.

"சரி, நானும் அதை எதிர்பார்க்கிறேன். போய் வரட்டுமா?" எனக் கூறி விடைபெற்றுக்கொண்டு சென்றாள் என் காதலி.

அவள் போனபிறகு எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருந்தது. கையிலே பணமிருந்தால், அவளோடு ரிக்ஷாவிலே பீச்சுக்குப் போயிருப்பேன். ஆனால் என்ன செய்வது! பணமோ பத்து ரூபாய்தானிருக்கிறது. அதுவும் வீட்டுக்காரனுக்கு வாடகைக்கு அழவேண்டும். இப்படியெல்லாம் யோசித்துவிட்டு, "சரி, மனம் நிம்மதியாயிருக்க வெளியேயாவது கொஞ்சதூரம் போய் வரலாம் எனப் புறப்பட்டேன் வீட்டைவிட்டு. சென்றுகொண்டே யிருந்தேன். காப்பி கிளப் அருகே வந்தேன். அவ்வளவுதான். காதலி ஞாபகமெல்லாம் காற்றாய்ப் பறந்துவிட்டது. பலகாரம் சாப்பிட வேண்டுமென்ற ஆசையே மேலிட்டது.

காலை 8-30 மணிக்குச் சாப்பிட்டுவிட்டு ஆபீஸுக்குப் போனதுதான். இதுவரை ஒரு இட்டலிகூடச் சாப்பிட வில்லை. வயிற்றுப்பசி அகோரமா யிருந்தது. "வாடகைப் பணத்தில் கிளப்புக்காரனுக்குக் கொடுத்துவிட்டால், நாளை வந்துவிடுவானே வீட்டுக்காரன் எமன்போல. அவனுக்குப் பணம் கட்டித் தொலையவேண்டுமே" என்ற எண்ணத்தாலேயே பகலெல்லாம் உண்ணுவிரத மிருந்தேன். ஆனால் வயிறு கேட்கிறதா? கலகம் செய்ய ஆரம்பித்துவிட்டது. "சரி" என்று காப்பிக் கிளப்புக்குள் நுழைந்தேன். ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன்.

பரிமாறுபவர் வந்து, "என்ன, சார், வேண்டும்?" என்றார்.

"ஒன்றும் வேண்டாம். ஒரு இட்டலி மட்டும் கொண்டு வாரும்" என்றேன்.

இட்டலி கொண்டுவரச் சிறிதுநேரமாயிற்று. எனது கண்கள் மேலும் கீழும் பிரயாணம் செய்துகொண்டிருந்தன; அப்பொழுது தற்செயலாகக் கீழே காலடியிலுள்ள தரையையும் நோக்கின. ஆ! அங்கே ஒரு நோட்டு கிடந்தது. அது ஐந்துரூபாய் நோட்டோ, அல்லது பத்து ரூபாய் நோட்டோ. அதை அறிவதில் நான் காலத்தைச் செலவழிக்க விரும்பவில்லை. எனது காலைத் தூக்கினேன். அந்த நோட்டின் மேல் வைத்தேன். அவ்வளவுதான்; ஒன்றும் அறியாதவன்போல உட்கார்ந்து கொண்டேன்.

எனக்கு முன்னால் ஒருவர் எதிர் நாற்காலியிலே உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவர் கண்டுவிடுவாரோ என எண்ணி நோட்டை எடுக்காம லிருந்தேன். "இவர் இங்கேயே சாசுவதமாகவா இருக்கப்போகிறார்? எப்படியிருந்தாலும் வெளியே போய் விடுவா ரல்லவா?" என எண்ணிக்கொண்டே யிருந்தேன். நான் கிளப்புக்குள் நுழைவதற்கு முன்னரே அவர் அங்கே இருந்தார். "இவன் என்ன பெரிய அசடனாய் இருப்பான் போலிருக்கிறதே. எனக்கு முன்னமே இங்கே இருந்துகொண் டிருக்கிறான். ஆனாலும் இந்த நோட்டை இதுவரை எடுக்காதிருந்திருக்கிறானே!" என்று அவனை இழிவாக நினைத்துக்கொண் டிருந்தேன்.

இதற்குள் இட்டலியும் வந்துவிட்டது. இட்டலியைப் பார்த்தவுடன் எனக்குச் சிரிப்பு வந்தது. "என்னடா, என்றைக்கும் இந்த இழவு இட்டலிதானா? பணம் இருந்தாலும் ஒன்று; பணம் இல்லாவிட்டாலும் ஒன்றா? இன்றைக்குத்தான் பணம் இருக்கிறதே. நன்றாய் வயிறு நிறையத்தான் சாப்பிடுவோமே. ஆத்மத் துரோகம் பண்ணவே கூடாது" என்று எண்ணிக்கொண்டு, ஸ்வீட்டே பிடிக்காது என்று நண்பர்களிடம் சொல்லிக்கொள்ளும் நான் வயிறு கொள்ளும்வரை ஸ்வீட் சாப்பிடுவது எனத் தீர்மானித்தேன்.

ஆனால் கிளப்பில் பரிமாறுபவரோ என்னை வந்து ஒன்றுமே கேட்கவில்லை. ஏனென்றால் முன்பு அவரிடம் நான் "ஒரு இட்டலிமட்டும் கொண்டு வாருங்கள்" என்று கூறியதிலிருந்து "இவர் எங்கே இதைத் தவிர வேறு பணங்கொடுத்து வாங்கப் போகிறார்" என அவர் நினைத்து விட்டார் போலும்!

நான் அவரை ஒருமுறை பார்த்து "சார், ஒரு பாசந்தி, ஒரு லட்டு, ஒரு ப்ரூட்சாலட் இவை யெல்லாம் கொண்டு வாரும்" என ஆடம்பரமாய்க் கட்டளையிட்டேன். அப்பொழுது எனக்கு இருந்த ஆனந்தத்தில் கால்மேல் கால் போட்டுக்கொண்டு கட்டளை யிட்டிருப்பேன். ஆனால், அங்ஙனம் செய்யாததற்குக் காரணம் எனது வலது காலின் அடியில் நோட்டிருந்ததே யாகும்.

ஸ்வீட் கொண்டுவரப் பட்டது. வயிறு புடைக்கச் சாப்பிட்டேன். ஆனாலும் அதுவரை எனக்கு முன்னிருந்தவர் எழுந்திருக்கவே யில்லை. "இவர் ஒரு பெரிய சாப்பாட்டு ராமனா யிருக்கிறார். அதோடு ஒரு பெரிய சோம்பேறி. தின்றுவிட்டு விரைவாய்ப் போவாரா? சொந்த வீடுபோல நினைத்துக் கொண்டிருக்கிறாரே? இப்படித் தின்றுகொண்டே யிருந்தால் எழுந்து நடக்கமுடியுமோ?" என்று பலவாறாக எண்ணலானேன். அவர் போகிற வழியாய்த் தெரியவில்லை.

நான் எனது துரதிர்ஷ்டத்தை நினைத்து வருந்திக் கொண்டே யிருந்தேன். காலுக்கு எட்டியது கைக்கு எட்டாமல் போய் விடுமோ என்றுகூடச் சந்தேகப்பட்டேன். இருந்தாலும் நானும் விடவில்லை. "வரட்டும். எவ்வளவு நேரமானாலும் விடுவதில்லை" என்று கங்கணம் கட்டிக்கொண்டேன். "ஒரு அரைக்கப் காப்பி கொடும்" என்றேன். காப்பி வந்தது. ஆறின காப்பியா யிருந்தாலும் சுடுவதுபோலப் பாவனை செய்துகொண்டே ஆற்றினேன். ஆற்றி ஆற்றிக் கை வலிக்க ஆரம்பித்துவிட்டது. ஆனாலும் அவர் எழுந்து செல்லவில்லை.

ஏதாவது அவர் செல்வதற்கான உபாயத்தைச் செய்யலாமென யோசித்தேன். சிறிதுநேரம் சென்று நான், "ஆஹா! நீந்துவதற்கு இதுதான் மிக மிக நல்ல நாள். என்ன ஜோரான நாள்! ஏன், நண்பரே! தங்களுக்கு நீந்தத் தெரியுமோ?" என்று அவரை வினவினேன்.

அவர் :—ஆஹா! ரொம்ப நன்றாய் நீந்துவேனே. எங்கள் ஊர் திருச்சினாப்பள்ளி. அங்கே ஒரு நீச்சுப் போட்டி நடந்தது. அதிலே நான்தான் முதற் பரிசு வாங்கினேன்.

நான் :—அப்படி என்றால் [illegible] நல்ல நாள் இல்லையா?

அவர் :—நல்ல நாள்தான். [illegible] தான் சிறிது நேரத்துக்கு முன்[illegible] திரத்திலே நீந்திவிட்டு வந்தேன்[illegible]

இவ்வாறு கூறிவிட்டுக் கடியாரத்தைப் பார்த்தார்.

நான் :—நீங்கள் யாரையாவது எதிர் பார்க்கிறீர்களா, என்ன ?

அவர் :—எனது நண்பர் ஒருவர் சரியாய் இங்கே 6 மணிக்கு வருவதாய் அறிவித்திருந்தார். மணி $6\frac{1}{4}$ ஆகியும் அவர் இன்னும் வரவில்லையே.

நான் :—இப்பொழுது மணி $6\frac{1}{4}$ தானா இருக்கும்? இந்தக் கடியாரத்தை நம்பவே கூடாது. இது எப்பொழுதும் இப்படித்தான் ஸ்லோவாகவே போகிறது; சந்தேகமில்லை. இப்பொழுது மணி $6\frac{3}{4}$ இருக்கும். இனிமேல் எங்கே வரப் போகிறார்? சண்டையை உத்தேசித்து ஊரெல்லாம் விளக்குகளை அணைத்துவிட்டார்கள். ஒருவர் மூஞ்சி ஒருவருக்குத் தெரியவில்லை. இந்த இருட்டிலா வருவார். சந்தேகமே வேண்டாம்; வரவே மாட்டார்.

அவர் :—இல்லை, இல்லை. எவ்வளவு நேரமானாலும் இங்கே அவர் வராமற் போகவே மாட்டார். அவர் சொன்ன சொல்லைக் கட்டாயம் காப்பாற்றுவார்.

இவ்வாறு அவர் வாய்மூடாமல் பதில் சொல்லிக்கொண்டேயிருந்தார். நோட்டு மேலே காலை அசைக்காது அரைமணி நேரத்திற்கு மேலாக வைத்திருந்ததால், எனக்கு விரலெல்லாம் வலிக்க ஆரம்பித்துவிட்டது. தொடை, நரம்பு எல்லாமே தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தன. 'பொறுத்தார் பூமி யாள்வார்' என்ற பழமொழியை நான் நன்குணர்ந்தவனாதலால், காலைப் பூமியைவிட்டு எடுக்காமல் கெட்டியாய் நோட்டின்மேலே வைத்துக் கொண்டிருந்தேன்.

எதிரிலுள்ள மனிதர் எழுந்துபோவதாய்த் தெரியவில்லை. அவரும் என்னைப்போலவே நன்கு பணத்தைச் செலவழிப்பவர் போலத் தோன்றினார். ஏராளமான பலகாரத்தை வாங்கி உள்ளே திணித்துக்கொண்டேயிருந்தார். ஏதாவது யுக்தி செய்து பணத்தை எடுக்கலாமென எண்ணினேன். மெதுவாக டவலைக் கீழே போட்டேன்.

நான் குனிந்து எடுக்கப் போகுமுன் அந்த மனிதரும் கீழே குனிந்து "என்ன? எதையாவது காணோமா?" என்று கேட்டார்.

நான் "ஒன்றுமில்லை. டவல் கீழே விழுந்துவிட்டது. அதைத்தான் எடுக்கக் குனிந்தேன். வேறொன்றுமில்லை" என்

வெளியே அவ்வாறு நயமாக அவருடன் பேசினாலும் உள்ளூர அவரை வெட்டிவிடலாமா என்று தோன்றியது. "கால் வேறு தொந்தரவு படுத்துகிறது. இவன் வேறே எழுந்து தொலையாது கழுத்தை அறுக்கிறானே!" என்று மனதுக்குள் திட்டிக்கொண்டேயிருந்தேன். திட்டி என்ன பிரயோசனம்? இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு கொஞ்சநேரமிருந்தோம்.

அவர் கீழ குனிந்து பார்ப்பார்; தும்முவதுபோலப் பாவனை செய்வார்; டவலால் மூக்கைத் துடைப்பதுபோல் கீழே குனிவார். இவ்வாறு அங்க சேஷ்டைகளெல்லாம் செய்து கொண்டேயிருந்தார்.

சில நிமிஷங்கள் சென்றன. எனது காலை அவர் மிகக் கூர்மையாகச் சந்தேகத்துடன் கவனிக்க ஆரம்பித்துவிட்டார். நான் சமாளித்துக்கொள்ள நினைத்து, "என்ன எனது பூட்ஸையே பார்க்கிறீர்கள்? அது என்ன அழுக்காயிருக்கிறதா அல்லது புது மாடலா? இதைவிட நல்ல மாடல் பூட்ஸெல்லாம் கடையில் இருக்கிறதே?" என்றேன்.

அவர் இதுதான் சமயம் என்று பூட்ஸைப் பார்ப்பதுபோலவே எனது காலுக்குக்கீழே கூர்மையாகக் கவனிக்க ஆரம்பித்துவிட்டார்.

சரி, இனிப் பேச்சை நிறுத்திக் கொள்வதே மேலென எண்ணி நிறுத்திவிட்டேன்.

பிறகு மெதுவாக அவர், "பூட்ஸ் ஒன்றுமில்லை. இங்கே தரையிலே கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி ஒரு பத்து ரூபாய் நோட்டு இருந்ததே...... அதைத்தான் பார்த்தேன். வேறொன்றுமில்லை" என்றார்.

எனக்கு முகம் மூன்றும் 'பேஸ்' வைத்தவன் மூஞ்சிபோல் ஆகிவிட்டது. கீழே குனிந்து விரைவாய் நோட்டை எடுத்தேன்.

நான் :—இதுதானா அந்த நோட்டு?

அவர் :—ஆமாம்.

நான் :—உம்முடையதா இது?

அவர் :—இல்லை.

நான் :—அப்படியானால் என்ன யோசிக்கிறீர்?

அவர் :—ஒன்றுமில்லை. அந்த நோட்டை நான்தான் முதலில் கண்டது.

நான் :—பிறகு, ஏன் முதலில் நீர் அதை எடுக்கவில்லை? அல்லது என் போலக் காலைவைத்து என் மூடிக் கொள்ளவில்லை?

அவர் :—நீர் எழுந்துபோன பிறகு எடுத்துக் கொள்ளலாமென நினைத்தேன். ஆனால் நீர் எழுந்து போவதாய்த் தெரியவில்லை. அதுதான் என் தாமசத்துக்குக் காரணம்.

நான் :—ஆமாம். பணத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது? அந்தப் பணத்திற்கு என்ன வாங்கலாம் என யோசித்து, வேண்டியதெல்லாம் வயிறு நிறையச் சாப்பிட்டேன்.

அவர் :—ஐயோ! நானும் அந்தப் பணத்தை நம்பியல்லவா ஏராளமாய்த் தின்றுவிட்டேன்! இப்பொழுது என்ன செய்வது?

நான் :—உம். ஒன்றும் சத்தம் போடாதேயும். இருவரும் நோட்டைப் பங்கு போட்டுக் கொள்ளுவோம். ஆளுக்கு ஐந்து ரூபாய் எடுத்துக்கொள்ளலாம்.

அவரும் சரியென ஒப்புக்கொண்டார். இருவரும் ஒன்றாய் எழுந்து இரண்டு பில்களுக்கும் பணத்தைக் கொடுத்துவிட்டு மீதியைப் பங்கு போட்டுக்கொண்டோம். பிறகு நான் எனது அதிர்ஷ்டத்தை எண்ணிச் சந்தோஷப் பட்டுக்கொண்டு (பத்து ரூபாய் நோட்டுக் கிடைத்தால் அடையும் சந்தோஷத்தில் பாதிதான் இது) வீட்டை நோக்கிச் சென்றேன். வீட்டுக்குச் சென்று, கோட்டின் மேற்பையில் கையை விட்டு, என் பங்குப் பணத்தை எடுத்து மேஜைமேல் வைத்துவிட்டு, கீழ்ப் பையில் கையை விட்டேன். ஐயோ! பையில் போட்டுக் கொண்டு போயிருந்த 10 ரூபாய் நோட்டைக் காணோம். அதற்குப் பதிலாக ஒரே ஒரு பெரிய ஓட்டைதானிருந்தது!

---

## ஏன் விவாகம் இல்லை ?

மேரி கோரெல்லி என்ற பிரபல நாவல் ஆசிரியையை "நீ ஏன் கல்யாணம் செய்து கொள்ளவில்லை?" என்று நண்பர்கள் கேட்பார்கள்.

அவள் அதற்கு இவ்வாறு பதில் சொல்லுவாள் :—"தேவையில்லாததால் தான் செய்து கொள்ளவில்லை. என்னிடம் மூன்று பிராணிகள் இருக்கின்றன. அவை மூன்றுமாய்ச் சேர்த்து, ஒரு கணவனின் கடமைகளைச் செய்து விடுகின்றன. என்னிடமுள்ள நாய் அதிகாலையில் 'வௌ் வௌ்' என்று குரைக்கிறது; கிளி மத்தியானம் பூராவும் திட்டிக் கொட்டுகிறது; பூனை இரவில் வெகுநேரம் கழித்து வீட்டுக்கு வருகிறது. ஒரு கணவன் செய்யுங் காரியங்களும் இவைதானே?"

---

# புத்தக உலகம்

## தனவணிகர் தன்மை

ஆசிரியர்: ஆர். எம். எஸ். எம். கதிரேசனர். பிரசுரித்தோர்: செட்டி நாடு நூற்பதிப்புக் கழகம், தேவ கோட்டை. விலை அணு 12.

ஸ்ரீ கதிரேசர் அவர்கள் கொழும்பு நகர் வானெலி வழியாக வழங்கிய விரிவுரைகளைத் தனவணிகர் தன்மை என்னும் சிறந்த நூலாகத் திரட்டித் தந்திருக்கிறார். ஸ்ரீ கதிரேசனர், தனவணிகர் தன்மையை வெகு அழகாக, தகுந்த ஆதாரங்களுடன், தெள்ளிய நடையில் வர்ணித்திருக்கிறார். ஆசிரியரின் உயரிய கருத்துக்களும், முற்போக்கு எண்ணங்களும் தமிழ் நாட்டிற்கு ஏற்றவை என்பதில் சந்தேகமில்லை. ஒரு குறிப்பிட்ட சமூகத்தைப் பற்றி ஆராய்ந்த நூலில், அந்த நாட்டிற்கே நன்மை பயக்கும் வண்ணம் விசால நோக்கத்தைச் செலுத்தியதற்காக ஸ்ரீ கதிரேசனரைப் பாராட்டுகிறோம்.

இந்நூலைப் படிக்கையில் தனவணிகரைப் பற்றி அறிஞர்கள் எவ்விதக் கருத்துக்கொண் டிருக்கிறார்கள் என்பதை அறிகிறோம்.

சுவாமி சுத்தானந்த பாரதியார் எழுதுகிறார்: "தனவணிகர் தமிழன்னையின் செல்வத் திருக்கரங்கள். இன்று நமது அருமைத் தாய்மொழியாகிய தமிழும், சைவமும் உயிர்த்திருப்பதே தனவணிகரின் அறச் செழிப்பினுல்தான். தனவணிகர் நமது பாரத நாட்டின் பழங்குடிமக்கள்."

ஸ்ரீ டி. கே. ஸி. அவர்கள் சொல்வதையும் கேளுங்கள்: "பல நூற்றாண்டுகளாக இரண்டு சிறந்த குணங்கள் தனவணிகர்களிடம் வளர்ந்திருக்கின்றன. ஒன்று—எளிமையான வாழ்க்கை; இரண்டு—நாணயமாய் நடந்துகொள்வது."

இப் புத்தகத்திற்குத் தமிழ் நாட்டின் சிறந்த கவிகள் பாமலர்கள் சூட்டியிருக்கிறார்கள்.

—'ரதி'

## முருகன் மதுர கீர்த்தனை

ஆசிரியர்: வித்வான் டி. ஆர். விசுவனதசாஸ்திரி. கிடைக்குமிடம்: ஸங்கீத ஸதனம், 135, தம்பு செட்டித் தெரு, சென்னை. விலை ரூ. 2-4-0.

தமிழ் நாட்டில் தற்போதுள்ள ஸங்கீத ஸாஹித்ய வித்வான்களை விரல் விட்டு எண்ணி விடலாம். ஸாஹித்யம் செய்தல் அப்படி அருமையான சக்திகளில் ஒன்ருகிவிட்டது. இந்தச் சமயத்தில் வித்வான் டி. ஆர். விசுவனத சாஸ்திரியார் தமிழ் நாட்டின் தனிப்பெருங் கடவுள் முருகன்மீது பல கீர்த்தனைகளை இயற்றி வெளியிட்டுள்ளார்.

இந் நூலுக்கு மகாமகோபாத்யாய சுவாமினதய்யர், டி. எம். கிருஷ்ணசாமி அய்யர், முசிரி சுப்ரமணிய அய்யர், பிரபொஸர் சாம்பமூர்த்தி முதலியோர் முன்னுரை அளித்திருப்பதே போதிய சிறப்பாகும்.

பல அபூர்வ ராகங்களிலும் சகஜமான ராகங்களிலும் பல தாளங்களிலும், இந்தக் கீர்த்தனைகள் கவனம் செய்யப்பட்டிருக்கின்றன.

சில கீர்த்தனைகளில் ஸ்வராட்சரப் பிரயோகங்கள் சில இடங்களில் இருப்பது குறிப்பிடத் தக்கது. பாஷா ஞானமும் சங்கீத ஞானமும் ஒருங்கே பொருந்தியவர்களால்தான் இந்த ஸ்வராட்சரப் பிரயோகம் செய்து கவனம் செய்யமுடியும். ஸாகித்யங்கள் பெரும்பாலும் முருகன்மீது பிரார்த்தனை ரூபமாகவும் பக்திரஸ பாவத்தோடும்தான் இருக்கின்றன. நாயக நாயகி பாவத்திலும் சில கீர்த்தனைகள் இருக்கின்றன.

ஒவ்வொரு கீர்த்தனையும் திவ்யமாக ஸ்வரங்கள் சகிதம் அச்சிடப்பட் டிருப்பதால், ஸங்கீதம் கற்பவர்களுக்கும் வாத்தியங்களில் பயிற்சி செய்துகொள்பவர்களுக்கும் மிக்க உபயோகமா யிருக்கும்.

—'ஹம்ஸம்'

## முக்கூடற் பள்ளு

பதிப்பாசிரியர்: மு. அருணசலம். கிடைக்குமிடம்: புதுமைப் பதிப்பகம், 3, சாம்பசிவம் தெரு, தியாகராய நகர். விலை அணு 10.

ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பு, தமிழ் வாரப் பத்திரிகை ஒன்றில்,

"ஆற்று வெள்ளம் நாளை வரத்
தோற்றுதே குறி – மலை
யாள மின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னுதே"

என்ற இந்தப் பள்ளுப் பாட்டின் அடிகளைப் பார்த்தேன். இதைப் படித்ததும், "அடடா, என்ன இனிமை! என்ன எளிமை! எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது! இந்தப் பூராப் பாடல்களையும் பார்த்தால் எத்தனை சந்தோஷமாயிருக்கும்" என்று எண்ணி வருத்தப்பட்டேன். அந்த வருத்தத்தை, முக்கூடற் பள்ளு என்ற நூலை ஸ்ரீ அருணசலம் புத்தகமாகக் கொண்டுவந்ததின் மூலம் போக்கிவிட்டார்.

பதிப்பாசிரியர் ஸ்ரீ அருணசலம் தமது முன்னுரையில், பள்ளுப் பிரபந்தத்தைப் பற்றி மிகமிக அருமையாக ஆராய்ந்திருக்கிறார். இவருடைய ஆராய்ச்சியே ஒரு 'சிறந்த நூல்' என்பதில் சந்தேகமில்லை.

"முக்கூடற் பள்ளு இதுவரை அச்சாக வில்லை. இதிலுள்ள பாடல்களை அங்கங்கே சிலர் சொல்லியுங் கேட்டும் வந்தபோதிலும் நூல் அச்சாகாம லிருந்தது ஒரு பெருங்குறையே. பல ஏட்டுப் பிரதிகளையுங் காகிதப் பிரதிகளையும் கொண்டு பரிசோதித்து இந்நூல் இப்போது வெளியிடப்படுகிறது"—இவ்விதம் பதிப்பாசிரியர் கூறுகிறார்.

பள்ளுகளிலெல்லாம் முதன்மையான முக்கூடற் பள்ளில், இதன் ஆசிரியர், ஆற்றுவரவையும், பள்ளன், பள்ளியர், பண்ணைக்காரன் முதலியோரையும் வர்ணிப்பதோடு, கதைப் போக்கைச் சுவைபட எளிமையாகச் சொல்லிக்கொண்டு போவதையும் காண்கிறோம்.

புத்தகத்தில் உள்ள பாடல்களை யெல்லாம் அழகாகப் பதம் பிரித்து நல்ல முறையில் அச்சிட் டிருக்கிறார்கள். கவிதாரஸனை யுள்ளவர்கள் எல்லோரும் அவசியம் இந்தப் புஸ்தகத்தை வாங்கிப் படிக்கவேண்டும்.

—'ரதி'

## ஸ்ரீ அரவிந்த யோக விளக்கம்

மொழி பெயர்ப்பாசிரியர்: சுத்தானந்த பாரதியார். பிரசுரித்தோர்: பாரத சக்தி நிலயம், புதுச்சேரி. விலை அணு 5.

யோக சிகரத்தின் முடிமணியாக விளங்கும் ஸ்ரீ அரவிந்த யோகிகள் அளப்பரிய அனுபவங்களை நூல்கள் வாயிலாக அவ்வப்போது வெளியிட்டுள்ளார். அவற்றுள் ஒன்றின் மொழி பெயர்ப்பே ஸ்ரீ அரவிந்த யோக விளக்கம் ஆகும்.

யோகம் எதற்கு, யோக சாதனம், யோக முறை, யோக லீலை முதலி

தலைப்புக்களின் கீழ் சிக்கலான பல கருத்துக்களை அனுபவ வாயிலாய் எடுத்து விளக்கி, 'மனிதனை மீண்டும் மீண்டும் உயர்த்தி, இன்னும் புனித உன்னத மனிதனாக்கி, இன்னும் மேன்மேலும், மண்ணுலகில் விண்ணுலகை விளக்கும்' ஒப்பற்ற பெரு நோக்கத்தை முற்றுப் பெறுவிக்க எழுந்தது இந்நூல்.

இதனை மொழி பெயர்த்தவர் பன்மொழி வன்மையும், பல துறைச் சுவையும், சொல்லரிய யோகமுங் கைவந்த சுத்தானந்த பாரதியார் அவர்கள். பிற மொழிகளிலுள்ள மணியன்ன கருத்துக்களைத் தமிழ் மொழியில் மொழிபெயர்த்துப் பிற மொழிக்குப் பெருமையையும் தமிழ் மொழிக்கு வளமையையும் அளிக்கின்ற பெருந் தொண்டில் ஈடுபட்ட பெரியார்களுள் தலைசிறந்தவர் பாரதியார் என்பது இந்நூலால் இனிது விளங்கும்.

தமிழ் மக்கட்கு நற்பயனை யளிக்கும் இத்தகைய நூலை வெளியிட்டு, இனியும் ஸ்ரீ அரவிந்தர் அருளிய அரிய நூல்களின் தமிழ் மொழி பெயர்ப்புகளையும், அவர்தங் கொள்கைகளை விளக்கும் புதுயுக நூல்களையுமே வெளியிட விரதம் பூண்டுள்ள பாரத சக்தி நிலயத்தாரை நாம் போற்றுகிறோம்.

—கா. சிவ. க.

## திருக்குறள் நாட் குறிப்பு

வெளியிட்டோர்: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 6, பவழக்காரத் தெரு, சென்னை. விலை பென்ஸிலுடன் அணா $6\frac{1}{2}$; சாதா அணா $5\frac{1}{2}$.

ஒவ்வொரு நாள் தலைப்பிலும் ஒவ்வொரு குறட்பாவும் அதன் பொழிப்புரையும் பொறிக்கப் பெற்றிருக்கும் இந்த டைரி, வழக்கம்போலவே நேர்த்தியா யிருக்கிறது. இதர டைரிகளைப் போலவே பஞ்சாங்கமும் மிக முக்கியமும் உபயோகமுமான பிற தகவல்களும் இதில் அடங்கி யிருக்கின்றன.

## புன்னகை விகடன்

இப் பெயருள்ள மாத மிருமுறைப் பத்திரிகையின் முதல் இரு இதழ்கள் வரப் பெற்றோம். கதைகள், கட்டுரைகள், ராஜீயக் குறிப்புகள் யாவும் பெற்றுத் திகழ்கின்றது. இதன் ஆசிரியர் ஸ்ரீ கே. நாராயணசாமி. பிரசுரிப்போர் ஸ்ரீ ஜி.கே. சுப்பிரமணியன், 124, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, ஜி. டி., சென்னை. தனிப்பிரதி விலை ஒரு அணா; வருஷச் சந்தா ரூ. 1-12-0.

---

பாலர் பாட்டு:

# ஊக்கமுள்ள காகம்

(தே. வி.)



தண்ணீர் கிடையாமல் - காகமொன்று
தவித்தலைகையிலே
மண்ணாற் செய்தவொரு - ஜாடியினை
வழியிற் கண்டதம்மா. 1

ஜாடியின் மீதிருந்து - தலையைச்
சரித்து நோக்கிடவே
ஜாடியிலே தூரில் - சற்றே
தண்ணீர் தெரிந்ததம்மா. 2

காக முடனெழுந்து - சிறுசிறு
கற்கள் பொறுக்கிவந்து
ஊக்மாய் ஜாடியினுள் - அவற்றை
ஒவ்வொன்றாய் இட்டதம்மா. 3

இட்டிடவே நீரும் - மேலே
எழுந்து வந்ததம்மா
சட்டமாகக் குடித்துக் - காகம்
தளர்ச்சி தீர்ந்ததம்மா. 4

ஊக்க முடையவர்க்குத் - துன்பம்
உலகில் இல்லையம்மா
ஆக்கம் பெருகுமம்மா - இதை நீ
அறிய வேண்டுமம்மா. 5

---

பாலர் கதை:

# கந்தல் தாவணி

(மாமி)

முன்னொரு காலத்தில் ஒரு வண்ணாத்தி யிருந்தாள். அவள் ரொம்ப ஏழை. அவளுக்கு ஒரு மகள் உண்டு. அந்த மகளுக்கு ஒரு தாவணி வாங்கக்கூட, வண்ணாத்தியிடம் காசு இல்லை. வண்ணாத்தி தன் வீட்டில் உள்ள கந்தல் துணிகளை யெல்லாம் எடுத்தாள். அவற்றை யெல்லாம் சேர்த்து, ஒரு தாவணியாய்த் தைத்தாள். அதை மகளுக்கு உடுத்தி விடப் போனாள். இச்சமயம் அவளிடம் ஒரு கிழவி வந்தாள்.

"நமஸ்காரம், அம்மணி. தாங்கள் யார்? தங்களுக்கு என்ன வேண்டும்? ஏதாவது துணி போடுகிறீர்களா?" என்று வண்ணாத்தி கேட்டாள்.

"இல்லை; எனக்கு அந்தக் கந்தல் தாவணி வேண்டும்" என்று கிழவி சொன்னாள்.



"இதை நான் விற்க மாட்டேன். என் மகள் முத்தம்மாளுக்கு வேறே நல்ல தாவணி வாங்க என்னிடம் காசில்லை" என்று வண்ணாத்தி மறுத்தாள்.

மகள் முத்தம்மாளைக் கிழவி திரும்பிப் பார்த்தாள்: "குழந்தையே! இந்தத் தாவணி உன்னுடையதாமே. இதை எனக்குக் கொடு. இதற்குப் பதில், உனக்கு என்ன தாவணி வேண்டும்? கேள். நான் தருகிறேன்" என்றாள்.

கிழவி ஒரு தேவதை. மாறு வேஷம் பூண்டு வந்திருந்தாள். இது முத்தம்மாளுக்குத் தெரியவில்லை. கிழவி தமாஷ் பண்ணுகிறாள் என்று அவள் நினைத்தாள். தானும் தமாஷ் பண்ணினாள்.

"நட்சத்திர காந்தித் தாவணி தா" என்று கேட்டாள் முத்தம்மாள்.

"நட்சத்திர காந்தி, குளிர் தாங்காதே" என்றாள் கிழவி.

"சூரிய காந்தித் தாவணி கொடு" என்றாள் முத்தம்மாள்.

"சூரிய காந்தி, எரித்து விடுமே" என்றாள் கிழவி.

"பனிபோன்ற சந்திர காந்தித் தாவணி அளி" என்றாள் முத்தம்மாள்.

இதைக் கேட்டதும், கிழவி சரேலென்று கந்தல் தாவணியைப் பிடுங்கிக்கொண்டு மறைந்து விட்டாள். உடனே முத்தம்மாள் கையில் மிக அழகான சந்திர காந்தித் தாவணி ஒன்று எங்கேயிருந்தோ வந்து விழுந்தது.

"அசட்டுப் பெண்ணே! இது குளிர் தாங்குமா? இதைக் கேட்டு வாங்கிக் கொண்டாயே" என்று தாய் கோபித்துக் கொண்டாள்.

"குளிர்ந்தால் பாதகமில்லை. இது ரொம்ப அழகா யிருக்கிறது. நான் இதை உடுத்திக் கொண்டு, ராஜகுமாரி விளையாட்டு ஆடப் போகிறேன்" என்று முத்தம்மாள் கூறினாள்.

அந்தச் சந்திர காந்தித் தாவணியை முத்தம்மாள் ஒரு ஒட்டைப் பெட்டியிலே அடைத்துப் பூட்டினாள். பிறகு, படுக்கப் போனாள். பாதி ராத்திரியிலே அவளுக்குத் தூக்கம் விழித்தது. ஜன்னலிலே நிலாக் காய்ந்துகொண்டிருந்தது. அப்போது அந்தத் தாவ

பின் வருமாறு பாடிக்கொண் டிருந்தது :

சந்திரன் ஒளியில் என்னை அணி
ஜகம் புகழ் அழகினை நீஅடைவாய்
இந்திர ஜாலம் போலே நீ
எழி லுறு அரசிளம் பெண்ணுவாய்

முத்தம்மாள் உடனே பெட்டியைத் திறந்து, அந்தத் தாவணியை எடுத்து உடுத்திக் கொண்டாள். நிஜமாகவே அவள் ஒரு ராஜ குமாரிபோல் மாறிவிட்டாள். ஜன்னலிலே வெள்ளி இறக்கை முளைத்த வெள்ளிக்குதிரை ஒன்று வந்து நின்றது. அதன்மேல் முத்தம்மாள் ஏறி உட்கார்ந்தாள். உடனே அது வாயு வேக மனோவேகமாய்ப் பறந்து, ராஜாவின் அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தது.

அங்கே ஒரு விருந்து நடந்துகொண் டிருந்தது. எல்லாரும் கோலாகலமாய் நாட்டியமாடிக் கொண் டிருந்தார்கள். முத்தம்மாள் கையை ராஜகுமாரன் கோத்துக்கொண்டு, நாட்டிய மாடினன். போது விடியுமட்டும் இதே கேளிக்கை தான். சூரியோதய மாகுமுன், முத்தம்மாள் தன் வெள்ளைக் குதிரையி லேறி, வீட்டுக்கு வந்தாள். சந்திர காந்தித் தாவணியை அவிழ்த்து, பழைய படி பெட்டியில் வைத்தாள்.

பிறகு, நிலாக்காயும் ஒவ்வொரு நாளும் இப்படியே அவள் ராஜா அரண்மனைக்குப் போய் வந்தாள்.

ஒருநாள் ரொம்ப ஆனந்தமாய் நாட்டிய மாடினள். தன்னை மறந்து போனள். போது விடிவது தெரியவில்லை. நிலா மறைந்து, சூரியன் உதித்து விட்டது. சந்திர காந்திக் குதிரையும் ஓடிப்போய் விட்டது. முத்தம்மாளின் கிரீடம், பட்டாடை, ஆபரணம் எல்லாம் மறைந்து விட்டது. பழைய ஏழைப் பெண் ஆக மாறிவிட்டாள். ராஜகுமாரனுக்குக் கோபம் வந்தது. "அடி சூன்யக்காரி! என்னை ஏமாற்றினயா ?" என்று சொல்லி, முத்தம்மாளை ஜெயிலிலே போட்டு விட்டான்.

பாவம்! முத்தம்மாள் ரொம்ப அழுதாள். "என் அம்மாவை எப்போது பார்ப்பேன் !" என்று துக்கப்பட்டாள்.

இப்படியே ஒரு மாசம் போயிற்று. மறுபடியும் பௌர்ணமி வந்தது. இராத்திரி ஜன்னலிலே, 'ஜம்' என்று நிலாக் காய்ந்தது. சந்திர காந்தித் தாவணியும் பாட ஆரம்பித்தது :

இந்த நேரத்தில் என்னை அணி
இருட் சிறை யிதைவிட் டேகிடுவாய்
சுந்தர மும்நற் சுதந்தர மும்
சுகிர்த நலன்களும் பெற்றிடுவாய்

இப்படி அது பாடியது. அப்படியே தாவணியை முத்தம்மாள் உடுத்திக் கொண்டாள்.

ஜன்னலில் வெள்ளைக் குதிரையும் வந்து நின்றது. முத்தம்மாள் அதில் ஏறிக் கொண்டாள். குதிரை ஆகாசத்திலே பறந்து, அவள் வீட்டிலே போய் நின்றது.

முத்தம்மாள், தன் தாயைக் கண்டாள். இருவரும் சந்தோஷ மடைந்தார்கள். இந்தச் சமயம் மறுபடியும் அந்தக் கிழவி வந்தாள். "முத்தம்மா! சந்திர காந்தித் தாவணி போதுமா? அதுவே இன்னும் வேண்டுமா? அதைவிட்டு வேறே ஏதாவது வேண்டுமா? காசிப்பச்சைச் சால்வை யொன்று தரட்டுமா ?" என்று கிழவி கேட்டாள்.

முத்தம்மாள் பெருமூச்சு விட்டாள். "ஜெயிலிலே அடைபடுவதை விட, அதுவே நல்லது ; தாருங்கள்" என்றாள்.

தேவதைக் கிழவி, முத்தம்மாளின் சந்திர காந்தித் தாவணியைத் தொட்டாள். உடனே அது காசிப் பச்சைச் சால்வையாய் மாறிவிட்டது. தேவதையும் மறைந்து விட்டாள்.

அந்தச் சால்வை ரொம்ப அதிர்ஷ்ட முள்ளது. முத்தம்மாள் ஒரு விறகு வெட்டியைக் கலியாணம் செய்துகொண்டு, ரொம்பச் சந்தோஷமாய் வாழ்ந்தாள். பணமும் சுகமும் நிறையக் கிடைத்தன.

ஆனல், அந்தக் கந்தல் தாவணி என்ன ஆயிற்று? அது ரொம்ப நாளைக்கு முன்னே தேவலோகத்துக்குப் போய்விட்டது ; திரும்பி வரவே யில்லை.



# இசைக்கன்னி

**T. சூர்யகுமாரி**

பாடிய

C.A. 1329 { செந்தூர் வேலா / வாழ்வை நம்பாதே



எல்லா ஒடியன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்

**ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்**

மவுண்ட் ரோட், மதருஸ்.



E. S. K. சுவாமி (ஜோதிஷர்)

L. V. S. மணி B.A. *(Hons. Maths.)*

# ஜோதிஷம்

•

கேட்போர் பலரும் திருப்தி அடைந்து வருகின்றனர்

5 கேள்விகளுக்கு பதில் ரூ. 1, பாவஸ்புடத்துடன் ஜாதகம் கணிக்க ரூ. 2, ஒரு வருஷ மாத பலன் ரூ. 2, ஒரு தசை பலன் ரூ. 5. பிறந்த தேதி, ஊர், நேரம் தேவை அல்லது தபால் எழுதும் நேரம் தேவை.

**பிரஹத் ஜோதிஷ நிலையம்,**

**71, அக்கிரஹாரம், புரசவாக்கம், மதருஸ்.**



# அன்பு நிலைய வெளியீடுகள்

சுவாமி சுத்தானந்த பாரதியார் இயற்றியவை

---

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| பைந்தமிழ்ச் சோலை | .... | 0 | 4 | 0 |
| அருட்சுடர் | .... | 0 | 12 | 0 |
| இன்ப மாலை | .... | 0 | 6 | 0 |
| தரும சாதனம் | .... | 0 | 2 | 6 |
| உடலுறுதி | .... | 1 | 0 | 0 |
| பொது நெறி | .... | 0 | 2 | 0 |
| திருக்குற ளின்பம் | .... | 1 | 4 | 0 |
| இன்று மனிதனும் இனிவரும் மனிதனும் | .... | 0 | 6 | 0 |
| வரகவி தாகூர் | .... | 0 | 3 | 0 |
| தியான மாலை | .... | 1 | 0 | 0 |
| புதுமையும் பழமையும் (நாடகம்) | | 0 | 8 | 0 |
| திருநூல் அல்லது தூயவாழ்வு | .... | 1 | 0 | 0 |
| புத்தர் கருணை | .... | 0 | 8 | 0 |
| தமிழுணர்ச்சி | .... | 1 | 0 | 0 |
| யோக சித்தி | .... | 2 | 8 | 0 |
| அரவிந்த யோக தீபிகை | .... | 0 | 8 | 0 |
| மகா கவி காளிதாசன் | .... | 1 | 4 | 0 |
| வசந்த சுந்தரி (நாடகம்) | .... | 0 | 10 | 0 |
| நாடகக் கலை | .... | 0 | 3 | 0 |
| மஹரிஷி தாயுமானர் | .... | 0 | 4 | 0 |
| ஏழை படும் பாடு | .... | 1 | 8 | 0 |
| பக்திப் பரவசம் - பாமலர்-க | .... | 0 | 10 | 0 |
| குழந்தை இன்பம் ,, உ | .... | 0 | 3 | 0 |
| அன்பின் அற்புதம் (நாடகம்) | .... | 0 | 10 | 0 |
| சிலம்புச் செல்வம் | .... | 1 | 12 | 0 |
| இளிச்சவாயன் | .... | 1 | 0 | 0 |
| அன்னை | .... | 0 | 4 | 0 |
| திருமணப் பாட்டு-பாமலர்-ங | .... | 0 | 4 | 0 |
| பேரின்பம் ,, ச | .... | 0 | 4 | 0 |
| சமயசாரம் ,, ரு | .... | 0 | 4 | 0 |
| தாந்தே (திருக்காட்சி) | .... | 1 | 0 | 0 |
| திருமந்திர விளக்கம் | .... | 1 | 0 | 0 |

விவரமான

விலைப்பட்டிக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம். வியாபாரிகட்குத் தக்க கமிஷன் கொடுக்கப்பெறும்

**சக்தி காரியாலயம்**

**46, முத்துமாரி செட்டித் தெரு, சென்னை**

# இந்த இதழில்—

ப. ராமஸ்வாமி (பக்கம் 195)

இவர் 'நவயுகப் பிரசுராலய'த்தின் நிர்வாகி. இன்று இவரைச் சிறந்த நிர்வாகியாகவே நண்பர்கள் அறிந்திருக்கின்றனர். சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்னே சொந்தப் பொறுப்பில், ஆசிரியராகவுமிருந்து, இவர் நடத்திய 'உதய பாரதி' பத்திரிகையின் தனிச் சிறப்பை அநேகர் அறியார். சத்தியாக்ரக இயக்கத்தின் போது, வெளியிலும் சிறை புகுந்த பின் சிறையிலும் இவர் புரிந்த சேவைகளும் பலர் அறியாதவை. சுய விளம்பரம் தெரியாத, அதில் மோகமில்லாத, தம்மை யிழந்து பிறரையெல்லாம் ஒன்றுபடுத்துவதிலே ஆனந்தங்கொண்ட ஒருவர் ஸ்ரீ ப. ராமஸ்வாமி. தமிழ் நாட்டிலே எழுத்தாளரைப் பற்றி எழுதுவோர் யாருமில்லை. அந்தக் குறையை நீக்க வேண்டுமென்பது நமது அவா. அவ் வேலையைத் துவக்கி வைக்க, ஸ்ரீ ப. ராமஸ்வாமியைவிட மிகப் பொருத்தமானவர் வேறு யார் கிடைப்பர்?

அழ. வள்ளியப்பன் (பக்கம் 235)

உற்சாகம் மிக்க இந்தத் தனவணிக இளைஞர் முதன் முதலாக எழுதும் கதை இது. ஆங்கிலக் கட்டுரை யொன்றைத்தான் இப்படித் தமிழ்ப் படுத்தி யிருக்கிறார். ஆயினும், தமிழுக்கே சொந்தமாக்கும் முறையில் அப்படிச் செய்திருக்கிறார். இல்லையா?

'ஆனந்தன்' (பக்கம் 203)

இவரது உண்மைப் பெயரின் கீழே, தமிழர் எண்ணற்ற கட்டுரைகளையும் கதைகளையும் கவிகளையும் நூல்களையும் மொழிபெயர்ப்புகளையும் நாடகங்களையும் நவீனங்களையும் ஆராய்ச்சிகளையும் அறிவுரைகளையும் படித்திருக்கிறார்கள். இந்தப் புனை பெயரின் கீழேயும் சிலவற்றைப் படித்தால் என்ன நஷ்டம்?

டி. எப். ஆர். மதுலிசாஹிப் (பக்கம் 197)

பிரபல தினசரிப் பத்திரிகையான 'தினமணி'யில் ஓர் உதவி ஆசிரியர். தேசிய உணர்ச்சி நிறைந்தவர். உர்தூ மொழியில் நல்ல பிரஞ்ஞை உடையவர். கதைகளும் கட்டுரைகளும் நிறைய மொழிபெயர்த்திருக்கிறார். இங்கே ஷேக்ஸ்பியரின் 'லீயர் மன்னன்' என்ற நாடகக் கதையைச் சிறிது மாற்றி, அழகுபடச் சுருக்கி, சுந்தரக் கர்ண பரம்பரைக் கதைக் களஞ்சியத்திலே சேர்த்திருக்கிறார்.

மஞ்சேரி எஸ். ஈச்வரன் (பக்கம் 233)

ஆங்கிலத்திலே உணர்ச்சிக் களஞ்சியமான அற்புதச் சிறு கதைகளும் கவிகளும் எழுதியுள்ள மஞ்சேரி எஸ். ஈச்வரன் நமக்கென்று முதன் முதலாக வேறு துறையில் புனைந்துள்ள பேனாச் சித்திரம் இது. அவரது ஹாஸ்யத்திலே ஒரு சோகமிருப்பதை கண்டு ஆச்சரியப் படாதீர்கள்; அவரது சோகத்திலே ஒரு ஹாஸ்யமு மிருக்கும். ஹாஸ்யத்தையும் சோகத்தையும் தலையும் பூவுமாய்ப் படைத்த பொற்காசு அவர்—வேதாந்தி.

# சக்தி மலர்கள்

[சக்தி மலர்ப் பதிப்பு நூல்கள் தமிழ்மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் ஏற்ற உயரிய நற்கருத்துக்களை எளிய நடையில் வெளியிட எழுந்தனவாகும்.]

சக்தி மலர் 1

ருஷிய ஞானி லியோ டால்ஸ்டாய்

எழுதிய

## இனி நாம் செய்யவேண்டுவது யாது?

சுத்தமான தமிழ் மொழிபெயர்ப்பு. ஒவ்வொரு தமிழனும் படித்துப் பயன்பெறத் தக்க அனுபவக் களஞ்சியம்.

விலை அணு 12 தபாற் செலவு வேறு

●

சக்தி மலர் 2

## உலகம் சுற்றும் தமிழன்

ஸ்ரீ ஏ. கே. செட்டியார் எழுதியது.

பல நாட்டின் பழக்க வழக்கங்களையும், புதுமைகளையும் எளிய இனிய தமிழில் சித்தரித்துக் காட்டும் பல கட்டுரைகள் கொண்ட நூல் இது ஒன்றே நந்தமிழ் மொழியில் வந்துளது.

விலை அணு 12 தபாற் செலவு வேறு

●

சக்தி மலர் 3

## நிர்மலகுமாரி

இந்து தேச சரித்திரத்தை யொட்டி யெழுந்த ஒப்பற்ற இனிய நவீனம். எளிய நடையுடன் காட்டிப் படிப்பதற்குகந்த இனிமையான கதை. காழி. சிவ. கண்ணுசாமி எழுதியது.

விலை அணு 12 தபாற் செலவு வேறு

அச்சில்!

ருஷிய மகான் டால்ஸ்டாய் எழுதிய

## போரும் காதலும் I

எனும் அர்புத நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பை, பொ. திருகூடசுந்தரம் பிள்ளை தமிழ் மக்கட்கு அளித்துள்ளார்.

விரைவில் எதிர்பாருங்கள்!

சக்தி காரியாலயம், ஜி. டி. சென்னை



சங்கீத உலகின் சிறந்த செல்வம்!
உங்களுக்கு வேண்டிய உயர்ந்த பொக்கிஷம்!!

தற்காலம் வித்வான்களும் வித்யார்த்திகளும் புதிய புதிய இனிய தமிழ்ப் பாட்டுகள் வேண்டுமென்று மிக ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். அதற்கு இதோ, மிகப் புகழ்பெற்ற,

ஸங்கீத ஸாஹித்ய வித்வான்

மாயூரம் ஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகள்

இயற்றிய

## முருகன் மதுர கீர்த்தனை

உங்கள் மனதைக் கவரும்

மிக இனிய புதிய தமிழ்ப் பாட்டுகள்

(ஸ்வரத்துடன்)

இதன் உயர்ந்த பெருமையைப் பற்றி ஸ்ரீமான்கள் மகாமகோபாத்யாய, டாக்டர் உ. வே. ஸ்வாமிநாத ஐயர்; திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர்; முசிரி சுப்ரமணிய ஐயர்; ப்ரொபஸர் பி. ஸாம்பமூர்த்தி ஐயர்; கானவிசாரத எம். எஸ். ராமஸ்வாமி ஐயர்; ப. சம்பந்த முதலியார் முதலிய பிரமுகர்கள் மிகவும் சிறப்பாக எழுதிச் சிபார்சு செய்கிறார்களென்றால், வேறென்ன வேண்டும்? கண்ணைக் கவரும் காலிகோ பைண்டு; 260 பக்கங்கள் கொண்டது.

விலை ரூ. 2-4-0. (தபாற் செலவு தனி)

ஆசிரியர்: 135, தம்புசெட்டித் தெரு, ஜி. டி. சென்னை.



## கல்வி

புதிய தமிழுலகைத் தோற்றுவிக்கப் பர்மாவிலிருந்து வெளிவரும் மாதச் சஞ்சிகை

பர்மாவுக்கு வருடச் சந்தா ரூ. 1-0-0

இதர நாடுகளுக்கு ரூ. 1-8-0

"கல்வி" நிலயம்,
251, மங்கமாரி தெரு,
இரங்கூன்.



## TWO MARVELLOUS BOOKS
BY
HARINDRANATH CHATTOPADHYAYA

**FIVE PLAYS**: A delightful collection of the poet's new plays—recent composition. The book is illustrated by the poet himself. Reveals the poet in the double aspect of Dramatist & Painter. **Rs. 1-8-0**

**STRANGE JOURNEY**: A selection from the poet's unpublished works. A regular feast for lovers of Literature. **Rs. 3-0-0**

SHAKTI KARYALAYAM,
G. T., MADRAS.

## "சக்தி ஏஜண்டுகள்"

கீழ்க் கண்டவர்களிடம் சக்தி பத்திரிகையும் எமது பிரசுர புத்தகங்களும் கிடைக்கும் :—

1. அருணாசலம்,
   M. A. R. Street தேவகோட்டை.
2. அன்பு நிலயம்,
   இராமச்சந்திரபுரம் (Pudukotah State)
3. VE. RM. P. பழனியப்ப செட்டியார்
   கண்டனூர் (Ramnad Dt.)
4. பாரதி பிக்சர் பாலெஸ்
   கல்லுக்கட்டி, காரைக்குடி.
5. நேரு பிக்சர் பாலெஸ்,
   விஸ்வநாதபுரம், இராமச்சந்திரபுரம்
   (Pudukotah State)
6. ரா. பாலசுப்பிரமணியம்
   திருவள்ளுவர் கல்விக் கழகம்,
   ராயவரம் (Pudukotah State)
7. R. ராதாகிருஷ்ணன், மதுரை
8. K. ஸ்ரீநிவாசன், நியூஸ் ஏஜண்ட்,
   வேலூர்.
9. T. R. நடராஜன், ராணிப்பேட்டை
10. C. K. கணேசன், நாகர்கோவில்
11. ஹிக்கின்பாதம்ஸ் ரயில்வே,
    புக்-ஸ்டால்கள்
12. சுதேசமித்திரன் புக்-ஸ்டால்கள்
13. அற்புதசாமி, கீழ ராஜ வீதி,
    புதுக்கோட்டை.
14. M. துரைசாமி முதலியார்
    1-1, மலையப்பெருமாள் தெரு,
    சென்னை.


THREE COLOUR
Process Blocks



M.C. APPASAWMY CHETTY & Co.
COLOUR HALFTONE & LINE
BLOCK MAKERS
14, Jone's St., Mannady,
MADRAS


## முக்கிய அறிவிப்பு

கீழ்க்கண்ட ஏஜண்டுகளை நீக்கப்பட்டிருப்பதால், அவர்களிடம், நமது பத்திரிகை, காரியாலயம் சம்பந்தமான எந்தத் தொகைகளையும் செலுத்தக் கூடாதென அறிவிக்கிறோம்:

விபரம்:

T. N. கிருஷ்ணாராவ்,
அரபிக்குளத் தெரு, தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சினாப்பள்ளி.

P. L. முத்தையா, தேவகோட்டை.

C. N. நாராயணன், நியூஸ் ஏஜண்ட்,
கோயம்புத்தூர்.

V. இராமச்சந்திர ஐயர்,
நாகர்கோயில்.

N. G. மகம்மது உபயதுல்லா,
திருச்சினாப்பள்ளி.

E. S. ரெட்டியார்,
புதுவை (Fr. India)

ராஜாராம் கம்பெனி,
மூரட்டுவா, (சிலோன்)

V. M. செல்லையா,
திருகோணமலை, (சிலோன்)

A. சந்தனம் பிள்ளை,

J. அப்துல் அஜீஸ்கான்,
கொடுமுடி.

சென்னை
15-11-40.

மானேஜர்,
**சக்தி காரியாலயம்.**

### ஏஜண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் நமது சக்தி பத்திரிகையையும் புத்தகங்களையும் விற்பனை செய்ய டெப்பாசிட்டு கட்டக்கூடிய, நாணயமும், செல்வாக்குமுள்ள ஏஜண்டுகள் உடனே தேவை:

| | |
|---|---|
| காஞ்சீபுரம் | விழுப்புரம் |
| திருச்சி | கொடுமுடி |
| கோயமுத்தூர் | சேலம் |
| திருநெல்வேலி | திண்டுக்கல் |
| செங்கற்பட்டு | அனுராதபுரம் (சிலோன்) |
| திருவனந்தபுரம் | திரிகோணமலை " |

விவரங்கட்கு எழுதவும்:

சென்னை
15-11-40.

**சக்தி காரியாலயம்,**
46, முத்துமாரி செட்டித் தெரு,
சென்னை.

134180

ஸைன்

ஆப்டோன்

# பிளாக்குகள்

உங்களுக்குத் தேவையான
எவ்விதமான பிளாக்குகளும்
நவீன முறைகளில்
துரிதமாகவும் சகாயமாக
வும் செய்து தரப்பெறும்

★

விவரங்களுக்கு எழுதவும்

மானேஜர்,

"ஸண்டே டைம்ஸ்" பிராஸஸ் ஸ்டுடியோ

எர்ரபாலு செட்டி தெரு :: சென்னை

PHONE: 2678




அவரது வாழ்க்கையின் சம்பவங்கள்

12 ரீல் நீளமுள்ள தமிழ் சினிமாப்படம்

டாக்குமெண்டரி பிலிம்ஸ் தயாரிப்பு

Produced & Distributed by:

THE DOCUMENTARY FILMS LTD.

77, LLOYDS ROAD :: ROYAPETTAH MADRAS

Gram: 'MONTAGE' Phone: 86155

Printed at Shakti Press Ltd., (Shanti Press), 52, Armenian Street, Madras. *Published by*: A. Krishnamurthi, *Managing Editor*: V. Govindan.